365

10

புதிய

# தமிழ் கற்பிக்கும் முறை

(For T. S. L. C.—Basic & Non-Basic)

13 DEC 1962
MADRAS

365
4. 62

ஆசிரியர் :

**வித்துவான் து. தயாளசாமி**

தலைமைத் தமிழாசிரியர்

பெரியார் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, திருச்சி.

★

வெளியிடுவோர் :

**...ழந்தி நிலையம்**

... ஆபீஸ் ரோடு, புத்தூர், திருச்சி-1.

3 (P31)
N62
59029

# புதிய
# தமிழ் கற்பிக்கும் முறை

**(For T. S. L. C.—Basic & Non-Basic)**

ஆசிரியர் :

**வித்துவான் து. தயாளசாமி**

தலைமைத் தமிழாசிரியர்

பெரியார் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, திருச்சி.

வெளியிடுவோர் :

**புகழேந்தி நிலையம்**

22-A2, முனிசிபல் ஆபீஸ் ரோடு, புத்தூர், திருச்சி-1.

பதிப்புரிமை] 1962 [விலை : ரூ. 2-00

59029

# முகவுரை

உயிரினும் மேலான நம் செந்தமிழ் புத்துணர்ச்சி பெற்றும் புதுமணங் கமழும் இந்நாளில், தமிழ் கற்பித்தலில் காலத்துக் கேற்ற புதிய முறைகளைக் கையாளுதல் இன்றியமையாததாகும். யான் பதினொராண்டுகள் பற்பல பள்ளிகளிலும், ஏழாண்டுகள் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியிலும் தமிழ் கற்பிக்கும் பணியில் ஈடு பட்டிருக்கும்போது எய்திய அநுபவத்தின் பயனாகத் தோன்றி யதே இச்சிறு நூல். பயிற்சிப் பள்ளிகளில் (Basic & Non-Basic) பயிலும் மாணாக்கர் அரசியலாரின் பொதுத் தேர்விலும், (T. S. L. C. Examination) பின் ஆசிரியர்களாகிப் பணிபுரியும் போதும் தமிழ் கற்பித்தல் சம்பந்தமாய் எவ்வித இடர்ப்பாடும் எய்தலாகாதென்ற எண்ணமே என்னை இந்நூல் எழுதும் முயற்சியில் ஈடுபடச் செய்தது.

இந்நூலுக்கு அணிசெய்யும் முறையில் என்பால் பேரன்பு கொண்டு என் முயற்சியைப் பாராட்டி அணிந்துரை வழங்கி யருளிய எனது பள்ளித் தலைமையாசிரியர் உயர்திரு. ஏ. சு. சுவாமிநாதன் M. A., L. T., அவர்கட்கும், இந்நூலை எழுதும்போது என்னை இடையறாது ஊக்குவித்த பெருந்தகையாளர் வித்து வான் திரு. கு. விசுவநாதம் (திருச்சி வானொலி நிலைய ஒலி பரப்புப் பொறுப்பாளர்) அவர்கட்கும், எனது பள்ளி ஆங்கிலம், ஊளநூல் ஆசிரியரும், எனது ஆருயிர் நண்பருமாகிய திரு. கோ. கலியராசன் B.A., B.ED., அவர்கட்கும், ஓவியங்கள் வரைந்த எனது பள்ளி ஓவிய ஆசிரியர் திரு. சுவாமி. கங்காதரன் அவர் கட்கும், இதனை நன்முறையில் அச்சிட்டு உதவிய இம்பீரியல் அச்சக உரிமையாளர் திரு மா. சற்குணம் அவர்கட்கும், முழுப் பொறுப்புடன் பிழைதிருத்தி அழகிய முறையில் உருவாக்க அயரா உழைப்பை நல்கிய அச்சக நிர்வாகி திரு. அ. அரங்கராசன் அவர்கட்கும் என் உளந்தோய்ந்த நன்றி உரித்தாகும்.

எனது முயற்சிக்கு ஊக்கமும் ஆக்கமும் தரும் வகையில் பள்ளி நிர்வாகிகளும், தலைமையாசிரியர்களும், ஆசிரியப் பெருமக் களும் பேராதரவு தரவேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டுகிறேன்.

திருச்சிராப்பள்ளி,
22—10—62.

து. தயாளசாமி.

T: 3 (P31) N62

# அணிந்துரை

**உயர்திரு. எ.ச. சுவாமிநாதன் M. A., L. T.,**
*பன்னாள் பள்ளி ஆய்வாளர், முன்னாள் மாவட்டக் கல்வித்*
*துணை அதிகாரி, இன்னாள் தலைமையாசிரியர்,*
பெரியார் ஆசிரியப் பயிற்சிப்பள்ளி, திருச்சி-1.

மனிதன் அறிவாற்றலால் கண்டுபிடித்த கருவிகளில் மொழி தலையாயது. மக்கள் உலகின் பல இடங்களிலும் தங்கள் வாழ்க்கைக்கும் தேவைக்கும் சமுதாயத்திற்கும் குறிக்கோள்களுக்கும் உகந்த மொழிகளை வளர்க்கலாயினர். ஆதலால் ஒரு மொழிக்கும் அதைப் பயன்படுத்துவோருக்கும் தனிச்சிறப்பு வாய்ந்த தொடர் பேற்படுகிறது. அதனாலேயே அதை அவர்களது தாய்மொழி என்கிறோம்.

நாம் எல்லோரும் நம் தாய்மொழியைப் பேச்சிலும் சிலர் எழுத்திலும் பயன்படுத்திக் கற்றுக்கொள்கிறோம். தாய்மொழியை ஒருவாறு பயன்படுத்திக் கற்றாலும் நாம் அதைத் திறமையோடும் ஆற்றலோடும் பயன்படுத்துவதாகக் கருதமுடியாது.

மொழி ஒரு கருவி; அக்கருவியைச் சிறந்த முறையில் பயன்படுத்தக்கூடிய திறனையும் ஆற்றலையும் நம் சிறுவர்க்குக் கற்பிக்கவேண்டியது நம்முடைய கடமை. இக்கடமை நம் ஆரம்பப்பள்ளி ஆசிரியரைச் சாரும்.

இந்த மகத்தான சேவைக்கு உறுதுணையாக இந்நூல் அமைந்துள்ளது என்பதில் ஐயமில்லை. வித்துவான் திரு. து. தயாளசாமி அவர்கள் 18 ஆண்டுகள் பல்வேறு பள்ளிகளில் அநுபவம் பெற்றவராதலால் தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியருக்கு வழிகாட்டத் தகுதிவாய்ந்தவர். இந்நூல் அரசியலார் பாடதிட்டத்தைத் தழுவி (for Basic & Non-Basic) எழுதப்பட்டிருப்பதால் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வெகுவாகப் பயன்படுமென்று உறுதியாக நம்புகிறேன். தேர்வுக்குச் செல்வோரும் இந்நூலைப் படித்துப் பயனடைவார்களாக.

திருச்சி,
22—10—62.

**எ. ச. சுவாமிநாதன்.**

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முதற்பிரிவு—மொழியும் மனிதனும் | 9 |
| 2. | இரண்டாம் பிரிவு—கற்பிக்கும் முறைகள் | 25 |
| 3. | மூன்றும் பிரிவு—வாய்மொழிப் பயிற்சி | 50 |
| 4. | நான்காம் பிரிவு—படிப்பு | 69 |
| 5. | ஐந்தாம் பிரிவு—செய்யுள் | 83 |
| 6. | ஆறும் பிரிவு—உரைநடை | 93 |
| 7. | ஏழாம் பிரிவு—இலக்கணம் | 104 |
| 8. | எட்டாம் பிரிவு—கையெழுத்து | 112 |
| 9. | ஒன்பதாம் பிரிவு—கட்டுரை | 122 |

## இந்நூல் எழுதுவதற்குப் பயன்பட்ட நூல்கள்

1. Report on the Reorganization of Secondary Education-Madras.
2. Report on the Secondary Education Commission (India)
3. Caldwell : Comparative Grammar of the Dravidian Languages.
4. Ryburn : Suggestions for Teaching of Mother Tongue in India.
5. தமிழ் கற்பிக்கும் முறை
   —திரு. ச. ஆறுமுக முதலியார் M. A., B. O. L., L. T.
6. தமிழ் பயிற்றும் முறை
   —வித்துவான் திரு. N. சுப்பு ரெட்டியார் M.A., B.SC., L.T.
7. தமிழ் கற்பிக்கும் முறை
   —வித்துவான் திரு. S. சோமசுந்தரம் M. A., L. T.
8. தமிழ்மொழி போதனு முறைகள்
   —திருமதி S. பாலாம்பாள் B. A., L. T.
9. மலரும் உள்ளம்
   —குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா.

# Scheme and Syllabus for Basic Training Schools

## (Junior and Senior Grades)

## II SPECIAL METHODS

### I. TEACHING REGIONAL LANGUAGE.

**A. Aims of language learning :**

(1) Means of formation of thoughts and ideas and their expression.

(2) Need in Cultural Community Life.

(3) Source of joy and appreciation.

**B. Methods of Teaching :**

**Speech :** Training in oral expression. Early work to be oral, based on the experiences of children derived from their activities and natural and social environment. The following activities will be helpful in speech training: telling news and stories; assembly speaking; describing pictures, action songs, dramatization, etc. (indistinct articulation, clipped ending etc. should be remedied).

**Reading :**

(1) Oral reading: Method of checking defects in word recognition and analysing defects. Making others understand.

(2) Silent reading: for comprehension, speed and enjoyment.

*Note*: Reading should arise out of the needs of school activities, presenting reports, news etc.

Emphasis may be laid on the use of reading sheets, flash cards, dictionaries, referring to contents and index and on the adequate use of libraries.

**Writing :**

(1) Writing to follow reading.

(2) Freehand Drawing before beginning writing.

(3) Proportion, beauty, spacing, speed and legibility.

*Note*: Situations that help writing: various activities in the daily programme; daily things seen and done; writing actual letters.

**Composition**: Expression of one's ideas in an organised, clear and persuasive manner. Oral composition.

**Types**: Writing stories, plays, reports, letters, petitions, dialogues, discussions, diaries, articles to magazines etc.

**Language Technique**: Sentence construction, punctuation, paragraphing and chaptering.

**Grammar**: Only a means to an end. Inductive and deductive teaching of Grammar; advantages and disadvantages.

**Appreciation**: Reading Masterpieces and select literatures in Prose, Poetry and Drama.

Methods of teaching Poetry-avoidance of piecemeal and steriotyped treatment.

## Non-Basic Training Schools

### (Secondary & Elementary Grades)

### SECTION B

### TEACHING METHOD

1. The place of mother tongue in education.

2. The employment of play-way, the project method, dramatization and the individual methods.

3. The receptive and expressional sides of language learning.

4. Training in correct speech - Oral work:

   (1) In standards I & II, simple conversation on topics of interests, such as the home relatives, friends, festivals etc.

   (2) In the higher standards speaking in correct language on current topics of interest.

**Stories**: Choice of the story to suit the stage of development of children. How to tell a story. Narration of the story by the children and dramatization of the same. Dialogues.

The use of pictures, stories, narrative poems and songs to develop oral expression.

Defects of speech to be remedied - indistinct articulation, incorrect pronounciation, clipped endings and hurried delivery.

5. **Reading:**

**(1)** Formation of the reading habit; various methods. The alphabetic; look and say, word and sentence methods. Merits and demerits. Preparation of

**(i)** reading charts,

**(ii)** individual work appliances, and

**(iii)** list of useful words of frequent occurrences.

**Reading Ability:** Reading aloud. Reading with comprehension, clearness and fluency.

**(2) Silent Reading:** Its importance. Increase of comprehension, and speed. Attention to new words, thought, unit and time limit. Divices to lengthen eye-span, to increase pupil's knowledge of what is to be read, to overcome vocalization and to create a motive. Ability-test in silent reading. Preparation of materials for silent reading. Individual work sheets, short story books. Advertisements, newspapers and collection of children's pages from magazines.

**Purpose of Reading:** Information, enjoyment, inspiration and improvement of language.

**(3) Poetry:**

**(i)** Nursery rhymes, lullabies, action songs, simple ballads and riddles.

**(ii)** Simple poems, narrative and descriptive.

**(iii)** Reading of poetry-singing of verses, a characteristic.

**(iv)** Method of teaching poetry. Presentation of the poem as a whole. The direct appeal of the poem. Avoidance of piecemeal treatment by too much of explanation and grammar. Training in appreciation and enjoyment of the rhythm. Selection of passages for memorization.

(4) Prose - Choice of suitable matter. The need for humour - Attractive style. Suitable illustrations - good getup and print.

(5) **Reading Materials:**

(i) Simple and familiar topics, dialogues, and playlets.

(ii) Narrative, imaginative, biographical and descriptive literature.

(iii) Book for recreative reading - magazines and newspapers.

6. **Grammar:** Applied Grammar. Inductive teaching through texts and the subsequent deductive applications. Correlation between the grammatical terminology of the mother tongues and of English.

7. **Writing:**

(1) **General Consideration:** (i) The readiness to write. Writing to follow reading.

(ii) idea of proportion and beauty in writing.

(iii) speed and legibility in writing.

(iv) transcription.

(2) **Composition:** Written composition to follow oral composition - need for self expression - conversation, dialogue, speeches on familiar topics of pupils' choice, such as, experience of a rainy day, visit to museum, circus etc.

Gradual development of different types of free composition, narrative, imaginative, descriptive and argumentative. Sentence structure, paragraphing, spelling, punctuation and handwriting. The characteristic phrases of the mother tongue and their use.

(3) Letter writing - form and style of writing to vary according to subject matter and addressee.

(4) Creative expression. Story writing, imaginative experiences - writing playlets (one or two acts).

(5) Correction of composition. Common mistakes and their avoidance.

# புதிய
# தமிழ் கற்பிக்கும் முறை

## முதற் பிரிவு - மொழியும் மனிதனும்

### 1. வாழ்க்கையில் மொழிக்குரிய இடம்

"நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்குங் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே"

—கவிமணி

இயற்கையின் படைப்பில் எண்ணற்ற உயிரினங்கள் இயங்கினாலும், மனித இனத்தைப்போல் மாண்புற்றொளிபெற இயலவில்லை. ஓரறிவுடைய புல், பூண்டு, மரம் - ஈரறிவுடைய புழு, நத்தை, இப்பி - மூவறிவுடைய கறையான், எறும்பு, அட்டை - நான்கறிவுடைய நண்டு, வண்டு - ஐந்தறிவுடைய பாம்பு, பறவை, விலங்குகள் - ஆறறிவுடைய மனிதர் ஆகிய இத்தனை உயிரிகளும் இந்நிலவுலகின்கண் தோன்றி இருப்பினும், மனிதனை விடப் பருமனிற் பெரிய யானையையும், வலிமையில் மிகுந்த புலியையும் ஆட்டிப் படைக்கும் ஆற்றல் மனிதன் ஒருவனுக்குத் தான் உண்டு.

மேற்கூறிய உயிரினங்களில் மனிதனைத் தவிர மற்றவை யனைத்தும் என்று தோன்றினவோ அன்றுமுதல் இன்றுவரை எவ்வித மாற்றமும் பெறவில்லை. பசி, வேட்கை, இனவிருத்தி, பாதுகாப்பு அத்துடன் நின்றுவிட்டன. மனித இனம் அவ்வாறு நிற்காமல் தன் அறிவின் துணையொடு ஏனைய உயிர்களையும் அடக்கியாளும் சக்தியையும் எய்தி, இயற்கையையும் செயற்கை

யாய் மாற்றியமைக்கும் திறனையும் பெற்று உயர்ந்துகொண்டே வருகிறது.

மனிதன் தான் நினைக்கிறான், நினைத்ததைப் பிறரிடம் நிகழ்ச்சியாய் எடுத்தியம்புகிறான். உணர்கிறான், உணர்ந்ததை உரியவர் உணர உரைக்கிறான். மகிழ்கிறான், பிறரையும் மகிழச் செய்கிறான். கவலைப்படுகிறான், காண்பவரிடத்துக் கூறி கவலையைத் தீர்க்கும் காரணத்தைக் காண்கிறான். இவ்வாறு உள்ளத்திலுள்ள உணர்வுகளையெல்லாம், உலகறியச் செய்வதற்கு உறுதுணையாய் நிற்பதுதான் மொழியாகும் (Language is a means of expression of thoughts) என்று அறிஞர் கூறுவர்.

மனிதனைத் தவிர மற்றுமுள்ள மாநிலத்து உயிர்களுள் ஊர்வன, பறப்பன, நடப்பன அனைத்துமே கத்துதல், குரைத்தல், கூவுதல், உறுமுதல், கர்ச்சித்தல், பிளிருதல், அகவுதல் போன்ற வேறு பல ஒலிகளின் மூலம் தம்முடைய எண்ணங்களைத் தம் இனங்களுக்கு வெளிப்படுத்துகின்றனவெனினும், அவ்வெண்ணங்களை உருவாக்கி அனைத்தும் அறியுமாறு செய்யும் மொழியாகிய வழியை அவைகள் அறியவில்லை. பசி, வேட்கையைப் பூர்த்திசெய்துகொள்ளவே அவை பயன்படுகின்றன.

ஆறறிவுடைய மக்கள் தான் தங்கள் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவித்தும், பிறர் நினைந்துரைக்கும் கருத்துக்களைத் தாம் அறிந்துகொள்ளவும் மொழியைத் தோற்றுவித்தனர். உலகில் மனிதன் தோன்றிய காலந்தொட்டே மொழியும் வழங்கி வருவதாய்க் கூறமுடியாது. ஆதிகால மக்களும் விலங்குகளைப் போலவே முகக் குறிகளினாலும், ஒலிக் குறிகளினாலும், உடலுறுப்புக்களின் குறிகளினாலும் தங்கள் கருத்துக்களைப் பிறருக்கு அறிவித்திருக்கலாம். தனித்தனியாய் விலங்குகளோடு அலைந்து திரிந்த மனிதர், அவைகளோடு போராடிப் போராடிக் காலப் போக்கில் ஒன்றுகூடி வாழத் தலைப்பட்ட பிறகே தங்கள் உறவை நீடிக்கவேண்டிய நிலையில் மொழியைக் கண்டுபிடித்திருக்க வேண்டும். மனிதர் நீண்டகால முயற்சியினாலும், அறிவின்

திறத்திஞலும் கண்டுபிடித்துள்ள முக்கிய வாழ்க்கைச் சாதனங்களுள் மொழி முதன்மையானதாகும்.

மனிதரை விலங்குகளினின்று வேறுபடுத்தும் ஓர் அறிகுறியாகவும், அவர்களது நாகரிக மேன்மைக்கும், அறிவு வளர்ச்சிக்கும், பல்கலைப் பயிற்சிக்கும், பரம்பொருளை வழுத்துதற்கும், பண்பாட்டை அறிந்து அறநெறியில் ஒழுகுதற்கும், இன்றைய வாழ்க்கையை நுகர்ந்து இன்புறுதற்கும், என்றும் இன்னருங் கலைகளைக் கண்டுணர்ந்து, எழில் பெறுதற்கும் மொழியே இன்றியமையாததாகும்.

பஞ்சினும் மென்மையான நெஞ்சமெனும் நிலத்தில் தோன்றி, நினைவெனுந் தருவிலிருந்து பழுத்துக் குலுங்கும் கருத்துக்களாகிய கனிகளைத்தான் கார்சூழ் வையம் கண்டுகளிக்கிறது; உண்டு மகிழ்கிறது. அந்நெஞ்சத்தின் வளத்தைப் பொறுத்தே கருத்துக்களாகிய கனிகளின் வளமையும், செழுமையும், இனிமையும் அமையும். நெஞ்சமெனும் நிலத்திற்கு சிந்தனை எனும் நீர்வளமின்றேல் மொழியாகத் திகழும் கனிகள் கருகிப் போகும். அதனுல்தான் சிந்தனையின்றேல் மொழியில்லை; மொழியின்றேல் சிந்தனை இல்லை; இவ்விரண்டுமின்றேல் செயலுங் கல்வியுமில்லை எனலாம். ஆகையால் சிந்தனையை வளர்ப்பதும் மொழியேயாகும்.

நம் மனத்திலெழும் கருத்துக்கள் வெளிப்படுங்கால் மாற்றுருவங்கொண்டு மொழி எனும் பெயர்பெற்றுப் பிறருடைய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தூண்டி, கேட்போர் உள்ளத்தையும் அடிமையாக்குவதால் மொழிக்கு உயிருண்டு என்கிறேம். சொற்களின் தொகுதியே மொழியாகும்; அச்சொற்களில் சில இன்சொற்கள்; சில வன்சொற்கள். இவை இரண்டுமே ஒருவரின் நாவிஞல் வெளிப்படும்போது கேட்பவர் தம் உள்ளக்கிளர்ச்சிகளைத் தூண்டிவிடும். இதனுல்தான் இன்சொல்லின் சிறப்பினைக் கூறும்போது வள்ளுவர்,

"கேட்டார் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்"

என்றும், தீய சொல்லினல் விளேயும் தீமையைக் கூறும்போது,

"தீயினற் சுட்டபுண் உள்ளாறும் ஆருதே
நாவினற் சுட்ட வடு"

என்றும் கூறினர். பேசப்படும் சொல்லுக்கும் அது குறிக்கும் பொருளுக்கும், பேசுவோர்க்கும் அதைக் கேட்போர்க்கும் நேரான தொடர்பையும் மொழி ஏற்படுத்திவிடுவதையும் நாம் அறிகின்ருேம்.

வாழ்க்கையில் மனித இனம் தொகுதியாகத் தம் தம் கருத்துக்களே வெளியிடுவதற்கும், ஏனேயோரின் கருத்துக்களே ஏற்று உய்த்துணர்வதற்கும் மொழி இன்றியமையாதது என்னும் உயரிய உண்மையை அறிந்தோம். அவ்வாறின்றி ஊமையர் வாழ்வைப்போல் குறிகளாலும், படங்களாலும், பிறவற்ருலும் கருத்துக்களே வெளியிடலாமெனினும், அது பக்கத்திலிருப்பவரிடத்தேதான் இயலும். அத்துடன் அவற்றின் பொருளே வேறுவிதமாகவும் கொள்ள இடமிருப்பதோடு தெளிவாகவும் அறிய இயலாது. அதனுல்தான், "ஊமையன் சொல் ஊமையன் தாய்க்குத்தான் தெரியும்" என்றும், "செவிடி! செம்பெடுத்தாடி' என்ருல், 'என் அப்பா கும்பகோணம் போயிருக்கார்' என்பாள்" என்னும் பழமொழிகள் பாமர மக்களிடையே வழங்கிவருதலேக் காணலாம். மேற்குறிப்பிட்ட கருத்துக்களிலிருந்தே மனித சமுதாயத்தின் உலக வாழ்விற்கே மொழி மிக்க இன்றியமையாதது என்பது தெற்றென விளங்குகின்றது அல்லவா?

## 2. தாய்மொழி

"கனியிடை ஏறிய சுளேயும்—முற்றற்
கழையிடை ஏறிய சாறும்,
புனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்,
நனிபசு பொழியும் பாலும்—தென்னே
நல்கிய குளிரின நீரும்,

# 13

**இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"**

*—கவிஞர் பாரதிதாசனுர்.*

இவ்வுலகின்கண் எண்ணற்ற மொழிகள் இயங்கிவரினும், ஒருவர் பிறந்தது முதல் இறக்கும்வரை, தாயின் மடியிலிருந்து சாவின் பிடியில் சிக்கும்வரை வாழ்க்கையில் தொடர்புகொண்டு பேசிவரும் மொழியே தாய்மொழி எனலாம். ஒரு குழந்தை தன் தாயின் கருவிலிருக்கும்பொழுதே தாயின் பண்புகள், உடல் அமைப்பு, எண்ணங்கள் முதலியவற்றைப் பெறுகின்றது என் பதை அனைவரும் அறிவர். குழந்தை பிறந்ததுமுதல் தன் தாயின் முகம், பேச்சு இவைகளைப் பார்த்தும் கேட்டும் வளர்ந்து வருவதால், தாய் பேசும் மொழியையும் தானுகவே கற்றுக் கொள்ளும் திறன் பெறுகிறது. பிறந்த குழந்தையை அதன் தாய் தன் மடிமீதும், தொட்டிலிலுமிட்டு, "தாலே... தாலேலோ ...தாலே... தாலேலோ... கண்ணே!... கண்ணுறங்காய்... தாலே தாலேலோ...ராரே...ராரேரோ..." என்று தாலாட்டுப் பாடும் போது, அதன் கருத்துணராதிருப்பினும் அக்குழந்தை அவள் முகத்தைப் பார்த்தும், குரலின் இனிய இசையைக் கேட்டும் சிரித்து மகிழ்ந்து தூங்குகிறது. அச்சேயை மடிமீதிருத்திப் பாராட்டிச் சீராட்டிப் பாலூட்டிக் கொண்டிருக்கும்போதும் தன் தாயின் குரலை நன்கு கேட்டு மகிழ்ந்து சிரிக்கிறது. தாயல்லாது வேருெருவர் குரல் கேட்டால் அழுகிறது. அப்போதே மொழி யின் அறிவு வளர்ச்சிபெறத் துவங்கிவிட்டது எனலாம்.

இச்சிறப்பு கருதியே நமது தாய்மொழியாம் தமிழ்மொழியை ஆன்ருேர், "பால்வாய்ப் பசுந்தமிழ்" என்றனர். அன்னை வாயி லாகக் கேட்டு மழலை மொழிந்தேறிய பின்னரே தந்தையாலும், அயலாராலும், ஆசிரியராலும் வரிவடிவிற் பயிற்றப்பெற்று மொழி அறிவு விரிவெய்தப்பெறும். இதையுணர்த்தவே, "அம்மையப்பா இனி யாற்றேன்" என்று இராமலிங்க அடிக ளாரும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என்று மணி வாசகப் பெருமானும் மொழிந்தருளினுர்கள். நமது நாட்டில்

இன்று தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, ஆங்கிலம் போன்ற அநேக மொழிகள் பேசப்படினும், நாம் பிறந்தது முதல் நம் தாய் தந்தை, உற்றார் உறவினரிடமும் மற்றுமுள்ளோரிடமும் பேசியும், கேட்டும்வரும் தாய்மொழி தமிழ்மொழியே ஆகும். உலகமெல்லாம் நோக்கினும் ஆங்காங்கே தங்கள் தாய்மொழியின் மூலமே கல்வி கற்பிக்கப்படுகின்றன. நம் நாட்டிலும் தாய்மொழி மூலம் கல்வி புகட்டுவதே சாலச் சிறப்புடைத்தாகும்.

## தமிழுக்கு முதலிடமும் அதைக் கற்பிப்பதன் பொது-சிறப்பு நோக்கங்களும்

**"இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிவெடுத்து
செயற்கைநடந் தீயவிசையில் செய்நடமே வாழியரோ!
பயிற்சிநிலைப் பயிர்களெலாம் பசுமையுற ஒளிவழியே
உயிர்ப்பருளும் திறம்வாய்ந்த உயர்தமிழ்த்தாய் வாழியரோ!"**

—*திரு. வி. க.*

### (அ) பொது நோக்கம்

**தன்னேரிலாத தமிழ்:** மொழியும் நாடும் நம் இரு விழிகளுக்குச் சமம். தாய்நாட்டிற்காகவும், தாய்மொழிக்காகவும் பணிபுரிபவர்களின் புகழே தரணியில் தலைசிறந்து நிற்கிறது. நாம் பேசுவதும் எழுதுவதும் தமிழ்; நாம் போற்றி வளர்ப்பதும் புகழ்வதும் தமிழ்க்கலை; நம் முன்னோர்களாகிய மன்னர்கள் ஆண்டதும், இன்று மக்களாகிய நாம் ஆண்டுவருவதும் "தமிழ் நாடு" அன்றோ! தமிழ்மொழி அமிழ்தினுமினியதென அகிலம் போற்றிப் புகழ்வதோடு, "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்தக் குடி" என்றும், "பதியெழுவறியா பழங்குடி" என்றும் தமிழகத்தின் பெற்றி பரக்கப் பேசப்படுவதைக் காண்கின்றோம். பழமையும் புதுமையும் பொருந்திய நம் தமிழ் மொழி, இன்றும் உலகவழக்கழியாது என்றும் நின்று நிலவுதற்குரிய உயர்தனிச் செம்மொழியாய்த் திகழ்கிறது.

பாந்த நோக்கங்கொண்டு சிறந்த நம் செம்மொழி பிறமொழிகளின் கூட்டுறவால் வரும் தீமைகளை ஒழித்து நன்மை

களை ஏற்றுக்கொண்டு. அயல்மொழிகளிலிருந்து வரும் கருத்துக் களையும் சொற்களையும் தன்னியல்பாக்கும் தனிப் பேராற்றல் பெற்றுள்ளதோடு, எவ்வகைக் கலைகளையும் எடுத்துரைக்கவல்ல சொல்வளமும் பெற்றுயர்ந்துள்ளது.

தரணியில் தன்னேரிலா தமிழகத்தைப் பன்முறை கடல் கொண்டபோதிலும், தமிழிலிருந்து கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளுவம் போன்ற கிளைமொழிகள் பிரிந்தபோதிலும், பண்டைத் தமிழகமாகிய இருநிலவுலகின் பெருநிலப் பரப்பாகிய "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்" தனியரசு செலுத்தி, முடிவுடை மூவேந்தர்களாலும், குறுநில மன்னர்களாலும், பெருநில வள்ளல்களாலும் போற்றி வளர்க்கப் பெற்றோங்கிய செந்தமிழ் அன்னை, பின் அயல் மொழிகளின் கலப்பினாலும், அரசியல் மொழிகளின் அணைப்பினாலும் தாழ் வடைந்தாள்.

அன்று, "பொருப்பிலே பிறந்து, தென்னன் புகழிலே கிடந்து, சங்கத்து இருப்பிலே இருந்து, வைகை ஏட்டிலே தவழ்ந்த" தமிழ்த்தாய் தரணியெங்கும் புகழோங்கித் திகழ்ந் தாள். இடையில் இன்னலுற்றாலும் மீண்டும் மறுமலர்ச்சியுற்று புது மெருகோடு இன்று அரியணையில் அமர்ந்துவிட்டாள், நம் அருந்தமிழ் அன்னை. இனியும் நாம் வாளாயிருத்தல் தகுமோ? நம் மக்கள் எல்லாத் துறைகளிலும் தமிழின் பெருமையை நிலை நாட்டவேண்டுமன்றோ! அதற்குரிய அடிப்படையை இளமை யிலேயே அளிக்கவேண்டுவது மிக்க அவசியமாகும்.

**1. பேச, படிக்க, எழுதத் திறனளித்தல் :**

நாம் நினைக்கும் கருத்துக்களை பிறர் அறியும்படி பிழையின்றி திருத்தமாய்ப் பேசவும், பிறர் எழுதியுள்ளவற்றை தாம் தெளி வுடன் புரிந்துகொண்டு, கேட்போர் உணர்ந்துகொள்ளுமாறு ஒலிகுலைவின்றி தெளிவுடன் படிக்கவும், எழுதவேண்டியதை தெளி வுடனும், பிழையின்றியும் எழுதவுமான மொழியறிவை விளைவிப் பதே தாய்மொழி கற்பிப்பதன் அடிப்படை நோக்கமாகும்.

## 2. சிந்தனையை வளர்த்தல் :

மாணுக்கர்களுக்கு இளமையிலிருந்தே சிந்திக்கும் ஆற்றலை வளர்த்தல் வேண்டும். சிந்தனையற்ற செயல் சிறப்படையாது. அதையுணர்த்தவே, "எண்ணித் துணிக கருமம்" என்ருர் வள்ளுவரும். சிந்திக்கத் தெரிந்த பெரியோர்களுக்கே உலகம் தலைவணங்குகிறது. சிந்தனையும், அதனை வெளியிடும் கருவியாகிய மொழியும் ஒன்றைவிட்டொன்றைப் பிரிக்கமுடியாத தொடர்பு பெற்றிருப்பதால், தாய்மொழியின் மூலமே இச் சிந்தனையை வளர்க்கவேண்டும்.

## 3. எண்ணத்தை வெளியிடும் கருவியாதல் :

அநேகர் எண்ணுவது ஒன்று, மேடைகளில் சொல்வது ஒன்ருக ஆகிப் பின்பு வேதனையடைவதைக் காணலாம். ஒருசிலர் வாழ்க்கையில் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் வேறுபாட்டைக் காண்கிருேம். இம்மூன்றையும் ஒத்தமுறையில் தூய்மையுடன் வெளியிடும் பண்பாடமைந்தோரை உலகம் போற்றுகிறது. இதையே வள்ளுவரும்,

> "எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
> திண்ணிய ராகப் பெறின்"

என்ருர். தனிப்பட்டோர் வாழ்க்கைக்கும், பொது வாழ்க்கையிலீடுபட்டோர்க்கும் இவ்வுணர்வு மிகத்தேவை. இளமையிலிருந்தே தூயவற்றை எண்ணிஎண்ணி, தெளிவாய் வெளியிடும் பயிற்சி அளித்தல் நலம். நுண்ணிய எண்ணங்களும், திண்ணிய மனப்பான்மையும் கைவரப்பெற ஆங்கிலேய மேதை ஜார்ஜ் சாம்சன் கூறிய கருத்துக்களை நினைவுறுத்திக்கொள்ளலாம். "(1) ஒரு பொருளைப்பற்றி எளியமுறையில் தெளிவாகப் பேசவும் (2) ஒரு பொருள்பற்றி ஒருவர் பேசுவதைக் கேட்கவும், கேட்டுப் பொருள் உணரவும், (3) ஒரு பொருளைப்பற்றித் தெளிவான முறையில் படிக்கவும், படித்துப் பொருளுணர்ந்துகொள்ளவும் (4) ஒரு பொருள்பற்றித் தெளிவான எளிய முறையில் எழுதவுமான ஆற்றலையும் பெறவேண்டும்." ஆற்றலற்ற மாணுக்கர்கள்

பள்ளியிலும், பின்னர் உலக வாழ்க்கையிலும் உயர்ந்து சிறப்பெய்த இயலாது. ஒவ்வொருவரும் தங்கள் மனவெழுச்சிகள், வாழ்க்கை நுகர்வுகள், உயரிய உணர்ச்சிகள், உண்மைக் கருத்துக்கள் அனைத்தையும் தாய்மொழியின் மூலம் வெளியிடுவதால் அவர்கள் உள்ளம் உயர்ந்தோங்கி மகிழ்ச்சியுறுவதோடு, ஏனையோரும் அவைகளை நுகர்ந்து பயனடைய பேருதவியாகின்றனர்.

## 4. கற்பிக்கும் வாயில் :

அறிவு பெறும் கலைக்கோயிலினுள் நுழைவதற்கு வாயிலாய் இருப்பது தாய்மொழியேயாகும். இல்லத்திற்கு வாயிலின்றேல் உள்ளே நுழைய இயலாததுபோலவே, தாய்மொழியின்றி தரணியில் பல்கலைத் திறனும் பெற்றுயர இயலாது. மாணாக்கர்கள் பொருள்களையுணர்ந்து அறிவை வளர்த்துக்கொள்வதற்குத் தாய்மொழியே ஏற்ற வாயிலாகும். அயல்மொழிகளின் வாயிலாகக் கற்கும்போது, முதலில் அம்மொழியையுணர்ந்து, பின்னர் பொருளுணர்ந்து அறிவைப் பெருக்க காலம், முயற்சி, பணச் செலவுகள் மிகுதி ஆகின்றன; உறுதியான அறிவும் ஏற்படுவதில்லை. இஃது இயற்கைக்கே மாறானது என்று கூறுவதும் மிகையாகாது.

## 5. இலக்கிய நயமுணர்ந்து இன்புறல் :

"இருந்தமிழே உன்னால் இருந்தேன் : இமையோர்
விருந்து அமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

—தமிழ்விடுதூது

மாணாக்கர்கள் இளமையிலிருந்தே இலக்கிய நயமுணர்ந்து இன்புறுதற்கும் தாய்மொழியே சிறந்த துணையாகிறது. வாழ்க்கையில் நேரிடும் துன்பங்களை எளிதில் அகற்றும் உற்ற நண்பன் இலக்கியமே. உயர்ந்த புலவர்களால் எழுதப்பட்ட இலக்கியங்கள் "தொட்டனைத்தூறும் மணற் கேணி" போல் இன்பமூறும் ஊற்றுக்களாம். அவை நம் முன்னோர்களாகிய தெய்வப் புலமைச் சான்றோர்கள் தம் வாழ்நாட்களில் பட்டறிந்து கண்டு

வைத்த உண்மைகளாகிய அறிவு மணிகள் நிரப்பியுள்ள பொற் பேழைகளாகும். இவற்றைப் பெற்று நுகர்ந்து மகிழ்வது அவர்கள் வழிவந்த பிற்றைநாள் தலைமுறைகளின் தலையாய கடனன்றோ?

தமிழ்மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் இருக்கின்றன. தமிழ் இலக்கியங்கள்குறித்து திரு. வி. க. அவர்களின் கருத்தை வெளியிட விழைகிறேன். "இயற்கை ஓவியம் பத்துப்பாட்டு, இயற்கை இன்பக்கலம் கலித்தொகை, இயற்கை வாழ்வில்லம் திருக்குறள், இயற்கை இன்பவாழ்வு நிலையங்கள் சிலப்பதிகாரமும் மணிமேகலையும், இயற்கைத் தவம் சிந்தாமணி, இயற்கைப் பரிணமம் கம்பராமாயணம், இயற்கை அன்பு பெரியபுராணம், இயற்கை இறையுறையுள் தேவார திருவாசக திருவாய்மொழிகள், இத்தமிழ்க் கருவூலங்களை உன்னஉன்ன உள்ளத்தெழும் இன்ப அன்பைச் சொல்லால் சொல்லல் இயலாது. அஃது அநுபவ நிகழ்ச்சியில் உறுவது. இளைஞர்களே! தமிழ் இளைஞர்களே! பெறற்கரிய இன்ப நாட்டில் பிறக்கும் பேறுபெற்றிருக்கிறீர்கள்; தமிழ் இன்பத்தினுஞ் சிறந்த இன்பம் இவ்வுலகிலுண்டோ? தமிழ்க் காவியங்களைப் படியுங்கள்; இன்பம் நுகருங்கள்." இதைவிட தமிழுக்கு இலக்கியச் சிறப்புணர்த்தும் அறிவுரையும் தேவையோ? தமிழ்விடுதூது ஆசிரியர் அநுபவித்த தமிழ் இன்பத்தையுங் கண்டு நுகர்வோம்:

"தித்திக்கும் தெள்ளமுதாய்த் தெள்ளமுதின் மேலான
முத்திக் கனியே! என் முத்தமிழே! புத்திக்குள்
உண்ணப்படுந் தேனே"

என்றுரைக்கின்றார்.

## 6. படைப்பாற்றல்:

புதிதாக எதையும் படைக்கவேண்டும் என்னும் ஓர் உணர்ச்சி இயற்கையிலேயே ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. இவ்வுணர்ச்சி வளர்ந்திருக்காவிடில் நாம் இன்று அநுபவிக்கும் அநேகப் புதுமைக் கலைகளைக் கண்டிருக்க முடியாது. இது

வளரத்தான் வேண்டும். இவ்வுணர்வை இளமையிலிருந்தே மாணுக்கர்பால் வளர்ப்பதற்கும் தாய்மொழி உறுதுணையாகிறது. கட்டுரைகள், சிறு நாடகங்கள், சிறுகதைகள், செய்யுட்கள், சொற்பொழிவுகள் முதலியவற்றின் மூலம் இவ்வாற்றலைத் தட்டி எழுப்பி அது வளர்வதற்கான வழிவகைகளையும் காட்டி, நன் முறையில் உள்ளத்தைப் பண்படுத்திவிட வேண்டும். " ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?" மேனுட்டினர் சிறு வயதி லிருந்தே நன்கு ஆராய்ந்து எந்த ஆற்றல் எந்தக் குழந்தையிட மிருக்கிறதோ, அவ்வாற்றலை வளர்க்கும் முறையில் கல்வித் திட்டத்தையும் அமைத்துள்ளனர். உலகில் தோன்றிய மனித இனத்தில் எந்த ஆற்றலுமில்லாத ஒருவரைக் காண இயலாது. ஏதாவது ஒரு திறமை ஒருவரிடம் இருக்கலாம். அதை வளர்க் கும் வழியை அமைத்துத் தருதல் ஏனையோர் கடன். உடற் குறையுள்ள அநேகரிடம், அரிய கலைத்திறன் அமைந்திருப்பதை நாம் அறிகிறோம்.

7. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் :

தாய்மொழி இலக்கியங்களைப் படிப்பதனுல் அந்நாட்டு வர லாறு, வாழ்க்கை முறை, நடை உடை எண்ணங்கள், பழக்க வழக்கங்கள், பொருளியல், அரசியல், சமயவியல், இசை, கூத்து முதலிய கலைகள் ஆகிய இவைகளை நன்ருய் உணர்ந்து ஆராய் வதற்கும் வாய்ப்பு உண்டாகின்றது. முன்னோர் நூல்களைக் கற்கும்போது நம்மை அறியாமலேயே நம் நாட்டின்மீதும் மொழியின்மீதும் பற்று ஏற்படுகிறது. பெற்ற தாய்மொழியும், பிறந்த நன்னுடும் நற்றவ வானினும் நனிசிறந்தன வன்றே ? இவற்றைப் போற்ருர் மக்களல்லர்; மாக்களே ஆவர். இளமையி லிருந்தே நாட்டின்மீதும் மொழியின்மீதும் பற்றை உண்டு பண்ணத் தாய்மொழி அருந் துணையாகிறது.

8. நல்லொழுக்கமும் இறையன்பும் :

ஒழுக்கத்தைப்பற்றிக் கூருத இலக்கியங்களில்லை, மதங்க ளில்லை, அறிஞர்களில்லை, அரசியலுமில்லை எனலாம். ஆனல், நாட்டில் ஒழுக்கக் கேடுகளில்லாமலில்லை. எல்லோரும் கற்ற

வழியிலேயே நடப்பர் எனக் கருத முடியாது. ஒரு சிலரைக் கொண்டு அனைவரும் ஒழுங்கீனர்கள் என்றும் கூறமுடியாது. ஒழுக்கம் உயிரினும் உயர்ந்ததுதான். ஒழுக்கங்கெட்டவர்கள் எத்துறையில் உயர்ந்திருந்தாலும் அவர்களை உலகம் மதிப்பதில்லை. மாணாக்க நிலையிலிருந்தே ஒழுக்கம், அன்பு, அறம் போன்ற உயர்பண்புகள் இடம்பெறச் செய்தல் வேண்டும். ஒழுக்கமும் அன்பும் ஒருங்கே அமையப்பெற்றால் இறைவன் ஆங்கே இடம்பெறுவான் என்பதில் ஐயமில்லை. எனவே இதுவரை கூறிய நலன்களனைத்தையும் தாய்மொழிப் பயிற்சியால் பெற்றுய்ய இயன்றவரை ஆசிரியர்கள் முயற்சிக்கவேண்டும்.

## (ஆ) சிறப்பு நோக்கங்கள்

### 1. தொடக்கப் பள்ளிகளில் தாய்மொழி அறிவு :

நமது நாட்டிலுள்ள ஆரம்பப் பள்ளிகளில் வந்து சேரும் குழந்தைகள் ஐந்தாண்டுகள் தொடர்ந்து படித்தால், அவர்கள் **நிரந்தரப் படிப்பறிவு** பெற்றவர்களாகின்றனர். அவர்களுக்கு எழுதப் – படிக்க மட்டும் தெரிந்தால் போதுமென்ற நிலை மாறி, வாழ்க்கைக்குரிய முக்கிய உலகியல் அறிவும் ஓரளவு பெறவேண்டும் என்ற நிலையில் இன்று பாடத்திட்டம் அமையப்பெற்றுள்ளது.

**சொல்லறிவு :** முதல் வகுப்பில் 300 சொற்களும், இரண்டாம் வகுப்பில் 400 சொற்களும், மூன்றாம் வகுப்பில் 500 சொற்களும், நான்காம் வகுப்பில் 700 சொற்களும், ஐந்தாம் வகுப்பில் 800 சொற்களும் தெளிவான முறையில் அவர்கள் கற்குமாறு செய்தல் வேண்டும்.

**பொருளறிவு :** வகுப்புக்கேற்ற எளிய நடையிலுள்ள எந்த நூலாயினும் பிழையின்றிப் படிக்கும் திறமையை வளர்த்தல்; நாளிதழ், வார இதழ், திங்களிதழ்களையும், சிறு சிறு பாடல்கள், கதைகள் இவைகளைப் படித்துப் பொருளுணரச் செய்தல் வேண்டும்.

கற்பனைத்திறன் வளர்ச்சி: வகுப்புகளுக்கேற்ற முறையில் கடிதங்கள் எழுதவும், சிறு சிறு கதைகள் எழுதவும், உலாச் சென்றுவந்த இடங்களைப்பற்றிக் கட்டுரைகள் வரையவும் திறன் பெறு முறையில் பயிற்சிகள் அளித்தல் வேண்டும்.

2. நடுநிலைப்பள்ளிகளில் தாய்மொழி அறிவு:

நடுநிலைப்பள்ளியில் இருக்கும் VI, VII, VIIIஆம் வகுப்பு மாணுக்கர்கள் ஆரம்பப் பள்ளியில் பயின்று தேர்ச்சிபெற்று ஓரளவு பொது அறிவும், எளிய இலக்கிய இலக்கணங்களைக் கற்கும் பக்குவமும் பெற்றுள்ளார்கள். இந்த நிலையில் அவர்களுக்கு நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் வேரூன்றும் அதைப் பல வரலாற்று நூல்கள் மூலமும், சிற்றிலக்கியங்கள், கதைகள், கவிதை நூல்கள், துணைப் பாடநூல்கள் இவைகளை அவர்களாகவே நூல் நிலையத்திலிருந்து பெற்று படித்து அறிவைப் பெருக்கிக்கொள்ளத் தூண்டவேண்டும். அவர்களின் சிந்தனையைத் தூண்டி கதைகள், கட்டுரைகள், சிறு பாடல்கள் இவைகள் எழுதவும் பயிற்சியளிக்கலாம். மாணவர் கழகங்களின் மூலம் பேச்சுப் பயிற்சி, நடிப்புப் பயிற்சிகளையும் அளித்து, நல்லொழுக்கமும், அறிவு ஆற்றல்களைப் பெறும் ஊக்கமும் வளரத் தாமாகப் பல நூல்களைக் கற்கவும், அகராதியை உபயோகிக்கவும் எதிர்காலத்தில் தாம் சிறந்து விளங்கும் துறையை அவர்களே கணித்துக்கொள்ளவும் தாய்மொழிக் கல்விமூலம் பயிற்சியளிக்கவேண்டும்.

## தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்க்குரிய தகுதிகள்

### ஆசிரியர் இலக்கணம்

"குலன் அருள் தெய்வங்கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்
உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்
அமைபவன் நூல்உரை ஆசிரியன்னே"

—பவணந்தியார்

தாய்மொழியாசிரியர்கள், இலக்கிய இன்பம் அடைவதே கல்வியின் நோக்கம் என்று எண்ணியிருத்தல் போதாது. கல்வி மனிதனை முழுவளர்ச்சி அடையச்செய்து, சிறந்த குடிமகனாகத் திகழ்வதற்குத் துணைபுரிகின்றது. அதற்குரிய தகுதியை ஆசிரியர்கள் இன்றியமையாது பெற்றிருக்கவேண்டும்.

உளநூல் அறிவு இக்கால ஆசிரியர்களுக்கு மிகத் தேவை. அன்றாட வாழ்க்கையிலும், கல்விப் பயிற்சியிலும் குழந்தைகளின் மனத்தைப்பற்றிய புதிய கருத்துக்களை அறிய பல கல்வி அறிஞர்கள்தம் அநுபவத்தில் கண்டறிந்த முறைகளையெல்லாம் புரிந்துகொண்டு அவற்றைத் தம் பாடப் பயிற்சியில் பயன்பெறுமாறு செய்தல் வேண்டும்.

ஒரு நல்ல ஆசிரியர் கீழ்வரும் எண் குணங்களையும் பெற்றிருத்தல் வேண்டுமென்று தொல்காப்பியம் கூறுகிறது. அவை: பண்புடைக் குடிப் பிறப்பு, உயர் கல்வி, ஒழுக்கம், வாய்மை, தூய்மை, நடுநிலைமை, அழுக்காறின்மை, அவாவின்மை என்பனவாம். நன்னூலாசிரியரும் இதைப் பின்பற்றி பின்வருமாறு நல்லாசிரியரின் பண்புகளைப் பகர்கின்றார். அவை: உயர்குடிப் பிறப்பும், கருணையும், இறையன்பும், பெருந்தகைமையும் பல கலைகளையும், பல நூல்களையும் கற்றுப் பழகிய தேர்ச்சியும், நூற்பொருள்களை மாணாக்கர் எளிதில் உணரும்படி தொகுத்துச் சொல்லுகின்ற சொல்வன்மையும் பெற்று, பொறுமையில் பூமியையும், உயர்ச்சியில் மலையையும், நடுநிலையில் நிறைகோலையும் (தராசையும்), முகமலர்ச்சியில் மலரையும், அன்பில் தாயையும் ஒத்த குணங்கள் அமையப்பெற்று உலக இயலை நன்கு உணர்ந்து நடக்கும் நற்பண்பு பெற்றுள்ளவரே நல்லாசிரியர் ஆவார். அத்துடன் கீழ்வரும் இலக்கணங்களையும் அவர் பெற்றிருக்கவேண்டுவது அவசியம்.

(அ) **மொழித் தேர்ச்சி:** மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர் தாம் கற்பிக்கப்போகும் மொழியில் நல்ல தேர்ச்சியுடையவராய் இருத்தல் வேண்டும். "சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்" என்பது பழமொழி. ஆசிரியர்களுக்கு இவ்விதத்

தேர்ச்சி இயற்கையில் அமையாவிடினும் தமது சுயமுயற்சியால் பெற முற்படவேண்டும்.

(ஆ) கற்பிக்கும் திறன்: ஆசிரியருக்கு இருக்கவேண்டிய தகுதிகளுள் சொல்வன்மையும் ஒன்று. நல்ல குரல் ஆசிரியருக்கு மூலதனம் போன்றது. கேட்போர் உள்ளத்தைத் தன் பக்கம் ஈர்க்கும்வண்ணம் பொருளை இனிமையாய் எடுத்துரைக்கும் சொல்லாற்றல் பெற்றிருத்தல் வேண்டும். அதனுல்தான் இதைப் "பேச்சுக்கலை" என்கின்றனர். தான் போதிக்கும் கருத்திற்கேற்ப ஆசிரியரின் குரலும், சொல்லும், மெய்ப்பாடும் அமைந்திருத்தல் வேண்டும். சொல்வன்மையோடு நடிப்பும், இசையும் ஓர் ஆசிரியருக்கு அமையப்பெற்ருல் அவர் ஒரு சிறந்த ஆசிரியராகத் திகழ்வார்.

(இ) குணநலன்: ஆசிரியரிடம் நற்பண்புகள் சிறக்க அமைந்திருத்தல் வேண்டும். பெரும்பாலும் மாணுக்கர்கள் ஆசிரியரின் நடையுடை பாவனைகளையும் பண்பாடுகளையும் பின்பற்றியே நடக்கின்றனர்.

ஆசு = குற்றம், இரியன் = நீக்குபவன். ஆசிரியன் = மக்கள் மனத்தில் எழும் மாசினையும், இருளையும் போக்கி அறிவு ஒளி வீசப் பாடுபடுபவன். அவன் மனத்தில் மாசுபடிந்திருந்தால் மாணிலத்தை எவ்வாறு திருத்த இயலும்? அதனுல்தான் நன்னூல் ஆசிரியரும்,

"மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம் அச்ச மாடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை,
முடத்தெங்கு ஒப்பென முரண்கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரியர் ஆகுதலே"

என்ருர். ஆகையால் கயமைக் குணமுடையோர் அகிலத்திற் சிறந்த ஆசிரியத் தொழிலாகிய இப்பணியில் ஈடுபடாமலிருத்தலே நாட்டிற்குச் செய்யும் நற்பணியாகும்.

(ஈ) காலத்திற்கேற்ற முறை அறிந்திருத்தல்: ஆசிரியர் காலத்திற்கு ஏற்றவாறு வளர்ந்து வரும் புதிய முறைகளை நன்

குணர்ந்து பாடம் கற்பித்தல் வேண்டும். கற்ற அளவோடு நில்லாது அவ்வப்போது தன் அறிவைப் பெருக்கிக்கொள்ளவும் வேண்டும்.

(உ) **விருப்பத்தோடு செயலாற்றல்:** மாணுக்கர்களுக்குக் கற்பிக்கும்போது விரும்பி முகமலர்ந்து தனக்கு ஏற்படும் கவலை, வெறுப்பு முதலியவற்றைக் காட்டாமல் உணர்ச்சியுடனும் உவகையுடனும் இனிய முகத்துடனும் கற்பித்தல் வேண்டும். எந்த நிலையிலும் ஆசிரியரிடம் கீழ்மைப் பண்பும், அச்சமும் தலைகாட்டவே கூடாது.

(ஊ) **நடுநிலைமை:** பணக்காரர், ஏழை, கூர்ந்த அறிவுடையவன், மந்த புத்தியுடையவன் முதலிய பாகுபாடுகளைக் காட்டாமல் யாவரையும் சமமாகப் பாவித்து நடத்தல் வேண்டும். தான் வசிக்கும் ஊரில்கூட பாகுபாடு கருதாமல் அனைவரிடமும் அன்போடும் பண்போடும் நடந்துகொள்ளவேண்டும்.

(எ) **பாடத் தயாரிப்பு:** ஆசிரியர் பாடஞ்சொல்லுவதற்கு முன் தாம் சொல்லும் பாடத்தை எவ்விதம் கற்பிப்பது என்பதைப் பற்றியும் அதற்குரிய துணைக்கருவிகளைப்பற்றியும் முதலிலேயே சிந்தித்துத் தயாரித்துக்கொண்டு பாடங்கற்பிக்க முற்பட வேண்டும். எவ்வளவு சிறந்த ஆசிரியராயினும் சிறு குறிப்பேனும் வைத்திருத்தல் வேண்டும். தயாரிப்பில்லா பாடம் சிறப்பாக இராது. மேற்கண்டவாறு ஆசிரியர் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குதல் வேண்டும்.

### பயிற்சி வினுக்கள்

1. *வாழ்க்கைக்கு மொழி எவ்விதங்களில் இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.*
2. *தாய்மொழி என்றால் என்ன? கல்வியில் தாய்மொழிக்கு முதலிடம் தருவதன் நோக்கங்களை விளக்கி வரைக.*
3. *தாய்மொழியாசிரியரின் இலக்கணத்தை விவரித்தெழுதுக.*

# இரண்டாம் பிரிவு - கற்பிக்கும் முறைகள்

"ஈதல் இயல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்து மோரையில்
திகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோன் உணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்"

*—நச்சினார்க்கினியர் மேற்கோள்*

**குழந்தை உலகம் :**

குழந்தை உலகம் ஒரு தனி உலகம் எனலாம். இன்றைய் இளைஞர்கள் எதிர்காலப் பெரியோர்கள். அவர்களின் எதிர் காலத்தையும், இளமையின் நிலையையும் எண்ணியே நாம் பயிற்றும் கல்வி அமைதல் வேண்டும். வயலில் பயிர் நற்பலன் நல்கவேண்டுமானால் பயிரை முளையிலேயே கவனிக்கவேண்டும் மரம் வளம்பெற்றுயர்ந்து தரும் பலன் நிறைந்திருக்கவேண் டுமானால் கன்றிலேயே அதிகக் கவனம் செலுத்திப் பாதுகாக்க வேண்டும். ஒரு கட்டிடம் காண்பவர் கண்ணையுங் கருத்தையுங் கவர்ந்து நீண்டநாள் நின்றுநிலவவேண்டுமானால் அதன் அடிப் படை நன்கு அமைதல் வேண்டும். வருங்காலத்தில் ஒரு நாடு பீடுபெற்றுயர்ந்து உயர்சிறப்பெய்த வேண்டுமானால் அந்நாட்டுச் சிறுவர்களுக்கு இளமையிலிருந்தே சிறந்த மனப்பயிற்சியும், உயர்ந்த கல்வியும் அளித்துவரல் வேண்டும். பண்டைத் தமிழகத்தில் அரசன்முதல் ஆண்டிவரை அனைவருமே குழந்தை உலகத்தைப்பற்றி அதிகக் கவனஞ்செலுத்தினர் என்பதற்குப் பல சான்றுகள் காணக்கிடைக்கின்றன. ஒரு நாடாயினும் பெரும் வீடாயினும் பெருமை பெறுவது மக்கட்செல்வத்தால் தானேயன்றி மற்றைய செல்வங்களாலல்ல.

"படைப்புப் பலபடைத்துப் பலரோ டுண்ணும்
உடைப் பெருஞ் செல்வ ராயினும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைத் தாம்வாழு நாளே"

இஃது அறிவுடைநம்பி என்னும மன்னன் கண்ட முடிவு.

எனவே, இவ்வளவு சிறப்புகளமைந்த குழந்தைகளுக்குக் கல்விப் பயிற்றலுக்குமுன் அவர்களின் உள்ளத்தை நன்குணர்ந்து, குழந்தையின் நிலையில் நம்மையும் வைத்துப்பார்த்து, அவர்கள் உடல்வளர்ச்சியின் பல படிகளையும் ஆராய்ந்தபின்பே அவ்வந்நிலைகளுக்கேற்றவாறு கல்வி கற்பிக்க முற்படவேண்டும்.

**குழந்தையின் வளர்ச்சி :** உளநூல் அறிஞர்கள் ஒரு குழந்தையின் வளர்ச்சியைப் பின்வரும் நிலைகளாகப் பிரித்திருக்கின்றனர். (1) ஒன்றுமுதல் ஐந்தாண்டுகள்வரை—**குழவிப் பருவம்.** (2) ஐந்துமுதல் எட்டாண்டுகள்வரை — **நிலைமாறு பருவம்.** (3) எட்டு முதல் பன்னிரண்டாண்டுகள்வரை — **உருவமை பருவம்.** (4) பன்னிரண்டுமுதல் பதினெட்டாண்டுகள்வரை **முன் குமரப் பருவம்.** இந்நிலைகளுக்கேற்றவாறு அவ்வப்போது வெளிப்பட்டுத் தோன்றும் ஆற்றல்களையும், மனவெழுச்சிகளையும் நன்குணர்ந்து, அவற்றின் வளர்ச்சிக்கேற்ற வாய்ப்புகளையும் நல்கும் முறையில் கலைத்திட்டத்தையும், பாடத்திட்டத்தையும் அமைத்துக்கொண்டு கல்வி கற்பிக்க முற்படவேண்டும். குழந்தைகளின் இயல்பூக்கங்களைத் திருப்திசெய்யும் முறையில் மொழிப் பாடத்திட்டம் அமையப்பெறுவிடில், கல்வி கற்பித்தலில் முழு வெற்றியையும் பெற இயலாது.

**காலமும் கருத்தும் :** கல்வியின் திட்டங்கள் மட்டும் நன்கு அமைந்தால் போதாது. அதைக் கற்பிக்க முற்படும் முறைகள் தான் இன்றியமையாதவை. அன்று நன்னூலாசிரியர் கூறிய பாடஞ்சொல்லும் முறை, இன்றும் நமக்கு உறுதுணையாவதைக் காணலாம்.

> **"ஈத லியல்பே யியம்புங் காலை**
> **காலமு மிடனும் வாலிதி னோக்கிச்**
> **சிறந்துழி யிருந்துதன் தெய்வம் வாழ்த்தி**
> **உரைக்கப் படும்பொருள் உள்ளத் தமைத்து**
> **விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து**
> **கொள்வோன் கொள்வகை யறிந்தவ னுளங்கொளக்**
> **கோட்டமில் மனத்தில் நூல்கொடுத்த லென்ப"**

**பொருள் :** " ஆசிரியர் மாணுக்கர்க்கு நூலைக் கற்பித்தலினது முறையை சொல்லுங்கால் (மாணுக்கர், ஆசிரியர் இருவர்க்கும் உரிய) காலத்தையும் இடத்தையும் ஆராய்ந்து பார்த்து, மேம் பட்ட இடத்திலிருந்து, தான் வழிபடும் இறையை வணங்கி, தான் சொல்லப்போகும் நூற் பொருளைத் தன் மனத்திற் பொருத்தமாக முன்னமே நிறைத்துவைத்துக்கொண்டு, விரைவு படாமலும், சினங் கொள்ளாமலும், விருப்பத்தோடுகூடி மலர்ந்த முகமுடையவராய்க் கற்றுக்கொள்ளும் மாணுக்கன் தன் மனத்திற் கொள்ளுந்தன்மையாகிய அறிவின் திறத்தை அறிந்து கொண்டு, அவன் மனத்தில் ஏற்றுக்கொள்ளும்படி, மாறுபாடில் லாத நன்மனத்துடனே நூற் பொருளைக் கற்றுக்கொடுத்தலாம் என்று சொல்லுவர் அறிவுடையோர் ".

இஃது இக்கால உள நூல் முறைகளுக்கும் மிகவும் ஒத்திருக் கிறதன்றே !

**தமிழ் கற்பிக்கும் பழைய முறைகள் :** பண்டைத் தமிழகத்தில் பல கல்விக் கழகங்கள் இருந்தன என்பதற்கு ஆங்காங்குப் பழைய நூல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

(அ) இன்றுள்ள தாள்கள், அச்சுப் பொறிகள் முதலியன அன்றில்லாத காரணத்தால் பல்லாயிரக்கணக்கான நூல்களும், செய்தித் தாள்களும், விளக்க ஆராய்ச்சி இதழ்களும் பிறவும் இன்று வெளிவருவதுபோல் அன்று வந்திருக்க இயலாது. நூல்கள் எல்லாம் ஏட்டுச் சுவடிகளாகவே இருந்தன. இவை கள், கையால் எழுத்தாணியால் பனை ஓலைகளில் எழுதப்பட்ட தால் முயற்சியும், காலமும், பணமும் மிகவும் செலவாயின, சிறந்த நூல்களின் படிகள் சிலரிடமே இருந்திருக்கும். இக் காலத்தில் உள்ளதுபோல் ஏழை மாணுக்கர்களும் நூல்களை வாங்கிப் படிக்கக்கூடிய நிலை நிலவியிருக்க முடியாது.

(ஆ) எனவே கற்கவேண்டிய நூல்களை நெட்டுருச் செய்ய நேர்ந்தது. ஆசிரியர்களும் நெட்டுருச் செய்வித்தலே கற்பித்தல் என்று எண்ணினர். நூல்கள் அனைத்தும் செய்யுள் உருவி லேயே இருந்தன.

(இ) ஆசிரியர் பேச்சே பாட நூலாகவும், மாணுக்கர் கவனித்துக் கேட்டு, கேள்வி வாயிலாகவே சொல்லுணர்தல், நூலுணர்தல் என்றமட்டில் மொழித்தேர்ச்சி பெற்றனரேயன்றி வாய்மொழிப் பயிற்சியும் எழுத்துப் பயிற்சியும் மிகுதியாக இருந்திருக்கமுடியாது.

(ஈ) பள்ளிகள் ஆசிரியர்களின் வீடுகளிலேயே அமைந்து, ஆசிரியரும் மாணவரும் உடனுறைந்து வாழ்ந்திருக்கவேண்டும். அத்துடன் ஒவ்வொரு மாணவரையும் நன்கறிந்து, அவரவருடைய இயல்பு, செயல், ஒழுக்க விழுப்பங்களைக் கண்டுணர்ந்து வைத்துத் தீய இயல் செயல்களை அவ்வப்போது போக்கவும், நல்ல இயல் செயல்களை அவர்களிடையே வளர்க்கவும் முயன்றனர்.

(உ) எழுத்துக்கள் அனைத்தையும் முதலிற் கற்பித்துப் பின் படிப்பைக் கற்பித்தனர். எழுத்துக்கூட்டிச் சில சொற்களையும் தொடர்மொழிகளையும் படிக்கத் தெரிந்ததும் சிறிய அறநூல்களையும், பின்னர் நிகண்டு, நன்னூல், பெரிய இலக்கிய இலக்கணங்கள் ஆகியவற்றையும் கற்பிப்பர். இதனால் நெட்டுருச் செய்யும் பழக்கமும், எழுத்தும் உச்சரிப்பும் அழகாய் அமைந்தன என்றாலும், காலவிரயம் அதிகம்.

(ஊ) செய்யுளைப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை என்ற முறையில் ஆசிரியரே எடுத்துக்கூறுவதும், மாணவர் கேட்டுக் கொண்டிருந்து மறுநாள் ஒப்பித்தலுமாக நெட்டுருச் செய்யும் வழக்கம் எல்லாவகைகளிலும் மிகமிக வற்புறுத்தப்பட்டது. இலக்கணம் கீழ்வகுப்புகளிலேயே தொடங்கப்பெற்று எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற வகையில் விதிவிளக்கு முறையில் கற்பிக்கப்பட்டது. பொருளறியாது குருட்டுப் பாடம் செய்தலே வளர்ந்திருந்தது.

(எ) பாடப்பொருள், பாடத்திட்டம், கலைத்திட்டம் முதலியனவே இன்றியமையாதன. மாணவர் அறிவு, மனவளர்ச்சி வயதுக்குத் தக்கனவாயும், படிப்படியாய் வளர்ச்சியுறுவனவாயும் இருக்கவில்லை.

(ஏ) குழந்தையை முக்கியமாய்க் கருதாமல் பாடங்களை அவர்களின் உள்ளங்களில் புகுத்த முயன்றனர். உளநூலறிவும், சமூக போக்கிற்கிணங்க வாழ்வைக் கற்பிக்கும் உலகியல் அறிவும் அருகிய ஆசிரியர்களாய் இருந்ததால், அவர்கள் தங்கள் கொள்கையை நிலைநிறுத்த மாணாக்கர்களுக்குக் கடுந்தண்டனை அளித்தனர்.

(ஐ) இக்கால பள்ளிகளைப்போல் கட்டிடமும், உட்காரும் வசதியும் இல்லாமல் இருந்ததோடு, பாடம் கற்பிக்கும்போது வாய்மொழிப் பயிற்சியோ, வினாவிடையோ, பொருளை விளக்குவதற்குரிய உதவிக் கருவிகளோ கொண்டு தெளிவாகவும், கோவையாகவும், விளையாட்டாகவும், நகைச் சுவையோடுகூடிய நற்கருத்துக்களை எளிய முறையில் அழகாக எடுத்து விளக்கி மாணாக்கர் மனமகிழ்வோடும், ஆர்வத்தோடும் கற்கும் வகையில் கற்பிக்கப்படவில்லை.

(ஒ) "சித்திரப் பாவையின் அத்தகவடங்கி" என்ற முறையில் காலையிலிருந்து மாலைவரை விளையாட்டு, பாட்டுபோன்ற பாட அட்டவணையின்றியும் மகிழ்ச்சிக்குரிய பல பாடங்கள் இன்றியும் உட்கார்ந்த இடத்தைவிட்டு எழுந்திருக்காமல், சிறைக் கைதிகள்போல் மாணாக்கர்கள் நடத்தப்பட்டனர். இக்காலத்தில் பாடம் முக்கியமன்று, மாணாக்கர்களின் உடலும் உள்ளமுமே முக்கியமெனக்கொண்டு புதியமுறையில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மாணாக்கர்களும் ஐம்புலப் பயிற்சிக்குரிய வகையிலும், பிற்கால வாழ்க்கைக்குரிய பாடங்களையும் மகிழ்வுடன் கற்கின்றனர்.

## புதிய முறைகள்

மேல்நாட்டில் "மறுமலர்ச்சி" தொடங்கிய காலத்திலிருந்து கல்வியிலும் புதியமுறைகள் தொடங்கின எனலாம். பிரஞ்சுப் புரட்சியுடன் பழைய முறைகள் மறைந்தன. பிரஞ்சு நாட்டு அறிஞரான ரூசோவின் (கி. பி. 1712-1778) 'எமிலி' என்ற நூல் தான் புதிய முறைகளின் வித்து எனலாம். அதை அடுத்து, ஜொகான் ஹெய்ன்ரிச் பெஸ்டலாஜ்ஜி (கி. பி. 1746—1827) என்ற ஸ்விட்ஸர்லாந்து நாட்டு அறிஞரும், அவரைப் பின்பற்றி

ஜெர்மன் நாட்டுப் பேராசிரியர் ப்ரீபேல் என்பவரும், அவருக்குப் பின் ஹெர்பார்ட் (கி. பி. 1776—1841) என்ற அறிஞரும், பின்பு இத்தாலிய நாட்டைச்சேர்ந்த மாண்டிசரி (கி. பி. 1870—1932) அம்மையாரும், பின் நம் நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட மகாத்மா காந்தி அடிகளும் கல்வியில் புதிய பாதைகளை வகுத்துத்தந்துள்ளார்கள் எனலாம். மேற்கண்ட பேரறிஞர்களின் முறைகளில் முக்கியமாய் இக்கால மாணாக்கர்களுக்கு உளநூல் கூறும்வகையில் மனத்தையும் உடலையும் அடிப்படையாய் வைத்துப் பாடங்கள் போதிக்கப்படுகின்றன. மாணாக்கர்களின் மனமும் உடலும் வளர்ச்சியுறுவதோடு, பிற்கால வாழ்க்கைக்கும் அவர்கள் கற்கும் கல்வி பயன்படவேண்டும். மேலும் அப்பாடங்களை அவர்கள் விரும்பிக் கற்கவேண்டும். அவ்வாறு கற்பிக்கும் முறைகளில் கீழ்வரும் முறைகள் இக்காலத்தில் நம் நாட்டில் எல்லாப் பள்ளிகளிலும் கையாளும் சிறந்த முறைகளாகும்.

## 1. விளையாட்டு முறை

விளையாட்டில் விருப்பமில்லாதவர்கள் ஒருவருமிலர். உளநூல் கலை விரிவடைந்தபிறகு இயல்பூக்கங்களுக்கும் அறிவு நிலைக்கும் உள்ள தொடர்பை உணர்ந்த அறிஞர்கள் குழந்தைகளிடம் இயல்பாய்க் காணப்பெறும் விளையாட்டுணர்ச்சியைக் கல்வித்துறையிற் பயன்படுத்தி வெற்றியுங் கண்டுள்ளனர்.

### (அ) விளையாட்டு முறையால் ஏற்படும் நன்மைகள்

(1) இம்முறையில் கட்டாயமின்மையால் குழந்தைகள் ஆர்வத்தோடும் பற்றோடும் கற்றலில் ஈடுபடுவர்.

(2) கல்விபற்றிய கசப்பான மனப்பான்மை சிறுவர்களிடமிருந்து மாறி அறிவு நன்கு வளரத் தொடங்குவதோடு, இம்முறையால் பல்வேறு வகைகளில் பட்டறிவுகளை, பல்வேறு துறைகளில் செயலாற்றவும், பல்வேறு பொருள்களைக் காணவும், பல்வேறு மக்களிடம் பழகும் வாய்ப்புகளையும் பெறுவர்.

(3) ஐம்பொறிகளின் வாயிலாக அறிவினைப் பெறும் வாய்ப்பினை அடைவர்.

(4) விளையாட்டு முறை, ஒத்துணர்ச்சி, விதிகளுக்கடங்கல், தலைவருக்குக் கட்டுப்படல், புறங்கூறாமை, பிறர் கருத்தை அறிதல், பிறர் சொல்லுக்கு மதிப்புத் தருதல், வெற்றி தோல்வி களை ஒன்றுபோல் பாவித்தல் போன்ற பண்புகளைப் பெறுவர்.

(5) இம்முறையால் மாணாக்கர் கவனத்தைப் படிப்பில் ஈர்க்கவும், ஆசிரியர் பேசும் அளவைக் குறைத்துக்கொள்ளவும் வாய்ப்புக்கள் உண்டாகின்றன.

(6) மனிதன் தனியாக இயங்கும்பொழுது வேண்டிய தைரியம், புத்திக்கூர்மை, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, தன்னடக்கம் போன்ற பண்புகளையும், சமூகத்துடன் சேர்ந்து இயங்கும்போது இருக்கவேண்டிய நட்பு, பிறர் கருத்துக்கு மதிப்புத் தருதல், பொறுமை போன்ற பண்புகள் வளர்ந்து சிறந்த குடிமகனாகத் திகழ்வதற்குரிய மனிதப் பண்பினையும் (Character) இம்முறையால் மாணாக்கர்கள் பெறுவர் எனலாம்.

## (ஆ) தமிழ் கற்பித்தலில் கையாளும் விளையாட்டுகள்

(1) படத்தையும் பெயரையும் சேர்: ஒரு வகுப்பை இரண்டாகப் பிரித்து, ஒரு பிரிவில் ஒவ்வொருவரிடமும் ஒரு படம் வீதம் பற்பல படங்களையும், மற்றொரு பிரிவிடம் படப்பெயர்களடங்கிய மின்னட்டைகளையும் கொடுத்து, ஆசிரியர் ஒரு படத்தின் பெயரை அழைத்ததும், படம் உள்ள பையனும் அதன் பெயர் உள்ள பையனும் வந்து வகுப்பைப் பார்த்து நிற்கச் செய்தல்.

எடுத்துக்காட்டு :

பெயர் :

ரோசா

படம் :



(2) சொற்றொடர் அமைத்தல்: பல சொற்களைத் தனித் தனியாகப் பல அட்டைகளில் எழுதிப் பலரிடமும் தந்து, ஆசிரியர் ஒரு வாக்கியத்தைக் கூறியதும் அதை மாணுக்கர்களே தங்களிடமுள்ள சொற்களைக்கொண்டு அமைத்தல்.

(3) கதை அமைத்தல்: ஒரு கதையில் முதல் சொற்றொடரை ஆசிரியர் கூறியதும், மாணுக்கர்கள் ஒவ்வொருவர் ஒரு சொற்றொடர் வீதம் கூறி கதை அமைத்தல்.

(4) தபால் விளையாட்டு: மாணுக்கர் முகவரி எழுதிய அட்டைகளை அவரவர்களிடம் கொடுக்கச் செய்தல், சில பொருள்களின் பெயர்கள் எழுதிய அட்டைகளை அவ்வப்பொருள்களின் மேல் வைக்கச் செய்தல்.

(5) அந்நியனைக் கண்டுபிடி: ஒரே இனத்தைச் சேராத சொல்லைக் கூட்டச் செய்தல்:

உதாரணம்:

காது, கண், மூக்கு, நாக்கு, பாக்கு, கை, கால்.
கருமை, எருமை, செம்மை, மஞ்சள், ஊதா, நீலம், பச்சை.

(6) இணைப்பு விளையாட்டுக்கள்:

(1) சொற்பொருத்தம்

| | |
|---|---|
| கைக்கு | தொப்பி |
| காலுக்கு | வளையல் |
| தலைக்கு | செருப்பு |

(2) பெயரும் வினையும் பொருத்தம்

| | |
|---|---|
| கோழி | குரைக்கும் |
| நாய் | கனைக்கும் |
| குதிரை | கூவும் |

(3) இளமைப் பெயர்ப் பொருத்தம்

| | |
|---|---|
| கோழி | பிள்ளை |
| பசு | குட்டி |
| பூனை | கன்று |
| தென்னை | குஞ்சு |

(4) இயைபு அழகுடன் சொற்றொடர் அமைத்தல்

அப்பா தந்தார் துட்டு
வாங்கினேன் நான் லட்டு
நாம் தின்று விட்டு
போவோம் புறப்பட்டு

(5) மாறி உள்ள எழுத்துக்களைச் சொல்லாக மாற்றுதல்

த, ம், ப, ர, ம், சி
சிதம்பரம்

(6) முறை மாறிய சொற்களைச் சொற்றொடராக்குதல் :

என்று ஓர் இருக்கிறது ஊர் காரைக்குடி—காரைக்குடி என்று ஓர் ஊர் இருக்கிறது.

இம்மாதிரி : இட்டலி குடித்தான் காப்பித் தின்று.
புல் பசித்தால் புலி தின்னுமா?
பேசுவது மொழி நாம் தமிழ்.

(7) எழுத்துக் கூட்டல் விளையாட்டு : (அ) தனித்தனி எழுத்தட்டைகளைக் குவித்துக்கொண்டு, ஆளுக்கொரு எழுத்தாகச் சொல்லி பல சொற்களை உண்டாக்கல்.

(ஆ) வட்டமாக குழந்தைகள் அமர்ந்துகொண்டு ஆளுக்கொரு எழுத்தைக்கூறிச் சொற்களை உருவாக்கல்.

(8) ஒருபொருள் பலசொல் விளையாட்டு: பல மாணக்கர்கள் ஒருங்கமர்ந்து, ஒருவர் ஒரு சொல் சொல்லியதும், அதற்குரிய பல பொருள்களையும் கூறச் செய்தல்.

(எ-டு) யானை—தந்தி, கரி, வேழம், தும்பி, களிறு, பிடி, கசம்.

(9) காலியிடத்தை நிரப்பு விளையாட்டு :

| (எ-டு) | ப—ம் | —ரம் | —க்கம் |
|---|---|---|---|
| | படம் | வீரம் | பதக்கம் |
| | பலம் | நேரம் | சதுக்கம் |
| | பயம் | பேரம் | நெருக்கம் |
| | பணம் | தாரம் | புழுக்கம் |
| | பழம் | தூரம் | குறுக்கம் |

சொல்லேணி, சொற்சக்கரம் இவ்வாறே அமைக்கலாம்.

(10) அறிவிப்பு விளையாட்டு : பொருத்தமான அறிவிப்புப் பெயர்கள் எழுதிய அட்டைகளை உரிய இடத்தில் வைக்கச் செய்தல்.

(எ-டு) வாயிலின் முன்புறம் | நல்வரவு | உட்புறம் | வணக்கம் |

மின்சாரத்தின் பக்கம் | அபாயம் | | தொடாதே |

(11) படித்துச் செய்யும் விளையாட்டு :

(எ-டு) நிமிர்ந்து நில் இடுப்பில் கை வை
வலப்புறம் திரும்பு இரண்டு தடவை குதி
கையைத் தொங்கவிடு இடப்புறம் திரும்பு

(12) விளம்பர விளையாட்டு :

(எ-டு) நாளை நம் பள்ளிக்கு விடுமுறை
இன்று மாலை 4 மணிக்கு சிற்றுண்டிக் கடைத் துவக்க விழா நடைபெறும்.
அனைவரும் கண்டு களியுங்கள்—உண்டு மகிழுங்கள்.

(13) நடிப்புப் பாடல்களும் பாப்பா பாடல்களும் பாடும் விளையாட்டு :

(அ) "ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா"

—பாரதியார்

இதை நடிப்புடன் பாடச் செய்தல்.

(ஆ) கிழமைப் பாட்டு : (நகைச்சுவை விளையாட்டு)

1. "ஞாயிற்றுக் கிழமை நகையைக் காணோம்.
திங்கள் கிழமை திருடன் கிடைத்தான்.
செவ்வாய்க் கிழமை ஜெயிலுக்குப் போனான்.
வியாழக் கிழமை விடுதலை யானான்.
வெள்ளிக் கிழமை வீட்டுக்குப் போனான்.
சனிக் கிழமை சாப்பிட்டுப் படுத்தான்.
அப்புறம் அவன்கதை ஆருக்குத் தெரியும்?"

2. "ஜாடிக்கு மூடி, சதிருக்கு ஜோடி
பாம்புக்கு மோடி, பறந்துவா ஓடி.
வாசிக்க ஏடு, வசித்திட வீடு
பாலுக்கு மாடு, பண்ணாதே கேடு.
படிப்புக்குப் போட்டி, வேட்டைக்கு ஈட்டி
கட்டிக்க வேட்டி, கதைசொல்லப் பாட்டி"

3. டம்டம் டம்டம் டமாரம்
டமாரப் பெருமை அபாரம்
"டம்டம்" எனது குரலாகும்
"டமாரம்" எனது பெயராகும்.

—குழந்தைக் கவிஞர்: அழ. வள்ளியப்பா

இதுபோன்ற விளையாட்டுகளைக் கொடுத்துப் பயிற்சிக்கலாம்.

இத்துடன் இடைநிலை, உயர்நிலை வகுப்புகளுக்கு அவர்கள் கண்ட காட்சிகளைக் கட்டுரையாகவும் சிறு கதைகள், சிறு பாடல்கள், ஆட்டப் பாடல்கள், ஓவியக் கதைகள்-இவைகளை எழுதவும், நடிக்கவும், பேசவும் செய்யலாம். இப்பயிற்சிகள் அவர்கள் விருப்பத்திற்குகந்தனவாய் இருப்பதால் எதிர்காலத்தில் அவர்களின் எண்ணங்கள் சீரிய முறையில் பயன் பட ஏதுவாகுமென்பதில் ஐயமில்லை.

## 2. தன்னூக்க முயற்சி முறை

தன்னூக்க முயற்சி முறையும் அதனால் ஏற்படும் நன்மைகளும்:

கல்வியின் நோக்கம் குழந்தைகளை வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்தல் என்று கூறப்படுகிறது. எனவே வாழ்க்கையின் பல்வேறு நிகழ்ச்சிகளைப் புத்தகங்களின்மூலம் படித்தல்மட்டும் போதா, அந்நிகழ்ச்சிகளைப் பள்ளிகளிலேயே நடத்தியுங் காட்ட வேண்டும்.

அன்பும் பரிவுமுள்ள ஓர் ஆசிரியரின் உதவியால் ஒரு வகுப்பிலுள்ள பிள்ளைகள் தங்கள் ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு தாங்களாகவே ஒரு தன்னூக்க முயற்சி வேலையைத்

தேர்ந்தெடுத்து, அதற்கு வேண்டியவற்றை ஒன்று கூடி ஆராய்ந்து, அது நிறைவேறுவதற்கான வழிவகைகளை ஒழுங்கு படுத்தித் திறனுடன் செய்து முடித்து மகிழ்கிறார்கள். இப்படி மகிழும்போது இவ்வேலையின் வாயிலாய்க் கல்வியின் முழுப் பயனையும் பெற்று முழுமனிதர்களாகிறார்கள். இதனால் அறிவு ஒழுக்கம், கட்டுப்பாடு, திறமை முதலியவை ஏற்படுகின்றன. இம்முறையில் நான்கு படிகள் உண்டு. அதாவது 1. நோக்கம் 2. வழிவகைகளைக் கண்டுபிடித்துத் திட்டம் போடுதல் 3. செய்து முடித்தல் 4. தீர்மானித்தல் என்பனவாம். இன்னும் இவற்றை, படைப்போர்க்கான வகை, துய்ப்போர்க்கான வகை அல்லது அழகுணர் வகை, பெருங்கேள்வி வகை, பன்முறைப் பயிற்சி வகை, விளையாட்டு வகை எனவும் பிரிக்கலாம். இந் நான்கு பிரிவையும்,

> "தேர்ந்தெடுத்துத் திட்டமிட்டுச் செய்ததற்பின் சீர்தூக்கி
> ஆய்ந்தறிதல் நாற்படிகள் ஆம்"

என்ற குறட்பாவில் அடக்கிவிடலாம்.

**இம்முறையால் ஏற்படும் நன்மைகள் :**

(அ) கற்றலில் விளங்கும் ஆயத்த விதி, பயிற்சி விதி, பயன் விதி ஆகிய விதிகள் மேற்கொள்ளப்பெறுவதால் பலவகைத் திறன்களில் பயிற்சியும், இன்றியமையாத அளவு வளர்ச்சியும் உண்டாகின்றன.

(ஆ) உற்றுநோக்கல், சிந்தனை, கருத்துக்கொள்ளல், தீர்மானம், கற்பனை முதலிய மனத்தின் பன்முக வேலைகளுக்கும் நல்ல பயிற்சி ஏற்பட்டு நற்பண்பும் நற்பழக்கவழக்கங்களும் உண்டாகின்றன.

(இ) படிப்பில் ஆர்வத்தை உண்டாக்குவதுடன் வாழ்க்கையில் ஏற்படும் பல நிகழ்ச்சிகளுக்கும் பள்ளியிலேயே பல பயிற்சிகளளித்து, "கல்வியே வாழ்க்கையாகும்" என்பதைக் கற்பவரும் பிறரும் நன்குணர வழி ஏற்படுகின்றது.

(ஈ) பொது வாழ்க்கைக்குப் பாடுபடுகின்றோம் என்பது வெளிப்படையாகத் தெரிவதால் மாணுக்கர்களிடையே ஒற்றுமை உணர்ச்சியும் கூட்டுறவும் வளர்கிறது.

(உ) மாணுக்கர்கள் தாமே கற்பதால் தன்முயற்சியும் தன்னம்பிக்கையும் வளர்கிறது.

(ஊ) மாணுக்கர்களின் புத்திக்கும் யுக்திக்கும் ஏற்ப செயலாற்ற வாய்ப்புகள் இருப்பதால் அவர்களிடையே படைப்பாற்றல் நன்கு வளர்கின்றது.

(எ) படிப்பில் சுறுசுறுப்பு, காய்தல் உவத்தலின்றி உண்மை காணும் ஆவல், களங்கமற்ற மனப்பான்மை முதலியன வளர்கின்றன.

(ஏ) உலக நாகரிக மாற்றத்திற்கேற்றவாறு கல்வி நோக்கம், படிப்பு முறைகள், கலைத் திட்டம், பாடத் திட்டம், தேர்வுகள் முதலியவற்றிற்கெல்லாம் ஏற்ற முறையில் வளைந்துகொடுக்கும் தன்மையும் இம்முறையில் உண்டு.

(ஐ) இன்று ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளில் இம்முறையை அடிப்படையாய் வைத்தே எல்லா வகைகளிலும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவர்களே தங்கள் வாழ்க்கைக்குரிய அனைத்தையும் தம் திறமையைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறுவதால், பிற்காலத்தில் பிறர் கையை எதிர்பார்க்காமல் வாழும் திறனை எய்துகின்றனர். காந்தியடிகள் கண்ட கனவும் இம்முறையால் நனவாகிறது.

(ஒ) பள்ளிகளில் கீழ்க்கண்ட செயல்களை அளித்து இம்முறையைப் பயிற்சிக்கலாம் :

பள்ளிகளிலேயே சோப்பு செய்தல், நூல் நூற்றல், துணி நெய்தல், உணவுப் பொருள்களை உற்பத்தி செய்தல், தேவையான பண்டங்களை வாங்கி விற்றல் போன்ற பயிற்சிகள் அளிக்கலாம். இன்று நாகரிகத்தில் மேநிலையெய்தியுள்ள நாடுகளிலெல்லாம் இளமையிலிருந்தே தொழிலோடுகூடிய கல்விதான் கற்பிக்கப்படுகின்றன. வெறும் ஏட்டுக் கல்வியைமட்டும் பயின்ற

வர்கள் வாழ்க்கையில், எத்துறையிலும் முன்னேறமுடியாது. உரிமையெய்திய நம் நாடும் மற்ற நாடுகளைப்போல் முன்னேற்ற மடைய வேண்டுமாயின் நம் சிறுவர்களுக்கும் தொழிலோடு கூடிய கல்வியைப் புகட்டியே ஆகவேண்டும். அதற்கு இம்முறை பெரிதும் துணைபுரிகிறது.

**தன்னூக்க முயற்சி முறையில் காணும் குறைகள் :**

1. இம்முறையைக் கையாண்டு கற்பிக்கப்படும் மாணக்கன் தாய்மொழி, கணக்கு, வரலாறு, தரைநூல் போன்ற நூல்களை தொடக்கத்திலிருந்தே ஒவ்வொரு பாடத்தின் திட்டப்படி படித்து முடிக்க முடியாமல் ஒழுங்கின்றிக் கற்கின்றனர். தாம் மேற்கொண்ட தொழிலிலேயே முழுக்கவனமும் செல்வதால் மேற்கண்ட பாடங்களின் அறிவு குன்ற இடமேற்படுகிறது.

2. தொடக்கநிலைக் கல்வி முடிந்தவுடன் ஒவ்வொரு மாணக்கனும் ஒவ்வொரு பாடத்திலும் ஓரளவு தேர்ச்சியாவது கைவரப் பெற்றிருக்கவேண்டும். ஆனால், இது இம்முறையால் ஏற்படுகின்றது என்று உறுதியாகக் கூற இயலாது.

3. மேலும், இம்முறையின் வாயிலாகக் கற்க முயலும் இயல்பாய்த் தோன்றிவரக்கூடிய பாடங்களை மட்டுமே கற்கலாமே யொழிய எல்லாப் பாடங்களையும் கற்கமுடியாமற் போகின்றது.

4. வறுமை மிகுந்த நம் நாட்டில் மிகுந்த பணச் செலவு செய்து, ஒவ்வொரு பள்ளியிலும் தொழிலுக்குரிய ஏராளமான பொருள்களைப் பெற்று இம்முறையைக் கையாள இயலுமா என்பதே பெருங் கேள்வியாயிருக்கிறது.

5. கல்வி நிலையங்களில் கற்பித்தலுக்குரிய ஒழுங்குமுறை களையெல்லாம் இதன்மூலம் கையாளமுடியாத நிலையில் அமையப் பெற்றுள்ளது.

6. பாடத் திட்டப்படி எல்லாப் பாடங்களையும் கற்பிக்க முடியாமலும், ஏற்ற தொழிலைத் திட்டப்படி முடிக்கமுடியாமலும் போகும். இம்முறையைத் துணிந்து ஏற்க ஆசிரியர்களும் தயங்கு கின்றனர்.

# 3. நடிப்பு முறை

**நடிப்பு முறையால் ஏற்படும் நன்மைகளும் அதைப் படிப்பில் பயன் பெறுமாறு செய்யும் விதமும் :**

நடித்துக்காட்டும் முறை கல்வியில் ஒரு சிறந்த இடம் பெற்றிருக்கிறது. இம்முறையைக் கீழ் வகுப்புகளிலிருந்தே பயிற்சித்தால் படிப்பில் சிறந்த பயன்பெறச் செய்யலாம் என்பதில் ஐயமில்லை.

**இதனுல் ஏற்படும் நன்மைகள் :**

1. இளம் மாணவர்கள் எழுந்து பேச முற்பட்டதும் அச்சமும் கூச்சமும் உடையவர்களாய், நடுக்கத்துடனும் படபடப்புடனும் சொற்ருெடரின் கடைச்சொல்லையும், சொல்லின் கடை எழுத்தையும் விழுங்கிவிடும் தன்மையையும் நடிப்பினுல் போக்கி விடலாம்.

2. பேச்சு, உரையாடல், நடிப்புத்திறன் இவைகள் வளர்ச்சிபெறும்.

3. வாய்மொழிப் பயிற்சிக்குச் சிறந்த கருவி நடிப்பு முறை.

4. கேட்டறிவதைவிடக் கண்டறிவது நன்ருய்ப் பசுமரத்தாணிபோல் உள்ளத் தமைக்கப்படும்.

5. பாடங்களில் கவர்ச்சியும், பற்றையும் உண்டுபண்ணும் ஒரு விளையாட்டு முறையாகும்.

6. பொறிகளுக்கும், கற்பனைக்கும், நினைவாற்றலுக்கும், உணர்ச்சியை வெளியிடலுக்கும் நன்ருய் முறையீடு செய்கிறது.

7. மன எழுச்சிக்குரிய மெய்ப்பாடுகள், நடிப்பு, பேச்சு, உரையாடல்கள் வெளிப்படுவதற்கு இது ஒரு நல்ல வழியாகும்.

8. மக்கள் இயற்கையையும், உள இயல்புகளையும் நிகழ்ச்சிகளையும் உள்ளபடியே எடுத்து மேடைமீது காட்டுகிறது. இவற்றை நேரே பார்ப்பதால், வாழ்க்கை உண்மைகளையும் முறைகளையும் அறிய இடமேற்படுகிறது.

9. படிக்கத் தெரியாதவர்கள்கூட அறிவைப் பெற வழி ஏற்படுகிறது.

10. மாணாக்கர்களுக்குப் பயனுள்ள பொழுதுபோக்காகும். பிற்காலத்தில் சிறந்த நடிகராக ஆயத்தமுமாகும்.

11. நல்லதன் நலனையும், தீயதன் தீமையையும் நேருக்கு நேரே கண்டு ஒழுக்கம் பெறவும், பரந்த நோக்கும் சிறந்த குறிக்கோளும் கொண்டு ஒற்றுமையுடன் வாழவும் மாணவர்கள் பயிற்சிபெறுவர்.

12. காட்சி இன்பத்தோடு கேள்வி இன்பமும் பெறுவதால் இதில் வெற்றிகாண்பவர் முத்தமிழிலும் சிறப்படைவர்.

**நடிப்பைப் பயிற்சிக்கும் முறை:**

1. ஒரு கதை, நிகழ்ச்சி அல்லது வரலாற்றுச் செய்தியை ஒரு சிறு நாடகமாக முதலில் வாய்மொழியாகப் பேசி, உரையாடி நடிக்கச் செய்துபார்த்துப் பின் எழுத்திலும் எழுதச் செய்யலாம். ஆசிரியர் பாடங் கற்பிக்கும்போது கூடியவரையில் நடிப்பை உபயோகித்தல் வேண்டும்.

2. வாய்மொழி, எழுத்து இரண்டிற்கும் இதைப் பயன் படுத்திக் கொள்ளலாம்.

3. மாணவர்கள் தங்கள் வீடுகளில் இயல்பாகவே நடக்கும் நிகழ்ச்சிகளை உற்றுநோக்கி, தாமும் தகப்பனர், ஆசிரியர், கடைக்காரன், பாற்காரன், வண்டி ஓட்டி முதலியவர்களைப்போல வும், சிறு சோறு சமைத்தல், சிற்றில் கட்டுதல், பொம்மைத் திரு மணம் போன்ற இயற்கையான அவர்கள் நடிப்பை நம் பள்ளி களில் சிறுகதைகள், வரலாற்றுப் பகுதிகள் இவைகளை நடிக்கச் செய்யலாம்.

4. வகுப்பில் நாடக உடை, திரைச்சீலை, காட்சிகள் தேவை யில்லை. ஆனல் அவர்கள் விருப்பமானதும், பொருத்தமானதும் எந்தப்பகுதி என்பதைமட்டும் திட்டமிட்டு நடிக்கச் செய்யலாம்.

5. எந்நடிப்பிலும் உரையாடல், எடுத்தல், படுத்தல், நலிதல்களைக் கொண்ட குரல் ஏற்றத் தாழ்வுடையதாய்த் திருந்திய செம்மையான உச்சரிப்பும் ஒலிப்பும் கொண்டிருத்தல் வேண்டும்.

6. நடிப்பு நலிந்தும் வலிந்தும் போகாமல் இயல்பாய் உயிருள்ளதாய் உணர்ச்சியும் மனவெழுச்சியும் உளச்சுவையும் ததும்பி, அவற்றிற்கேற்ற மெய்ப்பாடுகள் புலப்படவேண்டும்.

7. இசைக்கு ஏற்ற அளவில் இடம் தரவேண்டும்.

8. இதைப் பள்ளி ஆண்டுவிழா, இலக்கியக் கழக விழா இவைகளில் நடிக்கும்போது உடை, திரைச்சீலைகள், காட்சிகள் முதலியவற்றைக் கதை அல்லது நிகழ்ச்சிக்குரிய காலத்திற்கு ஏற்றவையாய்த் தேர்ந்தெடுத்து நடத்தவேண்டும்.

9. தொல்காப்பியத்தில் "மெய்ப்பாட்டியலில்" வரும் எண் சுவைகளையும் வெளிப்படுத்தும் வகையில் ஆசிரியர் தாங்கள் கற்பிக்கும் முறைகளில் கையாளுவதோடு, மேல் வகுப்புகளில் மாணுக்கர்களுக்கு சிறந்த பயிற்சியுமளித்தால், அவர்கள் பிற் காலத்தில் நல்ல நடிப்புத்திறனோடு வாழ்க்கைக் கலைகளை அமைத்துக்கொள்ள ஏதுவாகும். இன்று காணும் நாடகங்களிலும், சினிமாக்களிலும் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை இவைகளை நன்ருகக் காணலாம்.

## 4. வார்தா கல்விமுறை

நம் நாட்டின் தந்தை மகாத்மா காந்தியடிகள், மத்திய பிரதேசத்திலுள்ள **வார்தா** என்ற ஊரில் முதன்முதலாகத் தொடங்கியதால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது. நம் நாட்டின் பொருளாதாரம், பண்பாடு, கலை, வாழ்க்கைமுறை இவைகளை அடிப்படையாய்க் கொண்டு, நாட்டு மக்கள் அனைவருக்குமே பயன்படும்படியாக இத்திட்டம் உருவாக்கப்பெற்றிருக்கின்றது.

காந்தியடிகள் நம் நாட்டின் உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, வேறு நாடுகளோடு நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்த்து, நாமும் உலகத்தைப்போல் முன்னேற்றம் பெற

வேண்டின், கல்வியிலும் மாற்றம் பெறவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, வெகுநாள் முயன்று இம் முறையைக் கொண்டுவந்தார்.

ஆங்கிலேயரின் ஆட்சியில் கல்வித் திட்டமானது பெரும்பாலான எழுத்தாளர்களை உற்பத்திசெய்யும் ஏட்டுக் கல்வியே நிலவியிருந்ததையறிந்த அடிகள், தொழிலோடுகூடிய கல்வி முறையைக் கொணர முற்பட்டார். காந்தியடிகள் பன்னாட்கள் சிந்தித்து சிந்தித்துக் கண்டுபிடித்த இம்முறை, மகாத்மாவின் சீரிய எண்ணத்தின் பிரதிபலிப்பென்றே கூறலாம்.

வார்தா முறையின் முக்கியக் கூறுகள் :

வாழ்க்கைக்குப் பயனுள்ள ஏதாவது ஒரு தொழிலை மையமாக வைத்துக்கொண்டு, அதைச் சுற்றியே தேவையான பிற பாடங்களைக் கற்பித்தல் இம்முறையின் முக்கிய நோக்கமாகும்.

கைத்தொழில் மூலமாகத் தாய்மொழி, வரலாறு, கணக்கு, அறிவியல், வண்ணவேலைகள், இசை முதலிய பிற பாடங்கள் கற்பிக்கப்பெறும். கைத்தொழில் கதிரவன் போலிருக்க, ஏனைய பாடங்கள் அதைச் சுற்றி இயங்கும் பிற கோள்கள்போல் தொடர்புகொண்டிருக்கும். எல்லாப் பாடங்களும் தாய்மொழி வாயிலாகவே கற்பிக்கப்பெறும். 7 வயது முதல் 14 வயது முடிய ஏழாண்டுகள் கட்டாயக்கல்வி இலவசமாக அளிக்கப்பெறல் வேண்டும். இத்திட்டப்படி தொழிற்கல்வியால் மாணாக்கர்களும், ஆசிரியர்களும் சேர்ந்து உற்பத்தி செய்யும் பொருள்களிலிருந்து ஆசிரியர்கள ஊதியத்திற்குப் போதிய வருவாய் ஏற்படும்படி செய்தல் வேண்டும்.

இம்முறைப்படி இயங்கும் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை ஆண், பெண் இருபாலார்க்கும் ஒரே பாடத்திட்டந்தான் உண்டு. 6, 7 வகுப்புகளில் இத்திட்டத்தில் சிறிது மாற்றம் உண்டு. பெண் பிள்ளைகளுக்குக் குடும்ப அறிவியல் பாடமாகச் சேர்க்கப்பெற்றிருக்கின்றது. அடியிற்கண்டவாறு ஒரு நாளின் பாடவேளைப் படிப்பு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| கைத்தொழில் | 3 மணி | 20 | மணித்துளிகள் |
| தாய்மொழி | | 50 | ,, |
| இசை, ஓவியம், கணக்கு | | 45 | ,, |
| அறிவியல், சமூகம் | | 30 | ,, |
| உடற்பயிற்சி | | 10 | ,, |
| ஓய்வு | | 10 | ,, |
| | 5 மணி | 45 | மணித்துளிகள் |

இன்றைய கல்வித் திட்டத்தில் காணப்பெறும் தேர்வு முறையை இத்திட்டம் ஆதரிக்கவில்லை. அதற்குப் பதிலாக (1) அடிக்கடி சரிபார்த்தல், (2) புறநிலைப் பயனறி ஆய்வுகள் (Objective achievement tests), (3) மாணுக்கரின் பதிவுப் புத்தகங்கள், (4) கிராம மக்களுக்கு மாணுக்கர் செய்த தொண்டு, ஆகியவைகளைக்கொண்டு அவர்கள் தேறலாம்.

இத்திட்டம் வெற்றியுடன் செயற்படவேண்டுமாஞல் ஆசிரியர்தான் பொறுப்புடன் பணிபுரிய வேண்டும். இதிற் பணியாற்றும் ஆசிரியர்கள் அறிவு, திறமை, நாட்டுப்பற்று ஆகிய பண்புகளுடன் தனிப் பயிற்சியும் பெற்றிருக்கவேண்டும். முதல்நிலை (Senior), இரண்டாம்நிலை (Junior) என்ற இரண்டுநிலைகளில் ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படும். மேலும், இத்திட்டத்தில் கிராமப் புனரமைப்புப்பற்றி உழவுத் தொழில், பால் பண்ணை, கட்டிட வேலை, உலோக வேலை, தச்சு வேலை, நெசவு, வீட்டு நிர்வாகம் முதலியவை பற்றியும் எதிர்பார்க்கப்படுகிறது. தன்னுேக்க முயற்சி முறையில் காணப்படும் குறைகளை இத்திட்டத்திலும் காண்கின்றனர். ஆகவே காலத்திற்கேற்ற முறையில் மீண்டும் சில மாறுதல்களைச் செய்தால் இத்திட்டம் நம் நாட்டிற்கு நல்ல பலன்தரும் என்பது பலர் கண்ட உண்மையாகும்.

# 5. தனித்தனிக் கற்றல் முறை

## (Individual Method)

மாணக்கர் ஒவ்வொருவரையும் தனித்தனியாகக் கவனித்துக் கல்வி கற்பித்தலே இம்முறையாகும். இம்முறையில் பாடமோ, வகுப்போ முக்கியமன்று; தனித்தனியாக ஒவ்வொரு மாணக்கனின் மனத்தையுஞ் சோதித்து, அவனவன் மனநிலைக்கேற்ற பொருள்களைக் கற்பித்தலே முக்கியமாகும். (The teaching should not be subject-centred, but child-centred). பொதுவாக நமது பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்பிலும் ஏறக்குறைய 40 பிள்ளைகள் சேர்த்துவைக்கப்பட்டு அனைவருக்கும் ஒரே வகையான முறையில் கல்வி கற்பிக்கப்படும் வகுப்பு முறையே (Class or mass teaching) வழக்கத்தில் இருந்துவருகிறது. இஃது ஓர் ஆட்டையும் மாட்டையும் ஒரு வண்டியிற் கட்டி ஓட்டுவதற்கு ஒப்பாகும். ஒரே குடும்பத்தில் பிறந்து ஒரே சூழ்நிலையில் வளரும் குழந்தைகள்கூட இயற்கை அறிவிலும், இயல்பூக்கங்களிலும் வேறுபட்டே காணப்படும்போது, வெவ்வேறு குடும்பங்களில் பிறந்து, வெவ்வேறு சூழ்நிலைகளில் வளர்க்கப்படும் 40 குழந்தைகளுக்கும் ஒரே பாடத்தைக் கற்பிப்பது எவ்வாறு பொருந்தும்? ஒரு நாட்டில் வாழும் மக்களின் உடல் உறுப்புக்களில் ஒற்றுமை இருந்தாலும், ஒவ்வொருவரின் முகமும் எவ்வாறு வேறுபட்டிருக்கின்றதோ, அவ்வாறே ஒவ்வொருவரின் அகமும் அறிவும் வேறுபட்டே காணப்பெறும்.

ஒரு வகுப்பின் குழந்தைகளில் சிலரிடம் இசையறிவு இருக்கலாம், சிலரிடம் தொழில் ஆர்வம் இருக்கலாம், சிலருக்கு வேறுபல பாடங்களிலும் கலைகளிலும் ஆர்வமிருக்கலாம். அனைவருக்கும் ஒரே பாடத்தைக் கற்பிக்க முற்படும்போது, அப்பாடத்தில் ஆர்வமற்ற குழந்தைகள் பின்தங்க இடமேற்படுவது இயற்கையே. மேலும், ஒரு கலையில் ஆர்வமுள்ள குழந்தைகளுக்கு அதில் ஊக்கமும் உரிய முயற்சியும் அளிக்கப்பெருவிடின் அவர்களின் உள்ளுணர்வும், அறிவு ஆற்றல்களும் அமுங்கி அழிந்துபோவதோடு, அவர்கள் ஒழுங்கீனத்துடனும் அமைதி

யின்றியும் நடந்துகொள்ள இடமேற்படலாம். ஆகவே மாணுக்கர் கல்வியில் உண்மையான முன்னேற்றம் காணவேண்டுமாஞல் அவர்கள் தனித்தனி முறையில் கற்பதற்கு வேண்டிய வாய்ப்பும் பயிற்சியும் அளிக்கவேண்டுவது இன்றியமையாததாகும்.

**இம்முறையை மேற்கொள்ளும் வழி :**

இம்முறையின் மூலம் மாணுக்கர்கள் விருப்பப்படி விரைவாகவோ மெதுவாகவோ கற்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர். பள்ளியில் கற்கவேண்டிய அனைத்தையும் கற்க இயலாது போகலாம். ஆனால் பெரும்பகுதிகளைக் கற்க இயலும். ஒப்பந்தங்களின் (assignments) துணையால் இம்முறையை நல்ல போக்கில் கொண்டுசெலுத்தலாம். ஆண்டின் தொடக்கத்தில் ஒவ்வொரு மாணுக்கனிடமும் ஒப்பந்தங்களின் அட்டையும், ஆசிரியரிடம் ஒப்பந்த விளக்க அட்டையும் இருக்கவேண்டும். ஆசிரியர் ஒரு வகுப்பில் ஓர் ஆண்டில் கற்பிக்கவேண்டிய பாடங்களைப் பல பிரிவுகளாகவும், ஒவ்வொரு பிரிவையும் பல உட்பிரிவுகளாகவும் பிரித்துக்கொண்டு, ஒவ்வொரு உட்பிரிவிற்கும் தனித்தனி ஒப்பந்தத் தாள்கள் தயாரித்துக்கொள்ளவேண்டும்.

ஆண்டின் தொடக்கத்தில் ஆசிரியர் முதல் ஒப்பந்தத் தாளை மாணுக்கர்களிடம் கொடுத்து, கொடுத்த தேதியைத் தன்னிடமுள்ள ஒப்பந்த விளக்க அட்டையிற் குறித்துக்கொள்ளவேண்டும். சிலர் ஒப்பந்தங்களை விரைவில் முடிக்கலாம். அவர்கள் மற்றவர்களுக்காகக் காத்திராமல் இரண்டாவது ஒப்பந்தங்களைப் பயன்படுத்தவேண்டும். எவரும் எந்த ஒப்பந்தத்தை வேண்டுமானுலும் எடுத்துக்கொள்ளலாம். ஏதாவது ஓர் ஒப்பந்தத்தில் பல மாணுக்கர்களுக்கு விளங்காத நிலை ஏற்பட்டால், அவர்களைத் தனியே கூடும்படிச் செய்து அப்பகுதியைத் தெளிவாக விளக்கலாம்.

**இம்முறையின் நிறைகள் :**

(அ) இம்முறையால் மாணுக்கர்கள் அவரவர் திறமைக்கேற்றவாறு விரைவாகவும் மெதுவாகவும் விருப்பப்படியும் கற்பதற்குரிய வாய்ப்புகளைப் பெறுகின்றனர்.

(ஆ) மாணுக்கர்கள் தாங்களே முயற்சி செய்யவும், சிந்திக்கவும் தூண்டப்படுவதால் தன்னம்பிக்கையையும் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கும் திறன்களேயும் பெறுகின்றனர்.

(இ) தாங்களே கண்டுபிடித்துக் கற்பதால் மாணுக்கர்களுக்கு ஒரு தனிப்பட்ட மகிழ்ச்சியும், மன அமைதியும் ஏற்படுகின்றன.

(ஈ) மாணுக்கர்கள் தங்கள் உரிமைகளேயும் கடமைகளேயும் உணர்ந்து உயர்வடையவும், ஆசிரியர் பேச்சைக் குறைத்துக் கொள்ளவும் இம்முறையில் வழியிருக்கிறது.

**இம்முறையில் சில குறைகள் :**

(அ) ஆசிரியருக்கு வேலை மிகுதியோடு செய்வதற்கு அருமையான வேலையாகவுமிருக்கிறது.

(ஆ) ஆசிரியர் மிகவும் விழிப்புடனிருக்காவிடில், மாணுக்கர்கள் ஒருவர் வேலையை ஒருவர் பார்த்தெழுதிவிட இடமுண்டு.

(இ) நூல் நிலையமும், உதவிக் கருவிகளும் பிறவும் மிகவும் விரிவாக இருக்கவேண்டும். ஆனுல், நம் நாடு ஏழ்மைநிலையிலிருப்பதால் அவ்வாறு இயல்வதரிது என்றும் உயர்நிலைப்பள்ளிகளேயன்றி துவக்கநிலைப்பள்ளிகளில் இம்முறையைக் கையாள இயலாது என்றும் சிலர் கூறுகின்றனர்.

## 6. டால்டன் திட்டம் என்னும் ஒப்பந்த முறை

இம்முறையும் தனித்தனிக் கற்றல் முறையைப் பின்பற்றியதாகும். அமெரிக்காவில் டால்டன் என்னும் நகரில், ஹெலன் பார்க்ஹர்ஸ்ட் என்னும் அம்மையார் இம்முறையை முதன்முதல் தோற்றுவித்தார். மாண்டிசாரி முறை துவக்கநிலை வகுப்புகளுக்கு ஏற்றது. டால்டன் முறை உயர்நிலை வகுப்புகளுக்கு மிக ஏற்றது எனலாம்.

இத்திட்டத்தின்படி வகுப்பு அறைகள் இல்லை ; பாடவேலைத் திட்டம், தேர்வு, வகுப்பு மாற்றம் என்றும் இல்லை; வகுப்பு ஆசிரியர் என்றும் ஒருவர் இரார். இங்கு வகுப்பு அறைகள் பாட

ஆய்வகங்களாகிவிடும். பொதுவாக ஆசிரியர்கள்தான் பாட வல்லுநர்கள். மாணுக்கர்கள் ஆய்வு நடத்துவோர். பாட நூல் களுக்குப் பதிலாக ஒப்பந்தங்கள், தேர்ச்சிப் பதிவுத் தாள்கள் ஆகியவற்றைக் கையாளுவர்.

ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனி ஆய்வகங்கள் இருக் கும். அங்கு அப் பாடத்திற்கு வேண்டிய எல்லாப் பொருள் களும், எல்லா நூல்களும், எல்லாத் துணைக்கருவிகளும், பிற தேவைப் பொருள்களும் இருக்கும். எடுத்துக்காட்டாக, தமிழ் ஆய்வகத்தில் தமிழ் லெக்சிகன், பல்வேறு அகராதிகள், அபிதான சிந்தாமணி, சங்க இலக்கியங்கள், புராணங்கள், ஐவகை இலக்கண நூல்கள், சில்லறைப் பிரபந்தங்கள், கம்பராமாயணம், வில்லிபாரதம், தனிப்பாடல்திரட்டு போன்ற பல மேற்கோள் நூல்கள் இருக்கும்.

தனித்தனிக் கற்கும் முறையிற் காணும் குறைகள் அனைத் தும் இதற்கும் பொருந்தும் எனலாம்.

## 7. மாண்டிசாரி முறை

மாண்டிசாரி அம்மையார் இத்தாலி நாட்டைச் சார்ந்தவர். குழந்தைகளின் உள்ளத்தை வளர்ச்சி அடையச் செய்தால் மூளை வளர்ச்சி அடைந்து அவை பல செயல்களைச் செய்யமுடியும்; அறிவுள்ள குழந்தைகள்கூட, நல்ல முறையில் கல்வி கற்பிக்கப் படாவிட்டால் உள்ள வளர்ச்சி கெட்டு அறிவிழந்துபோய்விடும் என்பதே அம்மையார் கண்ட முறையின் கொள்கையாகும்.

அம்மையாரின் பயிற்சிமுறையில் மூன்று முக்கியப் பிரிவுகள் காணப்பெறுகின்றன. அவை: (1) குழந்தைகளுக்கு அவர் களின் விருப்பப்படி விளையாட்டின் மூலம் கல்விப் பயிற்சிபெறும் வாய்ப்புகள் அளிக்கப்பெறும். (2) ஐம்புலன்களுக்கும் பயிற்சி அளிக்கக்கூடிய பாடத் துணைக்கருவிகளின் மூலம் பாடங்களைக் கற்பித்தல். பலவிதமான வண்ணக் கருவிகள், வண்ணக் கோலிகள், படங்கள், பல்வேறு பாடங்களுக்குமுரிய துணைக் ருவிகள் இவைகளைக்கொண்டும், அவர்கள் கண்ணால் பார்த்துத்

தொட்டுப் பார்த்து, சுவைத்துப் பார்த்து, பாடங்களின் அறிவைப் பெறும் வகையில் கற்பிக்கப்பெறும். (3) இம்முறைப்படி கற்கும் மாணுக்கர்கள் உரிமையுடன், தங்கள் விருப்பத்திற்கேற்ற முறையில் பாடங்களைக் கற்கலாம். மனவளர்ச்சி எவ்வளவு முக்கியமோ, அந்த அளவு உடல் வளர்ச்சிக்கும் வாய்ப்பளிக்கப் பெறும். இம்முறைக்கு துணைக்கருவிகள் இன்றியமையாதவை.

டாக்டர் மாண்டிசாரி அம்மையார் இந்தியாவுக்கு வந்து, சென்னைக்கருகிலுள்ள **அடையாறு** என்னுமிடத்தில் தமது கொள்கைகளை விளக்கும் பள்ளியொன்று நிறுவினர். அதில் சீரிய முறையில் வகுப்புகள் நடத்திக் காட்டியதோடு, ஆசிரியர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பெற்றது.

இன்று ஆரம்பப் பள்ளிகளில் பயிற்றுவிக்கும் பாடங்களில் அம்மையாரின் முறையை இயன்றமட்டும் கையாள முயற்சிக்கின்றனர். ஆனல், நம் நாட்டின் வறுமை நிலையால் இம் முறையை முழு அளவில் கையாண்டு வெற்றிபெற முடியவில்லை.

## 8. கிண்டர் கார்ட்டன் முறை

இம்முறை விளையாட்டு முறையை அடிப்படையாகக் கொண்டதாகும். இதைக் கண்டறிந்தவர் சுமார் நூறு ஆண்டுகட்கு முன்னிருந்த ஜெர்மனி நாட்டுப் பேராசிரியர் **பிரைடரிச் பிராபெல்** என்பார்.

இவர் கொள்கைப்படி கல்வி என்பது, மனத்தில் பல்வேறு கருத்துக்களைத் திணிப்பதன்று. இயல்பாகவே மனம் கருத்துக்களை வாங்கிக்கொண்டு வளர்ச்சி பெறுவதுதான் உண்மையான கல்வியாகும் என்பதாம். "கிண்டர் கார்ட்டன்" என்ற ஜெர்மன் சொல்லுக்கு "**குழந்தைகளின் தோட்டம்**" என்று பொருள்படும். பிராபெல் பள்ளியை ஒரு தோட்டமாகவும், ஆசிரியரைத் தோட்டக்காரனுகவும், குழந்தைகளைத் தோட்டத்திலுள்ள சிறு செடிகளாகவும் கருதினர். பள்ளியில் மனிதப் பயிர்கள் வளர்ச்சியடையும் போதுதான் ஆசிரியர் அவற்றை நன்கு கவனித்துக் கருத்துடன் போற்றி வளர்க்கமுடியும். குழந்தைகளின் இளமைப் பருவமே

வளர்ச்சியின் முக்கியப் பருவமெனலாம். குழந்தையின் வளர்ச்சியிலும், இளந்தருவின் வளர்ச்சியிலும் பிராபெல் சில பொதுவான பண்புகளைக் கண்டார். இவர் குழந்தைகளின் முழுக் கல்விக்கும் பயிற்சியளிப்பதற்காக 20 வகையான பாடத் துணைக் கருவிகளைக் கண்டறிந்தார். அத்துணைக் கருவிகளுக்கு **பிராபெலின் கொடைகள்** என்று வழங்கப்பெறுகின்றன. இதையும் கல்விப் பயிற்சியில் இயன்றவரை கையாள முயற்சிக்கவேண்டும்.

## பயிற்சி வினாக்கள்

1. *குழந்தைகளைப்பற்றி நீவிர் அறிந்தனவற்றை விவரித்தெழுதுக.*
2. *தமிழ் கற்பிக்கும் பழைய முறையை விளக்கி வரைக.*
3. *தமிழ் கற்பிக்கும் பழைய முறைக்கும் புதிய முறைக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?*
4. *விளையாட்டு முறையால் விளையும் நன்மைகளையும், அதைப் பயிற்சிக்கும் விதத்தையும் எடுத்துக்காட்டுகளுடன் விவரித்தெழுதுக.*
5. *தன்னூக்க முயற்சிமுறை என்றால் என்ன? அது கற்றலுக்கு உற்ற துணையாகின்றதென்பதைச் சான்றுடு விளக்குக.*
6. *நடிப்பு முறையைப் படிப்பிற் பயன்படுத்தவேண்டியதன் அவசியத்தையும் அதை எப்படிப் பயன்படுத்துவீர் என்பதையும் விவரித்தெழுதுக.*
7. *வார்தா முறையின் முக்கிய கூறுகள் யாவை? அது யாரால் கொண்டுவரப்பட்டது? ஏன்?*
8. *தனித்தனிக் கற்றல் முறையையும் இதை மேற்கொள்ளும் வழிகளையும் விவரிக்க.*
9. *டால்டன் என்னும் ஒப்பந்த முறையை விவரித்தெழுதுக.*
10. *மாண்டிசாரி முறை என்றால் என்ன? இம்முறையின் பிரிவுகளையும், பயிற்சிக்கும் முறைகளையும் விளக்கி வரைக.*
11. *கிண்டர் கார்ட்டன் முறையைப்பற்றி அறிந்தனவற்றை விவரித்தெழுதுக.*

# மூன்றாம் பிரிவு - வாய்மொழிப் பயிற்சி

"நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூஉ மன்று"

— திருக்குறள்

## வாழ்க்கையும் வாய்மொழியும் :

மனித வாழ்க்கையில் வாய்மொழியைப் (பேச்சை) பயன் படுத்தாத துறைகளே இல்லை எனலாம். படித்தவர் முதல் படியாதவர் வரை சமுதாயத்தோடு ஒன்றி வாழ்க்கை நடத்தும் போது, பல்வேறு துறைகளிலும் வாழ்க்கையின் தேவைகளை ஆராய்ந்து எடுத்துச் சொல்லவும், பெறவும் வாய்மொழியைப் பெரிதும் உபயோகிக்கவேண்டியிருக்கிறது. குறிப்பாக இன்றைய நிலையை ஆராய்ந்தால் பேச்சாற்றல் உள்ளவர்களே உலகை ஆளமுடியும் என்பதையும் பொதுவாழ்வில் வெற்றியுடன் திகழ முடியும் என்பதையும் தெளிவாய் அறியலாம்.

சிறு குழந்தைகளில்கூட நன்றாகவும், தெளிவாகவும் பேசும் குழந்தைகளை நாம் பாராட்டுகிறோம். "வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும்" என்றும், "பொய்யுடையொருவன் சொல்வன்மையினால மெய்போலும்மே மெய்போலும்மே; மெய்யுடையொருவன் சொலமாட்டாமையால் பொய்போலும்மே பொய்போலும்மே" என்ற பழமொழிகளும் ஈண்டு சிந்தித்துப் பார்த்தற் குரியவையே.

கல்வியில் மொழி கற்பித்தலின் பொதுநோக்கம் நன்றாகப் பேச, நன்றாகப் படிக்க, நன்றாக எழுதப் பயிற்சிப்பதே. இதில் படிப்பின் முதற்படி பேச்சே ஆகும். குழந்தைகள் பள்ளிக்கு வருவதற்கு முன்பே ஓரளவு பேசுவார்கள். அவர்களின் பேச்சு பெற்றோரும் உற்றோராலுமே விளங்கிக்கொள்ள முடியும். பிறர் பேசுவதுபோலப் பேச முயற்சிக்கின்றனர். சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையும், சிறுபிள்ளையும். அம்மொழியின் இனிமையில் மூழ்காதவரைக் காணமுடியாது. வள்ளுவரே மயங்கியதற்குச் சான்றாக,

"குழலினிது யாழ்இனிது என்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர்"

என்றார்.

"என்னப்பா சாப்பிட்டாய்?" என்று குழந்தையைக் கேட்டால் அவர்கள் பதில் "...பாச்சி குச்சி சோ தின்னே...மோஞ்சாம் சாப்பிட்டேன். வதை, முதுக்கு அலுவா எல்லாம் தின்னே... ப்பா...! அண்ணே! நீ சாப்பில்ல? ரேதியோவுல பாப்பா பாதுதா... நானும் பாதத்துமா அப்பா?" என்பான். "போடு பார்க்கலாம்" என்றால், "நீத வன்ன கண்ணுவாடா நீ இங்கே ஓதிவாடா" என்பான்.

இந்த வார்த்தைகளின் பொருள் நமக்கு நன்கு புரியும் என்றாலும், நாளடைவில் படித்துள்ள குடும்பங்களில் வளரும் குழந்தைகள் பள்ளிக்கு வரும்போது ஓரளவு திருந்திய பேச்சோடு வருவார்கள். மற்றக் குழந்தைகள் திருத்தமற்றே உச்சரிப்பு இருக்கும். இந்த நிலையில் துவக்கநிலைப்பள்ளிகளிலுள்ள ஆசிரியர்கள் மிக்க விழிப்போடு இல்லாவிடில் அவர்கள் வாய்மொழி செம்மையுற முடியாது.

**ஆரம்பக் கல்வியும் அறிவின் நிலையும்:** இந்நிலை மாணாக்கர்கள் வயதிலும், மன வளர்ச்சியிலும், அறிவிலும் மிகச் சிறியவர்கள். இப்பொழுதுதான் வீட்டைவிட்டுப் பள்ளி புகுந்திருக்கின்றனர். பள்ளியிற் பயின்று முன்னேறி உடல் அறிவு, ஒழுக்கங்களில் தேர்ச்சியுற்று வெளிவரப்போகும் பிற்கால மக்களுக்கான அடிப்படை இப்பொழுதுதான் போடவேண்டியிருக்கிறது. தக்க அடிப்படையின்றிக கட்டப்படும் கட்டிடமும் அதன் மேல் நிலைகளும் உறுதியுடன் நீடூழி நிலைத்து நிற்கா. அது போலவே மாணவர்கள் அடையும் பன்முகத் தேர்ச்சியும் தொடக்கநிலையில் (மூன்று வகுப்புகளுக்குள்) பெறும் தேர்ச்சியைப் பொறுத்திருக்கிறது. தாய் தந்தையர்பால், குதலை மொழிந்து, கொஞ்சிக் குலாவியிருக்கும் குதூகல வாழ்விலிருந்து பிரிந்து, பள்ளிக்கு வந்திருக்கும் சிறுவர்கள் கொச்சை மழலை மொழிகளை மெள்ளமெள்ள விடுத்துச் செம்மொழியையும் சரி

59029
T:3(8317) N62

யான உச்சரிப்பையும் பெற்றுப் பேசிப் படித்து எழுதவும் போகிறுர்கள். முதல் வகுப்பிலிருந்தே ஆசிரியர்கள் மாணுக்கர்களின் பிற்கால வாழ்வில் கண்ணுங்கருத்துங் கொண்டு, பேச்சும், உச்சரிப்பும், ஒலி உறுப்புகளும், எழுதும் உறுப்புக்கான தசைநார்கள், மணிக்கட்டுகள், விரல்கள், கை, கண்ணேட்டம் பிறவும் நல்ல பயிற்சிபெற்று சிறப்புறும்வகையில் திருத்தாமல் விட்டுவிட்டால் "தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்" "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது" "செந்தமிழும் நாப்பழக்கம்" என்ற பழமொழிகளுக்கொப்ப பிழைபட்ட பழக்கங்கள் ஏற்பட்டுவிடும். பின்னர் திருத்துவதும் போக்குவதும் அருமையினும் அருமை. ஆதலால் திருத்தமான நல்ல அடிப்படையை இப்பருவத்திலேயே அமைப்பது ஆசிரியரின் இன்றியமையாத கடமையாகும்.

**வாய்மொழிப் பயிற்சியும் அதன் இன்றியமையாப் பயன்களும் :**

1. பேசுவதற்கே முதன்மையாக நாம் மொழியை வழங்குகின்றேம். ஆதலால் வாய்மொழிப் பயிற்சியே ஏனையவற்றிற்கு அடிப்படையாகும். இதுவே காலமெல்லாம் வழக்கத்திலிருப்பதுவுமாகும்.

2. நமது மொழி, பேசப்பட்டு வளர்ந்துகொண்டே வருகின்ற உயிருள்ள மொழியாதலால், இதில் எப்படிப் பேசுவதென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் முதலிலிருந்தே தெரிந்திருக்கவேண்டியதவசியமாகும்.

3. எழுதுவதனுலும், படிப்பதனுலும் வெறும் மொழியறிவு ஏற்படினும் பேச்சுக்கலை வளரவேண்டுமானுல் பேச்சுப் பழக்கத்தால்தானே வரமுடியும்?

4. வாய்மொழிப் பயிற்சியே பேசுவதற்கு அடிப்படை; பேசுதல், படித்தல், எழுதுதல் என்பதே மொழிப்படிப்பின் இயற்கையான முறையாகும்.

5. ஆகையால் திருத்தமாய்ப் பேசும் வாய்மொழிப் பயிற்சியால் பல சொற்களைக் கற்றபின்னர் படிப்பார்களாயின் மாணவர்கள் நன்கு பொருளுணர்ந்து படிப்பார்கள்.

6. பேசுவது என்பதுதான் ஒரு மொழியை உயிருள்ள தாக்கி, அதன்பால் மாணவருக்கு ஒரு கவர்ச்சியையும் பற்றையும் உண்டாக்கும்.

7. பேசும்போதுதான் பேசுபவருக்கும் கேட்பவருக்கும் நேரிடையான தொடர்பு ஏற்படுகிறது.

8. குழந்தையின் மொழி பள்ளி புகுமுன்னர் திருத்தமாக இருக்காது. மழலைச் சொற்களும், கொச்சை மொழிகளும் கலந் திருக்கும். இவற்றை வாய்மொழிப் பயிற்சியால் திருத்திவிடலாம்.

9. முதலிலேயே நல்ல உச்சரிப்பும், தெளிவான பேச்சும் மாணுக்கர்களுக்கு அமைந்திருந்தால்தான், பின்னரும் அப் பழக்கம் ஏற்படும்.

10. இளமையில் ஒலி உறுப்புகள் இளகி இறுகாமலிருக் கும்போதே திருத்தம் பெருது தவருன உச்சரிப்பு, தெளிவு இல்லாத பேச்சு முதலிய பிழைகள் ஏற்பட்டால், பின்னர் வயதானவுடன் ஒலி உறுப்புகள் இறுகிப்போன நிலையில் அப் பிழைகளைத் திருத்துவது அருமை; முடியாதென்றே கூறிவிட லாம். எடுத்துக்காட்டாய் இன்றும் பட்டதாரிகள்கூட, "வாளைப் பளம்", "தமிலர்", "வளக்க பளக்கம்" என்று பேசுவதைக் காணலாம். இதனுல் திருத்தமாய்ப் பேசும் மாணவன் திருத்த மாய்ப் படிப்பான்; திருத்தமாய்ப் படிப்பவன் திருத்தமாய் எழுதுவான் என்பதை அறியலாம்.

11. இளமைப் பருவமே நல்ல பேச்சுப் பழக்கம் ஏற்படுவ தற்குரிய காலம். தொடர்ச்சியாகப் பேசப் பழகுவது மனத் திற்கே நல்ல பயிற்சியாகும். கருத்துக்களைக் கோவையாகவும், ஒழுங்காகவும் முறைப்படுத்திப் பேசுதல் என்னும் நற்பழக் கத்தை இது கொடுக்கும்.

12. வாய்மொழிப் பயிற்சியால் பிழைகளை ஆங்காங்கே திருத்த இடமுண்டு. மற்றும் குறைந்த நேரத்தில் மிகுந்த பொருள்பற்றி ஆராய இடமுண்டு.

13. வாய்மொழிப் பயிற்சியால் அச்சமும் கூச்சமும் மாண வருக்கு நீங்கித் தன்னம்பிக்கை உண்டாகும்.

14. மாணவன் பள்ளியிலும் வாழ்க்கையிலும் தாய்மொழி யில் தன் கருத்துக்களையேயன்றி உணர்ச்சிகளையும் உளச்சுவை களையும் பிறருக்குத் தெளிவாயும், கோவையாயும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெறுகிருன்.

15. சொல்வன்மையுடன் பல பொருள்கள்பற்றிப் பேசப் பயின்றிருப்பது பொதுமக்களுக்கு அறிவுபுகட்டவும், அரசியல், வாணிகம் முதலிய பல துறைகளில் வெற்றியுடன் விளங்கவும் நல்ல உதவி செய்யும்.

16. ஒலியியல் அறிதல், மொழிப்பயிற்சி கொடுத்தல், வினவிடையளித்தல், உரையாடல், நடித்தல், கதை சொல்லல் முதலியவைகளுக்கும் வாய்மொழிப் பயிற்சி மிகவும் பயன்படும்.

17. கருத்துக்களை உட்கொள்ளும் சக்தியையும், வெளி யிடும் சக்தியையும், படைப்பாற்றலையும் விருத்திசெய்ய வாய் மொழிப் பயிற்சியே உறுதுணையாய் நிற்கிறது.

வாய்மொழிப் பயிற்சிக்கான சில வழிகள் :

**உரையாடல் :** மாணவர்களின் மனப்பான்மை, அறிவு, விருப்பம் இவைகளுக்குகந்தனவாயும், அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டுத் துய்க்கும் பொருள்கள், நிகழ்ச்சிகள், காட்சிகள், வரலாறுகள் பற்றியனவாயும் அவர்கள் உரையாடலுக்கு எடுத் துக்கொள்ளவேண்டும்.

எடுத்துக்காட்டு :

1. குடும்பம், உறவினர்கள், நண்பர்கள், பண்டிகைகள், திருவிழாக்கள், உணவு, உடை, சமைத்தல், சிறு கைத்தொழில் கள், நாட்டு நடப்பு, வாணிகம், போக்குவரவு, ஆட்சிமுறை இவைகளை வகுப்புக்கும் வயதுக்கும் தக்கவாறு பிரித்து உரையாடலாம்.

2. சிறுவர்களுக்கான பாப்பா, செவிலி, ஆட்டக் கதைப் பாடல்களை நெட்டுருச்செய்து ஒப்புவித்தல்.

3. சிறுசிறு நாடகங்களை நடிக்கச் செய்யலாம். சரித்திரக் கதைகளை வகுப்பிலேயே நடிப்புடன் கூறச் செய்யலாம்.

4. கதை சொல்லச் செய்தல். அதில் வரும் பாத்திரங்களுக்குத் தகுந்தமுறையில் நடித்துக்கொண்டு கதையைக் கூறப் பயிற்சித்தல்.

5. தமிழ் மட்டுமன்றி ஏனைய பாடங்களிலும் வாய்மொழிப் பயிற்சியை வற்புறுத்தல்.

6. கட்டுரை எழுதுவதற்கு முன்பு பல பொருள்கள் பற்றி உரையாடல் நிகழ்த்தி வாய்மொழிப் பயிற்சியை வலியுறுத்தலாம்.

7. உலாச் செல்லும் காலங்களில் ஆசிரியர்களுடனும், தோழர்களுடனும் கல்வி சம்பந்தமான கருத்துக்கள் பற்றி தாராளமாய் மனம்விட்டுப் பேசிப் பழகலாம்.

8. பெரியோர்களையும், பெற்றோர்களையும் மாணுக்கர்கள் பின்பற்றுகின்ற காரணத்தால், அவர்கள் திருத்தமாயும் செம்மையாயும் பேசவேண்டும். இளைஞர்களையும் நன்முறையில் பேசத் தூண்டவேண்டும்.

9. ஆசிரியர்களின் பேச்சையே மாணுக்கர்கள் பின்பற்றுகின்ற காரணத்தால், அவர்கள் பேச்சுக்களைத் திருத்தமாயும், செம்மையாயும், சரியான உச்சரிப்புடனும், தெளிவான ஒலிப்பு, குரல் ஏற்றத்தாழ்வுகளோடு தகுந்தமுறையிலும் பேசவேண்டும். தகாத வார்த்தைகளை ஆசிரியர்கள் தவறியும் பேசுதல் கூடாது.

10. நல்ல பெயர்பெற்ற சொற்பொழிவாளர்கள், ஆசிரியர்கள் முதலியவர்களின் பேச்சுக்களை நேரிலும், வானொலிமூலமும் கேட்டுப் பின்பற்றும்படி தூண்டவேண்டும்.

11. மாணுக்கர்களையே சொற்பொழிவுகள், உரையாடல்கள் நிகழ்த்தவும் செய்யலாம்.

### திருந்திய பேச்சில் இருக்கவேண்டிய சில நல்லியல்புகளும், திருத்தமில்லாப் பேச்சின் குறைகளும்:

**(அ) திருந்திய பேச்சு:** மொழியை விரும்பி மேற்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் அவரவர் தகுதி, வகுப்பு, அறிவு முதலியவற்றிற்கு ஏற்ற நடையில், கருத்துகளுக்கு ஏற்ற சொற்களினால்

தடையின்றித் தெளிவாகவும் கோவையாகவும் கேட்போருக்கு விளங்கும்வண்ணம் திருத்தமாய் எடுத்துரைக்கும் ஆற்றல் அமைய வேண்டும். பேசிப் பேசிப் பழகக் கருத்தும் பேச்சும் நடையும் தெளிவடையும். அது கீழ்க்கண்ட வகைகளில் அமைதல் வேண்டும்.

1. திருத்தமான ஒலிப்பு, திருத்தமான உச்சரிப்பு, இடத்திற்கு ஏற்றபடி குரலில் எடுத்தல், படுத்தல், நலிதல் முதலிய ஏற்றத் தாழ்வு அமைதல் வேண்டும்.

2. குரலும் பேச்சும் வேண்டுமென்றே வலிந்து அடித்தொண்டையால் இயற்கைக்கு மாறாக (சில பேச்சாளர்களையும், நடிகர்களையும்போல பேச எண்ணி) வெறுக்கும் வகையில் தோன்றாமல், மிகத் தாழ்ந்த குரலும், மிக உரத்த குரலுமின்றி, விரைவும மெதுவுமின்றி இனிய குரலுடன் இயல்பாய் இருத்தல் வேண்டும்.

3. அச்சம், கூச்சம், படபடப்புமின்றி மனவுறுதியும் தன்னம்பிக்கையும் கொண்டு, கூறும் கருத்திற்கேற்ற உணர்ச்சியுடன் அமைதல் வேண்டும்.

4. சொற்களின் உருவமும் முடிவும் பிறழாது அமையப் பேணுதல் வேண்டும்.

5. கொச்சைப் பேச்சு எதுவுமின்றி, நாடக வழக்கிலும் உலகியல் வழக்கிலும் இழிவழக்கொழிந்து ஆன்றோர் வழக்கும் அறிஞர் ஆட்சியும் ஏற்கும் இடமறிந்து ஏற்றல் வேண்டும்.

6. கருத்துக்களில் தொடர்பும் தெளிவும் எளிமையும் இனிமையும் அமையப்பெற்று, எவ்வகையிலும் ஐயமும் திரிபும் ஏற்படாதிருக்க வேண்டும்.

7. திருந்திய பேச்சு வள்ளுவர் தரும் இலக்கணத்தைப் பெற்றிருத்தல் நலம்.

**(ஆ) திருத்தமிலாப் பேச்சு:** கல்லாப் பொதுமக்கள் பேசும் பேச்சு இடத்தாலும் காலத்தாலும் வேறுபடுகிறது. உருச் சிதைந்தும், ஒலி குலைந்தும், குற்றம் குறைகள் நிறைந்தும்

மரபுநிலையழிந்து வழு மலிந்திருத்தலே திருத்தமில்லாப் பேச்சாகும். அவை கீழ்க்கண்ட குறைகளைப் பெற்றிருக்கும்.

1. திருத்தமில்லா ஒலிப்பும் உச்சரிப்பும் கொண்டிருத்தல்.

2. இடத்திற்கேற்றபடி குரலில் எடுத்தல் படுத்தல் நலிதல் முதலிய ஏற்றத்தாழ்வு இல்லாமை.

3. குரலும் பேச்சும் இயல்பாயில்லாது வேண்டுமென்றே வலிந்து பேசியதுபோல் தோன்றுதல்.

4. இடத்திற்கேற்ற அளவான குரலில்லாமல் மிகத் தாழ்ந்தோ உயர்ந்தோ, மிக விரைந்தோ அல்லது மிகவும் மெதுவாகவோ இருத்தல்.

5. அச்சம், கூச்சம், படபடப்புகளினுல் தன்னுணர்ச்சி தோன்றிக் கண்டதை உளறல்.

6. பேச்சில் உயிரும் வன்மையுமின்றி, உணர்ச்சி, மன உறுதி, தன்னம்பிக்கையுமற்றுக் கருத்துக்களில் தெளிவும் தொடர்பும் இல்லாமல் கொச்சை மொழிகளும் இலக்கணப் பிழைகளும் மலிந்து காணப்படல்.

7. உயர்ந்த நடைக்குரிய தெளிவு, இனிமை, எளிமை, தூய்மைகள் இல்லாமல், "கூறியது கூறல், மிகைபடக் கூறல், குன்றக் கூறல், மாறுபடக் கூறல், சென்று தேய்ந்திறுதல்" முதலிய குறைகள் இருத்தல்.

8. தொண்டைச் சதை, மூக்கடையான் முதலியவற்ருல் குரல் கெட்டிருத்தல்.

9. சொற்ருெடரின் கடைச் சொல்லை அல்லது சொல்லின் கடை எழுத்தை விழுங்கிவிடுதல், திக்கிப் பேசுதல், மிக விரைந்து பேசுதல்.

10. வல்லின றகரத்திற்குப் பதிலாக இடையின ரகரத்தையும், சிறப்பு ழகரத்திற்குப் பதிலாக ளகரத்தையும் வழங்குதல்; ழகர ஒலியை யகரத்தின் ஒலியாக வழங்குதல்.

(எ-டு) பழத்தைப் "பயம்" எனவும், கிழவியைக் "கியவி" எனவும், பழக்க வழக்கங்களைப் "பயக்க வயக்கம்" எனவும்,

4

குதிரையைக் "குருதை" என்றும், புதிதாக என்பதற்குப் "புச்சா" என்றும் வழங்கி, வழுவும் கொச்சையும் மலிந்து இருத்தல்.

**திருத்தமில்லாப் பேச்சின் குறைகளைப் போக்கும் வழிகள் :**

1. ஆசிரியர் பேச்சு, மாணவர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற வாறு எடுத்துக்காட்டாய் அமைதல் வேண்டும்.

2. பெற்றோர்களின் பேச்சும், மற்றோர்களின் பேச்சும் வீட்டில் மாணாக்கர்கள் பின்பற்றுவதற்கு ஏற்றவாறு அமைவ தோடு பெற்றோர்கள் ஒத்துழைப்பை ஆசிரியர்கள் பெற்றுக் குழந்தைகளுக்கு இருக்கும் தொண்டைச் சதை, மூக்கடையான் போன்ற குறைகளை அறவே நீக்கியும், நரம்பு மிகுகிளர்ச்சி, திக்கிப்பேசுதல், நரம்புத் தளர்ச்சி முதலியவற்றை ஏற்ற மருந்து களைக்கொண்டு போக்கவும் முயலவேண்டும்.

3. பேச்சில் குறையுடைய பிள்ளைகளுக்கு ஒல்லும் வழி வகைகளில் மிகுதியாக வாய்மொழிப் பயிற்சி கொடுத்தும், தனி யாக வாய்விட்டுப் படிக்கவோ, பாட்டு ஒப்புவிக்கவோ செய்து அக்குறையைப் போக்க முயலவேண்டும்.

4. பேச்சில் பிழைசெய்யும் குழந்தையைச் சுட்டிக்காட் டாது, பொதுப்பட அல்லது தனியாகத் திருத்துதல் வேண்டும்.

5. நா பிறழ் பயிற்சிகள் கொடுக்கலாம். (எ-டு) "கடலிலே மரவுரல் உருளுது பிறழுது; ஓடும் நரிகளில் ஒரு நரி கிழநரி, கிழநரி முதுகினில் ஒரு பிடி நரைமயிர்; மலைமேல் மழை பெய் தது; அவள் அவல் தின்றாள்; ஆண்டி ஒருவன் தோண்டி வாங்கினான்; தேர் உருளத் தேங்காயுருள, தேரடி மணி நுனி யுருள" முதலிய சொற்றொடர்களைப் பன்முறை பயிலச் செய்யலாம்.

6. பெரும்பாலும் மாணாக்கர்களிடம் ல, ள, ழ, ர, ற, ந, ன, ண ஆகிய எழுத்துக்களைக்கொண்ட சொற்களை உச்சரிப்பதில் தான் தவறுகள் ஏற்படுகின்றன. அவற்றை நா நெகிழ் பயிற்சி களைக் கொடுத்துப் போக்கலாம். நாவின் நுனி மேலும் கீழும் அசையுமாறுள்ள ஒலிகளைப் பன்முறை உச்சரிக்கச் செய்வதால் நாக்கு திருந்தும். படங்களின்மூலம் விளக்குவதோடு ஆசிரிய ரும் நாவின் நிலையை உச்சரித்துக் காட்டல் நலம் பயக்கும்.

எடுத்துக்காட்டு :




ல, ல, ல, ல, லா, ல, லி, லி, லீ, லெ, லெ, லெ, லெ, லே ;

ல

“நல்லோர் வீணைசெய்தே—அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ ?
சொல்லடி சிவசக்தி—எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே.
சொல்லடி சிவசக்தி !—நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ.”

—பாரதியார்

ள, ள, ள, ள, ளா ; ளி, ளி, ளி, ளி, ளீ ; ளெ, ளெ, ளெ, ளெ, ளே.

ள

“வெள்ளை நிலாவிங்கு வானத்தை மூடி
விரிந்து பொழிவது கண்டாய்—ஒளிக்
கொள்ளை யிலேயுனைக் கூடி முயங்கிக்
குறிப்பினி லேயொன்று பட்டு—நின்றன்

பிள்ளைக் கிளிமென் குதலையி லேமனம்
பின்ன மறச்செல்ல விட்டு—அடி
தெள்ளிய ஞானப் பெருஞ்செல்வமே!—நினைச்
சேர விரும்பினன், கண்டாய்!”

—பாரதியார்

ழ, ழ, ழ, ழ, ழா; ழி, ழி, ழி, ழி, ழீ; ழெ, ழெ, ழெ, ழெ, ழே.

ழ “தழங்கு பேரியின் ஆர்கலி தகைநெடுங் களிறு
முழங்கு மோதையு மூரிநீர் முழக்கொடு முழங்குங்
கொழுங் குழற்புதக் குதலையர் நூபுரக் குரலின்
வழங்கு மப்பெருந் தழனிகள் வயன்றொறு மறையும்”




ர, ர, ர, ர, ரா; ரி, ரி, ரி, ரி, ரீ; ரெ, ரெ, ரெ, ரெ, ரே.

ர “திரண்டில வொளியில திருவின் சேர்வில
முரண்தரு மேருவில் முரிய முரிகாண்
புரண்டில புகழில பொருப்பென் றென்றுபோல்
திரண்டில புயங்களுக் குவம மேற்குமோ”

ற, ற, ற, ற, று; றி, றி, றி, றி, றீ; றெ, றெ, றெ, றெ, றே.

ற

"வெற்றி நாணுடை வில்லியர் விற்றொழின்
முற்ற நாணில ரக்கியர் மூக்கொடு
மற்ற நாணின ராயின் போதன்றிப்
பெற்ற நாணமும் பெற்றிய தாகுமே"

—கம்பர்




ந, ந, ந, ந, நா; நி நி, நி, நி, நீ; நெ, நெ, நெ, நெ, நே;

ன, ன, ன, ன, னா; னி, னி, னி, னி, னீ; னெ, னெ, னெ, னெ, னே.

ன

"தென்னையின் கீற்றுச் சலசல வென்றிடச்
செய்துவருங் காற்றே!
உன்னைக் குதிரைகொண் டேறித் திரியுமோர்
உள்ளம் படைத்துவிட்டோம்
சின்னப் பறவையின் மெல்லொலி கொண்டிங்கு
சேர்ந்திடு நற்காற்றே!
மின்னல் விளக்கிற்கு வானகங் கொட்டுமிவ்
வெட்டொலி யேன் கொணர்ந்தாய்?"

ண,ண,ண,ண,ணு; ணி,ணி,ணி,ணி,ணீ; ணெ,ணெ,ணெ,ணெ,ணே.

ண "மண்ணுல கத்துநல் லோசைகள் காற்றெனும்
 வானவன் கொண்டுவந்தான்;
பண்ணறி விசைத்தவ் வொலிக ளனைத்தையும்
 பாடி மகிழ்ந்திடுவோம்.
நண்ணி வருமணி யோசையும், பின்னங்கு
 நாய்கள் குலைப்பதுவும்,
எண்ணு முன்னே 'அன்னக்காவடிப் பிச்சை'யென்
 றேங்கிடு வான்குரலும்."

—பாரதியார்

என்ற முறையில் அரிய ஒலிகளைப் பன்முறை மாணவர் பயிலுமாறு செய்யலாம்.

7. ஆசிரியர் உச்சரித்தற்கு அரிய சில ஒலிகளை உச்சரித்துக்காட்ட, மாணவர்களும் அதைக் கேட்டுப் பின்பற்றி உச்சரிக்கச் செய்யலாம்.

8. ஒலித்தற்கரிய ஒலிகள் அடிக்கடி பயிலும் சிறுபாடல்களையும், சொற்றொடர்களையும் நெட்டுருச் செய்து ஒப்புவிக்கச் செய்யலாம்.

9. அரிய சில ஒலிகளை ஒலித்து ஒலி உறுப்புக்களின் நிலையைத் தன் வாயிலும், படத்திலும், கண்ணாடியில் அவரவர் வாயிலும் கண்டு உணரச் செய்வதோடு, அவற்றின் திருந்திய உச்சரிப்பை இசைத் தட்டுகளின் வாயிலாகவும் கேட்கச் செய்தல்.

10. எழுத்துக்கள் பிறக்கும் இடங்களையும் எடுத்தியம்பல்.

(அ) அடியண்ணத்தில் பிறக்கும் எழுத்துக்கள் : அ, ஆ; க, ங.

(ஆ) இடையண்ணத்தில் பிறக்கும் எழுத்துக்கள் : இ, ஈ, எ, ஏ, ஐ; ச, ஞ, ய.

(இ) நுனியண்ணத்தில் பிறக்கும் எழுத்துக்கள் : ட, ண.

(ஈ) நுனியண்ணத்தையடுத்த இடத்தில் பிறப்பன: ற, ன; ர, ழ.

(உ) பல்லினடியில் பிறக்கும் எழுத்துக்கள் : த, ந, வ, ல.

(ஊ) உதட்டில் பிறக்கும் எழுத்துக்கள் : உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ.

இவைகளை ஆசிரியர் உச்சரித்துக்காட்டல் வேண்டும்..

## வாய்மொழி வெளியீட்டின் வளர்ச்சியில் கதை சொல்லுதலின் சிறப்பு :

**கதை சொல்வதன் நோக்கம் :** கதை சொல்லுதல், வாய் மொழிப் பயிற்சிக்கு ஓர் அரிய சாதனமாகும். குழந்தைகள் முதல் பெரியோர் வரை கதையிலிருக்கும் விருப்பம் அளவிடமுடியாதது. ஆதலால் எந்தப் பாடத்தையும் கதைகள் மூலமாகக் கற்பிப்பது சிறந்த முறையாகும். இதனால் ஏற்படும் நன்மைகளாவன :

1. கதைகள் குழந்தைகளின் கருத்தையும் கவனத்தையும் ஈர்க்கக்கூடியவை.

2. பிள்ளைகளின் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் உண்டாக்கிக் கல்வியில் கருத்தூன்றச்செய்கிறது.

3. பல கருத்துக்களையும் பண்பாட்டினையும் சிறுவர்கட்கு அறிவுறுத்த இடமுண்டாவதுடன், பல்வேறு நாடுகளின் போக்கினையும் எடுத்துரைக்க இது துணைபுரிகிறது.

4 ஆசிரியருக்கும் மாணுக்கர்களுக்கும் இடையே அன்பை வளர்க்கிறது.

5. திருத்தமாகவும், தெளிவாகவும் கருத்துக்களை எடுத்துரைக்க பயிற்சி ஏற்படுகிறது.

6. வரலாற்றையும், வாழ்க்கைக் குறிப்புக்களையும் கோவையாய்ச் சொல்லும் பழக்கம் உண்டாகிறது.

7. மொழி அறிவும், கற்பனை சக்தியும் வளர இடமுண்டாகிறது.

8. பண்டையோர் பண்பாட்டினையும், நல்லோர் நல்லியல்புகளையும் கதைகள்மூலம் கேட்கும்போது, அவ்வாறு தாமும் சிறந்தவர்களாகவும் வீரர்களாகவும் ஆகவேண்டும் என்ற

எண்ணத்தையும் முயற்சியையும் தூண்டி, தன்னம்பிக்கையையும் வளர்க்க இடமுண்டாகிறது.

9. மாணுக்கர்களின் நினைவு ஆற்றலையும் நடிப்புத் திறனையும் வளர்க்கிறது.

10. தாய்மொழிமீதும், தாய்நாட்டின்மீதும் பற்று ஏற்படுவதோடு, மக்களிடத்தும் மற்றைய பிராணிகளிடத்தும் அன்பும் அருளும் உண்டாகவும், தொண்டு மனப்பான்மையும் சகிப்புத் தன்மையும் வளர்ந்து நல்ல குடிமக்களாய்த் திகழ்வதற்குக் கதைகள் மிகவும் உறுதுணையாகிறது.

## கதைகளின் வகைகள்

1. **இயற்கைக் கதைகள்:** இவ்வுலகிலுள்ள உயிரினங்களில் மனித வாழ்க்கையைத் தவிர ஏனையவற்றின் வாழ்க்கையையும் அவைகளின் பண்புகள், திறன்கள், வாழ்க்கையின் குறிக்கோள்கள் இவைகளைப்பற்றியும் மாணுக்கன் அறிந்துகொள்ள இவை துணைபுரிகிறது. தாவரங்கள், நீரில் வாழ்வன, ஊர்வன, நடப்பன, பறப்பன ஆகியவை பேசுவனபோலவும், தம் வரலாற்றைக் கூறுவனபோலவும் இக்கதைகள் அமைந்திருக்கும். **ஈசாப்பு கதைகள், பஞ்சதந்திரக் கதைகள்** ஆகியவற்றை இப்பிரிவினுள் அடக்கலாம்.

2. **நகைச்சுவைக் கதைகள்:** இத்தலைப்பில் பலவகையான வேடிக்கைக் கதைகளைச் சேர்க்கலாம். அவற்றைப் படிப்பதால் சிறுவர் பெரிதும் மகிழ்வர். இன்று வெளியாகும் நாளிதழ் வார இதழ்களில் இப்படிப்பட்ட கதைகள் ஏராளம் வெளியாகின்றன. மேலும், மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் **பிரதாப முதலியார் சரித்திரம், தென்னுலிராமன் கதைகள்,** வீரமாமுனிவரின் **அவிவேக குரு கதைகள்,** மகிழ்நன் எழுதியுள்ள **கடலையும், யதார்த்தவாதி லோகவிரோதி,** பெ. தூரனின் எழுத்தோவியங்களில் குறட்டை ஒலி, இரட்டைப் புலவர்கள் பாடிய பாடல்களில் வரும் நகைச்சுவைக் கதைகள், இன்னும் பல புலவர்கள் எழுதியுள்ள நகைச்சுவை நிறைந்த கதைகளையும் கவிதைகளையும் நம் இலக்கியங்களில் காணலாம்.

3. மோகினிக் கதைகள்: இன்று வெளிவரும் திரைப் படங்களில் அநேகம் இத்தலைப்பில் அடங்கியவைகளாகும். அல்லாவுதீனும் அற்புத விளக்கும், வனதேவதையும் கோடரியும் போன்றவை இத்தகையனவே. மேலும், நம் இலக்கியங்களிலும், மேல்நாட்டு நூல்களிலும் இப்படிப்பட்ட கதைகள் அதிகம் இருப்பதைக் காணலாம்.

4. வரலாற்றுக் கதைகள்: இக்கதைகள் இவ்வுலகில் மிகுதி. அமெரிக்கா, இந்தியா, வடதுருவம் இவைகளைக் காணப் பலர் முயன்ற கதைகள், ராபின்சன் குருசோவின் செயல்கள் போன்ற கதைகள், ஒவ்வொரு நாட்டிலும் நிகழ்ந்த அரசியல் கதைகள், நம் நாட்டில் பண்டுமுதல் உரிமைபெற்ற இன்றுவரை ஏராளமான கதைகள் இருக்கின்றன. இக்கதைகளே மாணாக்கர்களின் நாட்டுப்பற்றையும், பொதுப்பணியில் இறங்கும் சீரிய நோக்கத்தையும் வளர்க்கும்.

5. புராணக் கதைகள்: உலகில் இக்கதைகள் நிறைந்திருக்கின்றன. இவைகளும் வாழ்க்கைக்குத் தேவையே.

கதை சொல்லும் ஆசிரியரின் இலக்கணம்:

1. கதை சொல்லும் ஆசிரியர் உற்சாகத்துடனும் முக மலர்ச்சியுடனும், குழந்தைகளோடு குழந்தையாயிருந்து கதை சொல்லவேண்டும்.

2. சொல்லப்போகும் கதை ஆசிரியருக்கு நன்ருகத் தெரிந்திருக்கவேண்டும். புத்தகத்தைப் படித்துப் பார்த்தால் மாணாக்கர்களுக்கும் ஆசிரியருக்கும் உற்சாகம் குறைந்துபோவதோடு கதையின் கருத்தை உணர்ச்சி ததும்ப மனத்தில் பதியவைக்க இயலாது.

3. சிறந்த கற்பனுசக்தியும், வருணிக்கும் திறமையும் பொருந்திய ஆசிரியர்தான் கதை சொல்ல முன்வரவேண்டும். வருணிக்கப்படும் காட்சிகள் பிள்ளைகள் மனத்தில் உண்மையானதுபோலத் தோன்றிப் புத்தறிவையும், உற்சாகத்தையும், வியப்பையும், வீரத்தையும், இன்பத்தையும், நகைச்சுவையையும்

ஊட்டும் வகையில், கதையின் உண்மைப் பாத்திரங்களாகவே கதை சொல்லும் ஆசிரியர் காட்சியளிக்கவேண்டும்.

4. தான் சொல்லும் கதையில் மாணுக்கர்கள் கருத்துச் செலுத்துகின்றனரா என்பதை அடிக்கடி கவனித்து, அவர்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் தன்போக்கை மாற்றிக்கொள்ளல் வேண்டும். அதற்குரிய உருவப் படங்களையும் உபயோகிக்கவேண்டும். இல்லையேல் கரும்பலகையில் வரைந்து காட்டவேண்டும்.

5 கதை சொல்லும் ஆசிரியரிடம் சிறந்த நடிப்புத்திறன் இருத்தல் வேண்டும். இசைப்பாடல்களையும் இடத்திற்கேற்ற முறையில் பாடிக் காட்டி, தன் மெய்ப்பாட்டினுல் அழும் இடத்தில் அழுது. சிரிக்கும் இடத்தில் சிரித்து, விழும் இடத்தில் விழுந்து மாணுக்கர்களை மெய்மறக்கச் செய்யவேண்டும்.

6 கதைகளில் கட்டுக்கதைகள், மாயா விநோதக் கதைகள், நாட்டுக்கதைகள், வரலாற்றுக் கதைகள், சாகசக் கதைகள், நகைச்சுவைக் கதைகள் என்று பலவாறு இருந்தாலும், அறிவுக்கும் ஆற்றலுக்கும் வித்திடக்கூடிய கதைகளையே ஆசிரியர் சொல்லவேண்டும். பயங்கரக் கதைகளை சிறுவர்களிடம் சொல்லுதல் கூடாது. மாணுக்கர்களின் அறிவுக்கும் வயதிற்கும் உரிய கதைகளை ஆசிரியரே புதிதாய்க் கூறுதல் வேண்டும். பழைய கதைகளையே கூறிக்கொண்டிருத்தல் வளரும் அறிவைத் தடை செய்யும்.

7. மாணுக்கர்களை கதையை எழுதவும், படிக்கவும் தூண்டக்கூடிய வகையில் ஏராளமான கதைகளை ஆசிரியர் உள்ளத்தமைத்து வைத்திருத்தல் வேண்டும்.

## வாய்மொழிப் பயிற்சிக்குப் படங்களின் தேவை

படங்களைப் பார்த்து மகிழ்வதில் சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவர்க்கும் அவா அதிகமென்றே கூறலாம். வாய்மொழிப் பயிற்சிக்குப் படங்கள் பெரிதும் துணையாக இருக்கின்றன.

இதனால் வரும் பலன் :

1. மொழிப் படிப்பிற் பிறபகுதிகளிலும், பொதுவாகக் கற்றலில் எல்லாப் பாடங்களிலும், வாழ்க்கையிலும் உளப் பண்பை வளர்ப்பதில் நல்ல படங்கள் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகின்றன. இயற்கையிலேயே பெரியவர்களும் சிறியவர்களும் படங்களில் காணும் காட்சிகளின் நயங்கண்டு இன்புறும் இயல்புடையோர். ஆகையால் நாட்டின் வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், உலக மக்களின் நடையுடை பாவனைகள், நிலையங்கள், தரைநூல், வரலாறு முதலியவற்றை அறிய பலவகைப் படங்கள் மிக்க உதவியாகின்றன.

2. பாடங்களைப்பற்றி உரையாடல் நிகழ்த்தவும், கதைகளை விளக்கவும், வாய்மொழிப் பயிற்சியளிக்கவும், வருணனைத் திறனைப் பெருக்கிக் கட்டுரைகள் வரையவும் படங்கள் மிகவும் உதவியாயிருக்கின்றன.

3. படங்கள் மூலம் உற்றுநோக்குந் திறமை, ஆராய்வூக்கத்தின் தூண்டல், கற்பனை சக்தியின் வளர்ச்சி, ஓவியக் கலையில் ஊக்கம், அழகு உணர்ச்சி ஏற்படுகின்றன.

4. படங்கள் மூலம் கற்ற பலவகைப் பாடக்கருத்துக்களும் மனத்தைவிட்டு அகலாது நன்கு பதிகின்றன.

5. பலவகைப் படங்கள் : இக்காலத்தில் வர்ணமிட்ட படங்களும், வர்ணமிடாத படங்களும் ஏராளமாக அச்சிடப்பட்டு மலிவாகக் கிடைக்கின்றன. அவைகளில் பாடநூலிற் காணும் படங்கள், படங்களும் சொற்களும் சேர்ந்த படங்கள் (Flash cards, picture cards) பெரிய இயற்கைப் பொருள் படங்கள், கதைப் படங்கள், தொழில்முறை விளக்கப் படங்கள், விளம்பரப் படங்கள், பத்திரிகைப் படங்கள், உருவ அமைப்புப் படங்கள், உயிர்ப்பிராணிகளின் படங்கள், ஓவியச் சிறப்புவாய்ந்த படங்கள் என்று பலவகைப் படங்களையும் பள்ளியில் தொங்கவிட்டு மாணக்கர்கள் கண்டுகளிக்கச் செய்வதோடு, பாடங்கள் நடத்தும்போது அவ்வப் பாடங்களுக்குரிய படங்களைக் கட்டாயம் துணைக்கொண்டே கற்பிக்கவேண்டும். அவ்வாறு செய்யின் பாடத்தில்

வெற்றிகாண்பதோடு, மாணுக்கர் உள்ளத்தைவிட்டுப் பாடக் கருத்துக்கள் ஒருக்காலும் அகலாது என்பதில் ஐயமில்லே.

## பயிற்சி விஞக்கள்

1. வாய்மொழிப் பயிற்சியின் இன்றியமையாப் பயன்களே விவரித்தெழுதுக.
2. உமது மாணுக்கர்களுக்கு நீவிர் அளிக்கும் வாய்மொழிப் பயிற்சிக்கான சில வழிகளே வரைக.
3. திருந்திய பேச்சில் இருக்கவேண்டிய நல்லியல்புகள் யாவை ?
4. திருத்தமில்லாப் பேச்சிற்கு சில எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
5. திருத்தமில்லாப் பேச்சின் குறைகளே நீக்கும் வழிகளே எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
6. வாய்மொழி வெளியீட்டின் வளர்ச்சிக்குக் கதை சொல்லு தலின் அவசியத்தை ஆராய்க.
7. கதைகளின் வகைகளே எடுத்துக்காட்டுகளுடன் விவரித் தெழுதுக.
8. கதை சொல்லும் ஆசிரியரின் இலக்கணத்தை வரைக.
9. வாய்மொழிப் பயிற்சிக்குப் படங்களின் தேவையை ஆராய்க.

# நான்காம் பிரிவு - படிப்பு

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு".

—திருக்குறள்

**படிப்பின் நோக்கம் :**

தாய்மொழிப் படிப்பில் வாய்மொழிப் பயிற்சிக்குப் பிறகு இயல்பாய் வரத்தக்கது படிப்பாகும். கல்விக்கெல்லாம் மூல காரணம் படிப்பே ஆகும். மற்ற பாடங்களைச் சரியாகக் கற்க வேண்டின், அதற்குப் படிப்பு இன்றியமையாத சாதனமாக இருக்கிறது. கையெழுத்தில் அல்லது அச்செழுத்தில் உள்ளதைக் கண்ணால் பார்த்து, வாயால் உச்சரித்துச் சொல்லிப் பொருள் உணர்வதைப் படிப்பு என்கிறோம். படித்தலில் சொற்களைக் காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் என்று முக்கூறுகளும் அடங்கும்.

இதற்கு உள்ளம், கண், நாக்கு, குரல் உறுப்புக்கள் அனைத்தும் சரியானபடி ஒத்துழைத்தால்தான் படிப்பு சரியாக நடைபெறும். படிப்பில் விரைவையும், திருத்தத்தையும் உண்டுபண்ண வேண்டுமாயின், கண் நகர்ச்சி, கண் பாய்ச்சல், கண் பார்வை முதலிய திறன்களை வளர்க்கும் முறைகளையும் கையாள வேண்டும்.

படிக்கும் பழக்கத்தை முதல் வகுப்பிலிருந்தே தொடங்க வேண்டும். கீழ்வகுப்புகளில் படிப்பதில் திறமையான பழக்கம் ஏற்பட்ட பின்னர், தாமாகப் படிக்கும் பழக்கத்தை உண்டுபண்ண வேண்டும். மேல் வகுப்புகளில் இப்பழக்கம் இன்னும் நன்கு உறுதியடையும். இப்படிப்பின் நோக்கங்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். (1) நூலின் கருத்துணர்தல் (2) இலக்கிய இன்பத்தைச் சுவைத்து மகிழ்தல் (3) கற்பனை சக்தியைத் தூண்டிப் புதிய எண்ணங்களைத் தோன்றச் செய்தல் (4) மொழியறிவை ஓங்கச் செய்தல் என்பனவாம்.

**படிப்பு கற்பிக்க முற்படும் முறைகள் :**

படிப்பு கற்பிக்க (1) எழுத்து முறை (2) சொற்றொடர் முறை (3) சொல் முறை என்ற முறைகளைக் கையாண்டு வருகின்றனர். இவைகளில் தற்காலத்தில் சொல் முறையையே அனைவரும் கையாளுகின்றனர். நாம் எம்முறையைக் கையாண்டாலும் கற்கும் மாணாக்கர்களுக்குப் படிப்பில் அளவற்ற ஆர்வத்தை உண்டுபண்ணினால்தான் நம் நோக்கமும் வெற்றியடையும் கற்போரும் அறிவும் ஆற்றலும் பெறுவார்கள்.

முதன்முதலில் மனிதன் மொழி கற்ற வரலாறு தொடக்க நிலையில் படிப்பு கற்பிக்க பெரிதும் துணைபுரிகிறது. மனித இனம் பல்லாயிரம் ஆண்டுகளாக வளர்த்துப் பண்படுத்திய மொழியை ஒரு குழந்தை சில ஆண்டுகளில் கற்றுக்கொள்ளுகின்றது. நமது பண்டையோர் கண்டுணர்ந்துள்ள அறிவை நாம் பயன்படுத்திக் கொள்ளுகின்றோம்.

ஆதிமனிதன் முதலில் சில ஒலிக் குறிகளினால் தன் கருத்தை வெளியிட்டான். பிறகு வாய்ப்பேச்சை மட்டும் கற்றான். பிறகு ஓவியங்களை எழுதித் தன் கருத்துக்களைப் பிறருக்கு அறிவித்தான். நாளடைவில் எழுத்துக்களைக் கண்டுபிடித்துச் சொற்களைக் கையாளும் திறமையைப் பெற்றான்.

இன்று படிப்பு கற்பிப்பதில் எழுத்துமுறை, சொல்முறை, பார்த்துச் சொல்லும் முறை, சொற்றொடர் முறை, கதை முறை போன்ற பல முறைகளைக் கையாண்டுவந்தபோதிலும், இம் முறைகளில் எது சிறந்தது என்று கூறமுடியாது. ஒவ்வொரு வகையில் ஒரு முறை உயர்ந்து காணப்பெறுகிறது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்ற மரபுப்படி இக் காலத்திற்கு ஒத்துவருகிறதெதுவோ, அதை நாம் மேற்கொள்ள வேண்டும்.

1. **எழுத்துமுறை :** இது மிகவும் பழைய முறை. உலகில் பல நாடுகளில் இம்முறையையே கையாண்டனர். நம் நாட்டில் இன்றும் பல இடங்களில் இம்முறையைக் கையாளுகின்றனர். இம்முறைப்படி தமிழ் நெடுங்கணக்கு வரிசைமுறை தவறாது

கற்ற பின்னர், சொற்கள் கற்பிக்கப்பெறும். எழுத்துக்கள் முழுவதையும் கற்பதற்குப் பல மாதங்கள் ஆகின்றன. இம் முறை காரண காரிய முறைக்குப் பொருந்துவதாக இருந்தாலும் உளநூல் உண்மைக்குச் சிறிதும் பொருந்தாது, எனலாம்.

குழந்தைகளை உற்றுநோக்கினல், அவர்கள் சொற்களையும் பொருள்களையும் முழு வடிவத்தில் தொகுத்துக் கூறுவது தெரிய வரும். அவர்கள் பேசப் பழகும்போது சொற்களையும் சொற்றொடர்களையும் முழுமையாகத்தான் கூறுகின்றனர்.

ஒரு குழந்தையை நோக்கி, "கண்ணு! கதவைத் திற" என்று கூறும்போது, "க...ண்...ணு...க...த...வை...த்...தி...ற" என்று ஒவ்வொரு எழுத்தாகக் கூறுவதில்லை. அவர்களும், "தி...ற...க்...கி...றே...ன்...அ...ப்...பா" என்று நிறுத்தி நிறுத்திக் கூறுவதில்லை. நாமும் சொற்றொடர்மூலமே கூறுகின்றோம்; அவர்களும் அவ்வாறே கூறுகின்றனர். அதையொட்டிக் கற்பிக்காமல் தனித்தனி எழுத்துக்களைக் கற்பித்தல் இயற்கைக்கு மாருனதாகிறதோடு, "தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதல்" என்ற உண்மைக்கும் முரணுகிறது. மேலும், தமிழ் மொழியிலுள்ள 247 எழுத்துக்களையும் எழுதப் படிக்கக் கற்பிப்பதற்குக் காலமும் அதிகமாவதோடு, மற்றவர்போல் நாம் படிக்க முடியவில்லையே என்ற வெறுப்பும் சலிப்பும் மாணவர்க்கு ஏற்பட்டு படிப்பில் அதிருப்தி ஏற்படவும் இடமிருக்கிறது. ஆனல், பிறமொழிகள் போலன்றி, தமிழ் மொழியில் எழுதுவதுபோல உச்சரிக்கவும், உச்சரிப்பதுபோல எழுதுவதுமாக இருப்பதால், பிழையின்றி எழுதவும் படிக்கவும் இதில் நல்ல வாய்ப்பு இருக்கிறது.

**2. சொற்றொடர் முறை:** சிறு சொற்றொடர்களை முதலில் படிக்கப் பழக்கி, பிறகு அதிலுள்ள சொற்களையும், எழுத்துக்களையும் கற்பிப்பது. நாம் வாழ்க்கையில் சொற்றொடர் மூலமே கருத்துக்களை வெளியிடுவதால் இம்முறை குழந்தைகளின் இயற்கைக்கு ஏற்ற முறையாகும். ஆனல், ஒரு சொற்றொடரைக் கரும்பலகையில் எழுதி, ஒரு சொல்லை மட்டும் உச்சரிக்கும்போது, மற்றைச் சொற்களையும் அறிய ஆவல் ஏற்படலாம்.

எடுத்துக்காட்டு :

பசு புல் மேய்கிறது (சொற்றொடர்)

புல் (சொல்)

பு—ல் (எழுத்து)

இதில் புல் என்ற சொல் போக மீதமுள்ள பசு, மேய்கிறது என்ற சொற்களையறிய அவர்கள் துடிப்பார்கள்.

3. சொல்முறை: நாம் பழக்கத்தில் கையாளும் சொற்றொடர்களிலுள்ள சொற்களை மட்டும் முதலில் கற்பிக்க முற்படுவதாகும். குழந்தைகள் முதலில் சொற்களைத்தான் சொல்கின்றனர். இது இயற்கையாக அமைந்திருப்பதால் இக்காலத்தில் இம்முறையைத்தான் கையாளுகின்றனர். முதலில் அநுபவத்திலுள்ள சிறு சொற்களைப் படங்கள் மூலம் கற்பித்த பின், இரண்டு மூன்று சொற்களைச் சேர்த்துச் சொற்றொடர் அமைத்தல் வேண்டும். இக்காலப் பாடத்திட்டமும், அதையொட்டிய நூல்களும் இம்முறையை அடிப்படையாகக்கொண்டே அமைந்திருத்தலைக் காணலாம். உளநூல் முறையைத் தழுவிவரும் இம்முறையைப் பயிற்சிக்கும் வகைகளை விளையாட்டு முறையில் விரிவாய்க் கண்டுணர்க.

மாணுக்கர்களுக்குப் படிப்பில் ஆர்வத்தை ஊட்டக்கூடிய வழிகள் :

முதன்முதல் படிப்பைத் தொடங்கும்போதே மாணுக்கர்கள் அதை ஒரு விளையாட்டாகவே கருதும் முறையில் தொடங்கினுல், அதைப் பெரிதும் விரும்புவர்.

1. படங்களின் வாயிலாய்ப் படிப்பை வளர்க்கலாம். சில சொற்களாலும் தொடர்களாலும் விளக்கக் குறிப்புக்களைக் கீழே கொண்டுள்ள, கண்ணையும் கருத்தையும் கவரத்தக்க சில படங்களை வகுப்பறையில் தொங்கவிட்டு, மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டிப் படிப்பில் ஆவலை உண்டுபண்ணுமாறு செய்யலாம்.

2. மாணுக்கர்களின் வீட்டிலும் வெளியிலும் கண்டறிந்த, கேட்டறிந்த பொருள்கள்பற்றி கேள்விகள் கேட்டு அவர்களை விடையிறுக்கச் செய்தும் படிக்கச் செய்யலாம்.

3. சில கட்டளை அல்லது வேண்டுகோள் அட்டைகளைப் படித்து அவற்றின்படி நடக்கச் செய்தும், அவ்வாறு நடக்காதவர்களுக்கு அவற்றைப் படித்தும் காட்டலாம்.

4. பிள்ளைகளுக்குப் பற்றுள்ள செய்திகளை அவ்வப்போது பள்ளிக்கூட விளம்பரப் பலகையில் எழுதிப் படிக்கத் தூண்டலாம்.

5. சுவர்களிலும், கரும்பலகையிலும் உயர்ந்த கருத்துக்களையும் அறமொழிகளையும் எழுதிப் படிக்கத் தூண்டலாம்.

6. செய்தித் தாள்கள், சிறுகதைப் புத்தகங்கள், உயர்ந்த வார இதழ்கள் இவைகளைப் படிக்கத் தூண்டலாம், படித்தும் காட்டலாம்.

7. சிறுகதை, செவிலி, பாப்பா, ஆட்டப் பாடல்களை இசையுடன் ஒப்புவித்துக் காட்டிப் படிக்கத் தூண்டலாம்.

8. வெளிநாட்டுக் கதைகள், பெரியோர்களின் வரலாறுகள், வரலாற்றுச் செய்திகள் இவைகளில் சிறு சிறு பகுதிகள் கூறி, மாணுக்கர்களை முழுதும் படிக்கும்படி தூண்டலாம்.

9. கதை, கட்டுரை, பேச்சுப் போட்டி, நாடகம் இவைகளில் மாணுக்கர்களைப் பங்குபெறச்செய்து அதற்குரிய கருத்துக்களை அவர்களைக்கொண்டே தயாரிக்கச்செய்து ஆர்வமூட்டலாம். மேலும் பேராசிரியர்களின் பேச்சுக்களைக் கேட்கும் வாய்ப்பும் வானெலி நிகழ்ச்சிகள், கல்வி சம்பந்தமான திரைப்படம், சிறந்த இடங்களுக்கு உலாச் செல்லுதல், பலவிதமான பள்ளிகளையும் கலைக்கூடங்களையும் கண்டு, கேட்டு வரும் வாய்ப்பும், உலக இன்றைய நிகழ்ச்சிகளோடு, கடந்த நிகழ்ச்சிகளை ஒப்பிடும் ஆராய்ச்சி அளித்தல் போன்றவைகளில் மாணுக்கர்களை ஈடுபடுத்துவதாலும், அவர்களே தங்கள் படிப்பை விரிவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்னும் ஆர்வங்கொண்டு பலவகைகளில் கற்க முற்படுவர். இதற்கு ஆசிரியர் முன்மாதிரியாய்த் திகழ்தல் மிகமிக முக்கியமாகும்.

**மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்கக் கையாளும் வழிகள் :**

மாணுக்கர்களுக்கு அதிகமான சொற்கள் தெரிந்திருந்தால் தான் அவர்கள் தடங்கலின்றி எதையும் படிக்க இயலும். இதற்கு முதலில் சொற்களஞ்சியத்தைப் பெருக்கவேண்டுவது இன்றியமையாததாகும்.

1. அடிக்கடி பயிலக்கூடியதும், வீட்டிலும், பள்ளியிலும், பல நிகழ்ச்சிகளிலும் பயிலக்கூடியதும், தொட்டு, கண்டு, கேட்டு, முகர்ந்து, சுவைத்தறியக்கூடியதுமான சொற்களையே முதலில் கற்பிக்கவேண்டும்.

2. சொற்களின் பொருளைக் கற்பிக்கும்போது, அவற்றைப் பயிலும் பல இடங்களில் வைத்து பன்முறை வாக்கில் வருமாறு கற்பிக்கவேண்டும்.

3. சொற்களைத் தனித்தனி நிலையில் கற்பிக்காமல், புதுச் சொற்களைத் தொடர்மொழியில் வைத்தே கற்பிக்க வேண்டும்.

4. முக்கியமான மரபுத் தொடர்கள், பழமொழிகள், அறமொழிகள், உவமைகள் முதலியவைகளை அறிவித்து அதில் வரும் புதிய சொற்களையும் பொருள்களையும் மனத்திலிருத்தச் செய்யலாம்.

5. படம் பார்த்து பொருளுணர்ந்து பேசுதல், உரையாடல், வினுவிடை முதலியவைகளினுலும் சொல்லறிவு பெருகும்.

6. நல்ல அரிய சொல்லாட்சிகள், இலக்கண அமைதிகள், ஒற்றுமை வேற்றுமைப்பொருள்களை இனப்படுத்துதல், ஒரு பொருள் குறித்துப் பல சொற்களும், பல பொருள் குறித்து ஒரு சொல்லும் எதிர்ப்பதங்களும் அளித்தல்.

7. வகுப்பு நூல்நிலையப் புத்தகங்களையும், வெளியில் நாள், வார இதழ்களையும் படிக்கும்படித் தூண்டுதல்; பெரியோர் சொற்பொழிவுகளைக் கேட்டு புது வார்த்தைகளைத் தொகுத்துவைக்கச் செய்தல்.

8. விளையாட்டு முறையில் சொற்கட்டுதல், கதை அமைத்தல் போன்றவைகள் மூலமும் சொற்களஞ்சியத்தைப் பெருக்கலாம்.

9. சொற்களஞ்சியத்தைப் பெருக்க தமிழ்ப்பாட மட்டுமின்றி ஏனைய பாடங்களிலும் வாய்ப்பளிக்கவேண்டும்.

10. நடுநிலை வகுப்பு மாணுக்கர்கள் அகராதியை உபயோகிக்கச் செய்யலாம்.

**கீழ் வகுப்புகளுக்கேற்ற படிப்புத் தாள்களும், அதன் வகைகளும்:**

மாணுக்கர்களுக்கு ஏற்ற பாடநூல்கள் அவர்கள் மனநிலை, பட்டறிவு, பொது அறிவு, ஆற்றல்களுக்கு எட்டக்கூடிய பொருள்களையே கொண்டிருக்கவேண்டுமாதலால், அவற்றை அவ்வவ் வகுப்பு ஆசிரியர்களே மாணுக்கர்களின் ஒத்துழைப்பையும் உதவியையுங்கொண்டு படிப்புத் தாள்களை ஆக்கலாம். (இஃது இக்கால ஆதாரக் கல்வியையும் அனுசரிக்கும் முறையாகும்.)

1. மாணுக்கர் விரும்பும் பொருள்கள், ஆசிரியர்களின் ஆற்றலுக்கேற்ற அநுபவப் பொருள்கள், கதைகள், பாப்பா ஆட்டம், செவிலிப் பாடல்கள் முதலியவற்றை ஆசிரியர்களே ஏற்ற படங்களோடு எழுதி, வாசிப்புத் தாள்களை வேறுபட்ட பல வகைகளாக, ஆண்டு முழுமைக்கும் வேண்டிய அளவில் தொகுத்து வைக்கலாம்.

2. பள்ளியிலுள்ள ஒவ்வொரு வகுப்பு அல்லது மாணுக்கர்களின் ஆவலைக்கொண்டு ஒரு பொருள்குறித்து (ஒரு நூல்) படிப்புத் தாள் உண்டுபண்ணமுடியுமானுல் உண்டுபண்ணலாம்.

3. மாணுக்கர்களே சுயமுயற்சியில் படிப்புத்தாள்கள் உண்டுபண்ணும் ஆவல் வளர்ந்து முற்படுவார்களாயின், அவற்றைப் பழுப்புத் தாளில் அல்லது கிரீம் மஞ்சள் தாளில் நீல வண்ணத்தால் கொட்டை எழுத்தில் எழுதி, அதன் படம் போடுவதற்கு அல்லது விளக்க இதழ்களிலிருந்து கத்தரித்து ஒட்டுவதற்கு மேலே இடம் விட்டு வைத்து தயாரிக்கச் செய்யலாம்.

4. மேலும் பலவகைப்பட்ட சிறுகதைகளும், கதைப்பாடல் களும், பிறவும் விளக்கங்களோடு பெரிய தாள்களில் ஆசிரியர்கள் எழுதிப் பின் சற்றுச் சிறிய அளவில் ஒவ்வொரு மாணாக்கருக்கும் வேண்டிய படிகளாகவும் உண்டாக்கி ஐந்து, ஆறு தாள்களைச் சேர்த்து ஓர் ஆண்டிற்கு ஆயத்தம் செய்து வைத்துக்கொள்ள லாம்.

5. படிப்புத் தாள்களுடன் சேர்க்கவேண்டியவைகள் : (1) மின் அட்டைகள், (2) தனிப் பயிற்சி அட்டைகள், (3) மாணாக்கர் அறிந்த பொருள்கள், நிகழ்ச்சிகள் பற்றிய சொல்—சொற்றொடர் அட்டைகள், (4) கட்டளை அட்டைகள், (5) விளம்பர அட்டை கள், (6) விடுகதைகள் எழுதுதல், (7) சிறு பாடல்கள் எழுது தல், (8) விளையாட்டுப் பொருள்களையும் சொற்களையும் பொருத் தும் அட்டைகள், (9) முறைமாற்றி எழுதிய சொற்களை முறைப் படி சொற்றொடர் முடிக்கும் அட்டைகள், (10) ஒழிவு விட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து முடிக்கும் அட்டைகள், (11) இனத்தோடு இனம் பாலொடு பால் சேர்க்கும் பயிற்சி அட்டைகள் போன்று பலவித விளையாட்டுப் பயிற்சி அட்டை களையும் ஆசிரியரே தயார்செய்து உபயோகித்தல் மிக்க பயன்தர வல்லதென்பதில் ஐயமில்லை.

## பாடம் கற்பிப்பதற்குப் படங்களின் உதவி :

தொடக்கநிலையில் மொழியைக் கற்பிக்க முற்படும்போது, தனிச் சொற்களை மட்டும் கற்பிப்பது சரியன்று. படங்களைக் காட்டியே சொற்களைக் கற்பிக்கவேண்டும்.

மொழிப் படிப்பிற் பிற பகுதிகளிலும், பொதுவாகக் கற்றலில் எல்லாப் பாடங்களிலும், வாழ்க்கையிலும் உளப்பண்பை வளர்ப் பதில் நல்ல படங்கள் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகின்றன. இயற்கையிலேயே பெரியவர்களும் சிறியவர்களும் படங்களில் காணும் காட்சிகளின் நயங்கண்டு இன்புறும் இயல்புடையோர். ஆகையால் நாட்டின் வாழ்க்கை, பழக்கவழக்கங்கள், உலக மக்களின் நடையுடை பாவனைகள், நிலையங்கள், தரை நூல், வரலாறு முதலியவற்றை அறியப் பலவகைப் படங்கள் மிக்க உதவியாகின்றன.

இன்று வெளியாகும் பலவித விளம்பரங்களுக்கும் படங்களை உபயோகித்தே மக்கள் மனத்தைக் கவர்கின்றனர். படங்களைப் பற்றி உரையாடல் நிகழ்த்தவும், கதைகளை விளக்கவும், வாய் மொழிப் பயிற்சியளிக்கவும், வருணனைத் திறனைப் பெருக்கிக் கட்டுரைகள் வரையவும் படங்கள் மிகவும் உதவியாயிருக்கின்றன.

ஆசிரியருக்கு ஓவியம் வரையத் தெரிந்திருந்தால் அவர் பாடத்தை மிகச் சிறப்புடன் நடத்துவார் என்பதில் ஐயமில்லை. படங்கள் மூலம் உற்றுநோக்குந் திறமை, ஆராய்வூக்கத்தின் தூண்டல், கற்பனு சக்தியின் வளர்ச்சி, ஓவியக்கலையில் ஆர்வம், அழகு உணர்ச்சி இவை ஏற்படுகின்றன.

இளமையிலேயே இக்கலை பதிந்திருத்தலை குழந்தைகள் எதையும் கிறுக்குவதிலிருந்தே அறியலாம். படங்கள் மூலம் கற்ற பலவகைப் பாடக் கருத்துக்கள் மனத்தைவிட்டு அகலாது நன்கு பதியச் செய்கின்றன.

வாய்விட்டுப் படித்தலினுல் ஏற்படும் நன்மைகள் :

ஓலைச் சுவடிகளையும் கையெழுத்து, அச்சு நூல்களையும் கண்ணுல் பார்த்து, வாயால் உச்சரித்துச் சொல்லிப் பொருள் உணர்வதே வாய்விட்டுப் படித்தலாம். தொடக்கத்தில் படிப்பு வாய்விட்டே இருக்கவேண்டும்.

இப்படிப்பால் ஏற்படும் நன்மைகள் :

1. தடுமாற்றமின்றி எக்கருத்தையும் விரைந்து படிக்கவும், படித்தலை அளந்தறியவும் உதவுகிறது.

2. உச்சரிப்புப் பிழைகளைத் திருத்த வாய்ப்பு ஏற்படுகிறது.

3. புதிய அருஞ்சொற்களைக் கண்டு உச்சரித்துப் பொருள் உணரவும் முடிகிறது.

4. செய்யுட்சுவை, ஓசை நயம் முதலியவற்றைப் படித்து உணர்ந்து இன்புறவும், செய்யுட்களை நெட்டுருச் செய்யவும், இசையோடு பாடவும் துணைபுரிகிறது.

5. சொற்களைத் தெளிவாக ஒலிக்கவும், உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வுகளுடன் பிறர் உள்ளத்திற் பதியச்செய்யவும் உதவுகிறது.

6. வாய்மொழிப் பயிற்சி, உரையாடல், நடித்தல், கதை சொல்லல், சொற்பொழிவுகள் நிகழ்த்தல், விளம்பரச் செய்திகளை வெளியிடல், வாழ்க்கையில் பிழையற்ற முறையில் அனைவருடனும் பேசிப் பழகல் ஆகிய அனைத்திற்கும் இது பேருதவியாகிறது.

**இத்திறன் பெறும் வழிகள்:**

மாணக்கர்களுக்கு முதலில் சிறு சிறு சொற்களையும் சொற்றொடர்களையும் கொடுத்து ஆசிரியரே உச்சரித்துக்காட்டிப் பின்பு அவர்களைப் படிக்கும்படி பயிற்சிக்கலாம். எந்தெந்தச் சொற்களின் பொருள் சிறுவர்களுக்கு விளங்கவில்லை என்பதை அறிந்துத் திருத்தலாம். எழுத்துக்கூட்டாமல் கருத்துக்களை படிக்கும் பழக்கத்தை உண்டுபண்ணுவதோடு, நாளிதழ், கதை நூல்கள், சிறு சிறு பாடல்கள் இவைகளைத் தாமாகவே படிக்கவும், நடிக்கவும் பயிற்சியளிக்கலாம்.

**வாய்க்குட் படிப்பின் இன்றியமையாமை:**

ஓலைச்சுவடிகள், கைச்சுவடிகள், அச்சு நூல்கள் முதலியவற்றை மனதிற்குள்ளேயே வாய்திறவாமல், உதடுகள் அசையாமல் ஒலித்தல் உச்சரிப்பின்றி முணுமுணுப்பில்லாமல், கண் பார்க்க மனம் கருத்தைக் கிரகிக்கப் படித்தலே வாய்க்குட் படிப்பாகும். இதைச் சிறு வகுப்புகளிலிருந்தே படிப்படியாய் வளர்க்க வேண்டும்.

**இப்படிப்பால் விளையும் நன்மைகள்:**

1. நல்ல மனப் பயிற்சியும், வாழ்க்கையில் மிகுந்த பயனும் தருதல்.

2. வாய்க்குட் படிப்பின்மூலந்தான் விரைவாகவும், அதிக நூல்களையும் படிக்க இயலும்.

3. இதனால் பிறருக்குத் தொல்லை ஏற்படாமல் இருப்ப தோடு, ஒலி உறுப்புகளுக்கும் சோர்வு ஏற்படாமல் ஓய்வு ஏற்படுகிறது.

4. ஒலிப்பிலும், உச்சரிப்பிலும் கவனம் போகாமல், சிந் தனை, கருத்தூன்றல், பொருளுணர்தல் போன்றவைகளில் கவனம் மிகும்.

5. பிற்காலத்தில் மிகுந்த நூல்களைக் கற்க இளமையி லேயே பயிற்சி ஏற்படுகிறது.

6. தன்னம்பிக்கையும், தன்முயற்சியும் ஏற்பட இடமுண்டு.

**ஆசிரியர் செய்துகொடுக்கும் வசதிகள் :**

1. படங்களையும் சொற்களையும் இணைக்கும் பயிற்சி யளித்தல்.

2. கட்டளை அட்டைகளை அளித்து அதன்படி செய்யச் செய்தல்.

3. தபால்காரன் விளையாட்டு, பிள்ளைகளின் முகவரி எழு திய அட்டைகளை அளித்து, அந்தந்த முகவரிக்குரியவரிடம் கொடுக்கச் செய்தல்.

4. பிள்ளைகள் தாமாகப் படித்து விடை காணும் வினுக்கள் அமைத்தல்.

5. வார்த்தைகள் எழுதிய அட்டைகளைக்கொண்டு வாக்கி யங்கள் அமைக்கச் செய்தல்.

6. பலவித வியாபார விளம்பரங்களை அறியச் செய்தல்.

7. படங்களோடு கூடிய சொற்றொடர் அட்டைகளை அறி யச் செய்தல் போன்ற பயிற்சிகள் அளிக்கலாம்.

(எ-டு) விளையாட்டு முறையில் காண்க.

**இப்பழக்கத்தை உண்டுபண்ணுவதற்கான சில பயிற்சிகள் :**

1. **கண் நகர்ச்சி :** இது பார்வையின் வேகத்தைக் குறிப்ப தாகும். ஒரு வரியைப் பார்க்கும்போது, கண் எத்தனைமுறை நிற்கிறது என்பதற்கேற்பப் படிப்பில் விரைவு கூடும் அல்லது

குறையும். இதனைக் **கண் நிறுத்தம்** எனலாம். ஒரு நிறுத்த லுக்குச் சுமார் கால் விநாடி ஆகிறது. இதனைக் **கண் நிறுத்த** அளவு என்பர். ஒரே வரியில் அதிகம் நிறுத்துபவர்கள் விரைவிற் குறைந்தோர் என்றும், குறைத்து நிறுத்துபவர்கள் விரைவில் மிகுந்தோர் என்றும் கொள்ளப்படுவார்கள். நிறுத்தும் கால அளவைக் குறைப்பதோடு, இடங்களையும் குறைத்தால் விரைவு மிகும்.

2. **பிற்போக்கு:** சில இடங்களில் சரியாகப் பார்த்துப் பொருளுணர்ந்து படிக்காமற் போய்விட்டுப் பின்னர் அதற்கே திரும்பி வருவதும் உண்டு. இது **பிற்போக்காகும்.** பிற்போக்கு கள் குறையக் குறையப் படிப்பின் விரைவு பெருகும்.

3. **கண் பாய்ச்சல்:** ஒரு வரி முடிந்தவுடன் கண் அடுத்த வரியின் முதலுக்குப் பாய்கிறது. இது சரியாகவும், விரைவாக வும் போவதற்குப் பழக்கம் வேண்டும்.

4. **கண் பார்வை:** இது விரைவாகப் போவதற்குக் கண் பார்வையும், தெளிவுங்கூடக் காரணமாகும். கண்களில் ஏதா யினும் கெடுதல் இருந்தால், அது பார்வையைப் பறிக்கிறது. சிலர் கண்ணுக்கு மிக அண்மையில் வைத்தும், சிலர் சேய்மை யில் வைத்தும் படிப்பர். இதற்கு **குறும்பார்வை, நெடும்பார்வை** என்பர். இதன் காரணத்தை அறிந்து இரண்டையும் உடனடி யாகப் போக்க வழி தேடவேண்டும். கண்ணிலிருந்து படிக்கும் நூல் சுமார் ஓர் அடி தூரத்தில் இருப்பதுதான் சரியாக வைத்துப் படிப்பதாகும். இதை இளமையிலிருந்தே பயிற்சிக்க வேண்டும்.

5. **உட்காரும் நிலையும், வெளிச்சம் வருதலும்:** படிக்குமிடத் தில் வெளிச்சம் இடப்புறத்திலிருந்தே வருதல் சிறந்தது. எதிரிலிருந்தோ, பின்புறமிருந்தோ வருதல் கூடாது. மிக மங்கலும், மிக ஒளியுமுள்ள வெளிச்சங்கள் தகாதன. ஓடும் புகை வண்டி, பேருந்து போன்றவைகளிலிருந்தும், நடந்துகொண்டும் படிப்பது சரியல்ல. நேராக உட்கார்ந்து படிக்கும் பழக்கத்தையும் வாய்க்குட் படிக்கும் பழக்கத்தையும் முதலிலிருந்தே பயிற்சிக்க வேண்டும். சிலர் முணுமுணுத்துக்கொண்டே வாய்க்குட் படிப்ப

தாக எண்ணுவதுண்டு. உதடும், குரல்வளேயும் இயங்காமல் கண்ணுல் பார்த்து, மனத்திற் கொள்ளுதலே வாய்க்குட் படிப்பு என்பதை உணர்த்தவேண்டும். பாடநூலில் ஒவ்வொரு பகுதியிலும் எளிய பகுதிகளேக் கொடுத்து, நாள்தோறும் ஏனைய பாடங்களிலும் இப்பயிற்சியளித்தல் நற்பலன் நல்கும்.

6. **விரைவை அளந்தறிதல்:** இதுவரை படித்தறிந்திராத ஒரு பாடத்தை ஆசிரியர் படி என்றதும் பிள்ளேகள் விரைவாகவும், வாய்க்குள்ளும் படிக்கத் தொடங்கி, ஒரு குறித்த நேரத்திற்குப் பிறகு நிறுத்து என்றதும் நிறுத்தவேண்டும். அக்கால அளவைக்குள் படித்த வார்த்தைகளேக் கணக்கிட்டு ஒரு நிமிடத்திற்கு எவ்வளவு வார்த்தைகள் என்று கணக்கிடலாம். பழகிய ஒருவர் நிமிடத்திற்கு 80 முதல் 120 வார்த்தைகள் வரை படிக்க முடியும் என்று கணக்கிட்டிருக்கின்றனர். இதில் விரைவு, பொருளுணரும் ஆற்றல் ஆகியவைகளேக் கொண்டு கணக்கிட்டு அறிந்து மதிப்பெண்கள் கொடுப்பதோடு, கோட்டுப் படங்கள் வாயிலாகவும் குறித்துவைக்கலாம். வாய்விட்டுப் படித்தலிலும் இம்முறையைக் கையாளலாம்.

7. **விரைவைப் பெருக்க:** படிக்கும்போது பொருளறியாத சொற்கள் அடிக்கடி தட்டுப்பட்டால் பொருளுணர்தலும், படிக்கும் விரைவும் குறையும் படிக்கும் பயிற்சியளிக்கப் பயன்படுத்தும் நூல்கள் பொருளுணர்ந்து விரைவாகப் படிக்கக்கூடியவையாக இருத்தல் வேண்டும். புத்தகங்களில் புதிய சொற்களே அளவுமீறி கையாண்டிருக்கக்கூடாது. **சொற்சுமை** (Vocabulary burden) மிகக் குறைவாக இருத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் 1000 சொற்களுள்ள ஒரு பாடநூலில் 120 பல்வேறு புதிய சொற்கள் நுழைக்கப்பெற்றிருந்தால் அப்புத்தகத்தின் சொற்சுமை $\frac{1000}{120} = 8 \cdot 3$; அதாவது எட்டு சொற்களுக்கு ஒரு புதிய சொல் வீதம் இருக்கிறது என்பது அதன் பொருள். நம் நூல்களில் 25 சத விகிதம் புதிய சொற்கள் இருக்கின்றன. முதல் ஐந்து வகுப்புகளில் நாள்தோறும் வழங்கும் சொற்களின் பட்டிகள், அவர்கள் வழக்கத்தில் வராத சொற்களின் பட்டிகள் ஆகியவற்றை நன்முறையில் ஆராய்ந்து

தொகுக்கவேண்டும். இதுவரை தமிழில் இவ்வாறில்லாவிடினும் ஆங்கிலத்திலுள்ளதுபோல் நாமும் தயாரித்து வைத்துக் கொண்டு பயிற்சித்தால் புதிய சொற்களின் அறிவு பெருகவும், அதனால் எடுத்த நூலைத் தடங்கலின்றிப் படிக்கும் பழக்கத்தையும் விரைவையும் அதிகரிக்க மாணுக்கர்களுக்கு உறுதுணையாகும் என்பதில் ஐயமில்லை.

## பயிற்சி வினுக்கள்

1. மாணுக்கர்களுக்கு படிப்பு கற்பிப்பதன் நோக்கத்தை ஆராய்க.
2. படிப்பு கற்பிக்கக் கையாளும் முறைகளை விளக்கி, அவைகளில் எது சிறந்தது என்பதை எடுத்துக்காட்டுடன் வரைக.
3. மாணுக்கர்களுக்குப் படிப்பில் ஆர்வத்தை ஊட்டும் வழிகளை விவரித்தெழுதுக.
4. மாணவர்களின் சொற்களஞ்சியத்தைப் பெருக்க நீவிர் கையாளும் வழிகளை வரைக.
5. கீழ் வகுப்புகளுக்கேற்ற படிப்புத் தாள்களின் அவசியத்தையும், அதைத் தயாரிக்கும்போது மனத்திற் கொள்ள வேண்டிய கருத்துக்களையும் தொகுத்து வரைக.
6. வாய்விட்டுப் படித்தலினல் ஏற்படும் நன்மைகளையும், அதைப் பயிற்சிக்கும் முறைகளையும் விளக்கி வரைக.
7. வாய்க்குட்படிப்பின் இன்றியமையாமையையும், இப் படிப்பின் பழக்கத்தை விருத்திசெய்ய ஆசிரியர் அளிக்கும் பயிற்சிகளையும் விவரித்தெழுதுக.
8. மாணுக்கர்பால் படிப்பின் விரைவை உண்டுபண்ண நீவிர் கையாளும் பயிற்சிகளை விவரித்தெழுதுக.

# ஐந்தாம் பிரிவு - செய்யுள்

"நவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார்—தம்முட் குழீஇ,
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவர் பதி"

—நாலடியார்

*செய்யுள் :*

செய்யுளைப்பற்றிக் கூறிய பவணந்தியார், "பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போன்று, சொல்லால் பொருட்கிடனாக வுணர்வினின்று வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்" என்றார். ஒவ்வொரு மொழியினிலக்கியமும் அம்மொழி பேசும் மக்களின் சிறந்த நோக்கம், எண்ணம், உணர்ச்சிகளை அழியாமல் சேமித்துவைக்கும் ஓரெழுத்தோவியமாகும். தமிழ்ச் சான்றோர் தம் மரபின் அகப்புற வாழ்க்கைக்குத் தொடர்புடையதாய் மதிக்கப்படுவன அனைத்தும் செய்யுளுக்குப் பொருளாகத் தக்கவை எனக் கொண்டனர். எனவே எவ்வகையிலாயினும் மக்கள் வாழ்க்கைக்குரியதெல்லாம் செய்யுளுக்கும் ஏற்ற பொருளாகும் என்பது தமிழ்ச் செய்யுள் மரபாய்த் தொன்றுதொட்டு நின்றுள்ளது எனலாம். தமிழில் செய்யுள் என்பது இலக்கியத்திற்கெல்லாம் பொதுப்பெயராய்த் திகழ்ந்தது. "உள்ளுணர்வைத் தெள்ளத் தெளிய செவ்வியதாய்ச் செய்யப்படுவன செய்யுள்" என்றனர்.

தமிழ்ச் செய்யுளைத் தொல்காப்பியர் ஏழு வகையாகப் பிரித்துப் பேசுவார். அவை பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுச்சொல் என்பன. அவற்றை,

"பாட்டுடை நூலே வாய்மொழி பிசியே
அங்கதமுதுச் சொல்லோ டவ்வேழ் நிலத்தும்
வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்"

என்ற சூத்திரத்தால் அறியலாம்.

அடிவரையறை உள்ளனவற்றில் பாக்கள் யாவும் அடங்கும்; அடிவரையறை இல்லனவற்றில் நூல், உரை, பிசி, முதுமொழி, மந்திரம், குறிப்பு என்ற ஆறும் அடங்கும். அக்காலத்தில் மக்கள் தாம் கூறவேண்டிய அனைத்தையும் செய்யுள் வடிவிலேயே கூறினர். இன்றும் படித்தவர்களிலிருந்து பாமரமக்கள்வரை தாலாட்டு, ஒப்பாரி, தென்பாங்கு, ஏற்றம் இறைத்தல், ஓடம் விடுதல், நாற்று நடுதல், சடுகுடு, கும்மி போன்ற அனைத்திலும் பாட்டுக்கள் பெருக்கெடுத்தோடுவதைக் காணலாம். மனித இனம் தான் அநுபவிக்கும் எல்லா இன்பங்களிலும் மேலானதாக பாட்டின்பத்தைதான் பெரிதும் நுகர்கிறதெனின் மிகையாகாது.

தாய்மொழிக் கல்வியில், செய்யுளே உயிர்நிலையான பகுதி எனலாம். சிறந்த புலவர் பெருமக்களுடைய வாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும், பட்டறிவிலிருந்தும் எழும் உள்ளத்துணர்ச்சிகளையும் உயர்கருத்துகளையும் ஓசை இனிமை, சொல்நயம், பொருள் நயங்களோடு வெளிப்படுத்துவது செய்யுள் என்றும், செய்யுளைச் 'சொல் ஓவியம்' என்றும் அறிந்தோம். வியன்கலைகளில் செய்யுள் சிறந்த இடம் பெறுகிறது. ஒன்பான் சுவைகளும் பத்து வகை அழகுகளும் உரைநடைகளை விடச் செய்யுளிலேயே சிறந்து காணப்படும். மனம் ஈடுபடுதற்குரிய ஓசைநயம், 'நெட்டுருச் செய்து கோடற்குரிய பொருளினிமை, சுருக்கம், செறிவு முதலியன செய்யுட்கே உரியனவாகும்.

**செய்யுள் கற்பிப்பதன் சிறந்த நோக்கங்கள் :**

1. செய்யுளைக் கற்பிக்கும்போது புதிய சொற்களின் அறிவு, பொருள் அறிவு, மொழிப் பயிற்சி முதலியன இடையிடையே வரினும், அவைகளே செய்யுள் கற்பிப்பதன் சிறந்த நோக்கங்கள் அல்ல. செய்யுளில் உயிர்நிலைக் கருத்தை உணர்ந்து, புலவர் கருதிய கருத்துக்கள், உணர்ச்சிகள், இயற்கையின் எழில், மக்களின் மாண்பு முதலியவற்றின் அழகையுணர்ந்து, அவ்வெழில்மிகு பொருள்கள்பால் ஆழ்ந்த பற்றை மாணக்கர்களிடையே வளர்ச்சியுறச் செய்யலாம்.

2. செய்யுள் அழகாயிருப்பதோடு மட்டுமின்றி உண்மையை உள்ளபடியே எடுத்துரைக்கிறது. ஆகையால், எல்லாவற்றிலும் அழகோடு உண்மையை உணரும் ஆற்றலை ஒலியிலும், பொருளிலும், சிந்தனையிலும், செயலிலும் பெற்று இன்புறுதலை மாணுக்கர்கள்பால் தோற்றுவிக்கலாம்.

3. மாணுக்கர்களிடையே மன எழுச்சிகளை பல்வகைச் சுவைகளுக்கேற்றவாறு செய்யுள் கிளர்ச்சி செய்கிறது. எந்த மன எழுச்சிகளும், கற்பனைகளும் தோன்றிக் கவிதையாய் பரிணமித்ததோ, அவற்றை அப்படியே மாணுக்கர்கள் உணரும்படிச் செய்யலாம்.

4. செய்யுள் படிப்பது ஓர் உயர்ந்த இன்பமென்பதையும், அதைப் படிக்கும்போது நிகழ்ச்சிகளும் காட்சிகளும் நேரிற் காண்பதுபோலிருப்பதுமட்டுமின்றி இன்னேசை மயமாகவும் விளங்குகிறதென்பதையும், இவ்வின்பத்தை நுகர்தல் வாழ்க்கையையே பண்படுத்தி மக்கட்பண்பை வளர்க்கும் என்பதையும் கற்போர் உள்ளத்தமையுமாறு செய்யலாம்.

5. மேலும், செய்யுள் மாணுக்கர்களின் கற்பனையை வளர்த்து, தாமும் உயர்ந்தோர்போல் ஆகவேண்டுமென்னும் உயர் எண்ணத்தைத் தூண்டுகிறது.

6. செய்யுள் இசையோடு பாடப்படுவதால் இன்பமேற்படுவதோடு இசையிலும் ஆர்வமும் அறிவும் பெற ஏதுவுண்டு.

7. செய்யுள் நடைப் போக்கையறிந்து சொற்றொடர் அமைதியிலுள்ள நுட்பங்களையும், அமைக்கும் திறனையும் பெருக்க இடமேற்படுகிறது.

8. செய்யுளிலுள்ள பல்வேறு இலக்கியங்களையும், பல்வகைப் பாக்களையும் கற்கும்போது இன்பமேற்படுவதோடு சொல்வளம் பெருகவும் ஏதுவாகிறது.

## செய்யுளுக்கும் உரைநடைக்கும் உள்ள வேறுபாடுகள் :

| செய்யுள் | உரைநடை |
|---|---|
| (அ) அசை, சீர், தளை, அடி முதலிய அங்கங்களை உடையது; ஓசை இனிமையும், அணி, எதுகை, மோனை, சொல்நயம், பொருள் நயம் உடையது. | (அ) செய்யுளின் உறுப்புக்கள் அன்றிச் சாதாரண சொற்றொடர்களால் ஆனது. |
| (ஆ) செய்யுள்பாடத்தில் கருத்து, அழகு, நயம் முதலியவற்றினை உணர்ந்து இன்புறும் பயிற்சி தேவை. | (ஆ) புதிய சொற்களை அறிதலும், பொருளை உணரக்கூடிய திறமையும் வேண்டும். |
| (இ) இதில் பதம் பதமாகப் பிரித்துக் கற்பிக்காமல் முழுதும்கருத்துணர்ந்துகொள்ளுமாறு கற்பிக்கலாம். | (இ) இதில் பல பிரிவுகளாகப் பிரித்துப் பொருள் கூறி விவரிக்கலாம். |
| (ஈ) சில முக்கிய செய்யுட்களை மனப்பாடம் செய்து இசையோடு பாடச் செய்யலாம். | (ஈ) மனப்பாடம் செய்ய வேண்டியதில்லை. |
| (உ) செய்யுள் கற்பிப்பதற்கு எடுத்துக்காட்டுக் கதை தேவை. | (உ) இதற்கு எடுத்துக்காட்டுக் கதை தேவையில்லை. |
| (ஊ) செறிவும் சுருக்கமும் கொண்டது. | (ஊ) நெகிழ்ச்சியும் பெருக்கமும் கொண்டது. |
| (எ) கற்பனையை அடிப்படையாய்க் கொண்டது. பொருள்களை முழுப்பொருள்களாகத் தொகுத்துக் கண்டு அழகினை வியப்பது. | (எ) ஆராய்ச்சியையும் காரண காரியத் தொடர்பைக்கொண்டு பொருள்களை ஆராய்ந்து வகுத்துப் பார்ப்பது. |

| | |
|---|---|
| (ஏ) அடி வரையறை உடையது. யாப்பிலக்கண விதிகளுக்குட்பட்டது. | (ஏ) அடி வரையறையின்றிப் பரந்து செல்வது. எதுகை மோனை முதலிய தொடை நலன்களை வேண்டாதது. |
| (ஐ) உளச் சுவைகளையும், உணர்ச்சிகளையும், மனஎழுச்சிகளையும், மெய்ப்பாடுகளையும், பண்படுத்தி மக்கட் பண்பை வளர்ப்பது. | (ஐ) பல கலைகளையும் விரித்துச் சொல்லியும் எழுதியும் வருவதால் இன்பத்துக்குமட்டுமின்றி பரந்த நோக்கை வளர்ப்பது. |
| (ஒ) படித்துச் சுவைத்து இன்புறுவதற்குரியது; கற்பனையை வளப்படுத்துவது. அழகுணர் ஆற்றலை வளர்த்து உருப்படுத்துவது. ஒழுக்கத்தைப் பேணுவது. | (ஒ) பல்வேறு வகை நூல்களையும், பண்புகளையும் புரிந்துகொள்ளவும், ஏராளமான கருத்துக்களைக் கற்கவும் வாய்ப்பேற்படுகிறது. |
| (ஓ) மனத்தை அடிப்படையாய்க்கொண்டு மகிழ்வூட்ட வல்லது. | (ஓ) மூளையை (அறிவை) அடிப்படையாகக் கொண்டு ஆராய்வுக்குரியது. |

**செய்யுள் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதி :**

1. செய்யுள் கற்பிக்கும் நோக்கங்கள் கைகூடுவதற்கு ஆசிரியரே முதலில் அச்செய்யுளில் கவர்ச்சியும், நயம்விரும்பும் ஆவலும், சுவைக்கும் ஆர்வமும் உடையவராய் இருக்கவேண்டும்.

2. செய்யுளைக் கற்பிக்க முற்படுவதற்குமுன் அதன் உட்பொருளை விளக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை விளைத்துப் பின்னர் அதன் உதவிகொண்டு கவியின் எண்ணத்தையும் உணர்ச்சியையும் பிள்ளைகள் உணரும்படி செய்யவேண்டும்.

3. திருத்தமான ஒலித்தலோடு செய்யுளை இடத்திற்கேற்ற இசையுடன் படித்துக் கவியின் கருத்தை வெளிப்படுத்த முயல வேண்டும்.

4. வாய்விட்டுப் படித்தல் செய்யுட் பாடத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும். ஆகையால் ஆசிரியரும் மாணாக்கர்களும் செய்யுளை எந்நிலையிலும் ஏற்ற இசையோடு வாய்விட்டுப் படித்தால்தான் அதன் சொல்லும பொருளும் சுவையும் நன்கு தோன்றி உள்ளத்திற்கு உவகையளிக்கும். இசையென்றால் கேட்பதற்கு இனிமையாக இருக்குமாறு பொருந்தும் இராகத்தில் செய்யுளைப் படித்தால் போதும். தாளம் முதலிய (இசையரங்கில் இருப்பதுபோல்) அமைத்துச் சுரத்தோடு பாடவேண்டுமென்பதில்லை.

5. கதைப் பாடல்களாயின் நடித்துக் காட்டவேண்டும். ஆடல்பாடல்களாயின் ஆசிரியர் கண்டிப்பாய் ஆடியும் பாடியும் காட்டவேண்டும்.

6. பெயரளவில், செய்யுள் கற்பிக்கின்றேன் என்று சிலர் அரிய உரைநடைபோலவே செய்யுளை நடத்துதலும், செய்யுளில் வலிந்தும் நலிந்தும் பொருள்கொண்டு அதை ஒரு சுமையாக்கிக் கவியின் கருத்தைக் கொலைசெய்தல் கூடாது.

7. அளவுக்கு மீறிச் செய்யுளைப் பிரித்துப் பொருள்கூறியும், இளைஞர்கள் சாதாரணமாய்ப் புரிந்துகொள்ளுவதைக்கூட கடினமாக்கவும், வயதிற்கும் வகுப்பிற்கும் பொருந்தாச் செய்யுட்களையும், இலக்கணத்தையும், உணர்ச்சிகளையும் வருவித்துச் செய்யுட் பாடத்தில் ஒரு பயத்தையுண்டுபண்ணியும், ஏராளமான செய்யுட்களைக் கொடுத்து நெட்டுருச் செய்யச்செய்து கடுந்தண்டனை அளித்தும் வருதல் ஆசிரியர் தள்ளத்தக்கச் செயல்களாகும்.

8. கற்பிக்கக்கூடிய செய்யுளின் கருத்துக்களையும், அது சம்பந்தப்பட்ட தயாரிப்பின்றியும் செய்யுள் கற்பிக்க முற்படுதல் கூடாது.

**செய்யுளைக் கற்பிக்கும் முறை:**

1. எல்லாச் செய்யுட்களுக்கும் பழைய முறைப்படி செய்யுளைப் பிரித்துப் **பதவுரை, பொழிப்புரை, கருத்துரை** என்ற வரிசையில் விளக்கம் கூறவேண்டியதில்லை.

2. செய்யுளை முதலில் ஏற்ற இசையுடன் சொற்களைப் பிரிக்காமல் சீர்பிரித்துப் படித்துக்காட்டுவதிலிருந்தே பிள்ளைகள் பாட்டின் கருத்தை ஒருவாறு அறியக்கூடும்.

3. ஆசிரியர் அப்பாடலின் உயிர்நிலைக் கருத்துக்குப்போய் அதை எடுத்துக்காட்டி, அக் கருத்தை நமக்குத் தெரிவிக்கவே அப்பாட்டு புலவரால் பாடப்பட்டது என எடுத்துச்சொல்லி, அக் கருத்து, கதை நிகழ்ச்சி, காட்சி இவைகள்தாம் அப்பாடல் எழுதுவதற்குக் காரணமாய் இருந்தனவென்று எடுத்துக்கூற வேண்டும்.

4. ஒரு பாடல் முற்றுப்பெற்ற ஒரு முழுப்பொருளாயிருக்கிறது. அது தனித்தனி பகுதிகள் என்று கருதக்கூடாது. அழகும் எழிலும் வாய்ந்து நறுமணம் வீசும் மலர் ஒன்றைக் கண்டு மகிழ்பவன் அதன் மணம், நிறம், அழகு, அமைப்பு, வனப்பு முதலிய முழு அழகில் ஈடுபடுகிறான். அதை இதழ் இதழாகப் பிரித்து, எத்தனை இதழ்கள் இருக்கின்றன என்று எண்ணி அல்லது கசக்கி மகிழ்வது இயல்பன்று. அதுபோல் ஒரு செய்யுளையும் கருதவேண்டும்.

5. செய்யுளைக் கற்பிக்க முற்படும்போதே சொல், சொல்லாகப் பிரித்து உரை சொல்லுவது, உரைநடையாக்குவது, உவமை, பொருள் கேட்பது செய்யுட்படிப்பைச் சுவையற்றதாக்கி விடும்.

6. செய்யுளின் பொருள் விளங்குவதற்குரிய அளவில் கீழ் வகுப்புகளில் அரும்பதவுரை முதலிய பொருள் விளக்கங்கள் தரலாம்.

7. புதிய சொற்களின் பொருளையும் இலக்கணத்தையும் கற்பது மட்டும் செய்யுள் கற்பிப்பதன் நோக்கமன்று. மேல் வகுப்புகளில் உவமை, பொருள், உவமைப் பொருத்தம், அணிகள், மேற்கோள்கள், சொல்நயம், பொருள்நயம், இலக்கணக் குறிப்புகள், அரிய சொல்லாட்சிகள் முதலியன கற்பிப்பது நலம்.

8. செய்யுளைக் கட்டாயத்தின்மேல் நெட்டுருச் செய்யச் சொல்லாமல் சிறுவர்கள் தாமாகவே அழகுணர்ந்து விருப்பத்தோடு நெட்டுருச் செய்வதே சிறந்ததாகும்.

9. இடையிடையே வினாக்கள் விடுத்தல் மாணாக்கர்களின் கவனத்தை ஈர்க்க நல்ல வழியாகும். இறுதியில் அவர்களை இசையுடன் பாடச்செய்தல் வேண்டும்.

10. ஆசிரியர் கற்பிக்கவேண்டிய செய்யுளுக்குரிய படங்கள் உதவிப் பொருள்கள் வேண்டுமாயின் அவைகளை முதலிலேயே தயாரிப்புடன் வைத்துக்கொண்டு கற்பிக்க முற்படவேண்டும்.

**செய்யுளைத் தொடங்கும் முறை :**

*செய்யுட் பாடத்தை எவ்வாறு தொடங்குவது* என்ற நிலையில் அநேகருக்குக் குழப்பமேற்படுவது இயற்கையே. இதில் பல முறைகளைக் கையாளுகின்றனர். அவை (1) கவிஞன் வரலாறு கூறித் தொடங்கும் **வரலாற்று முறை**. (2) கடின சொற்களை யெல்லாம் கரும்பலகையில் எழுதிக்காட்டி விளக்கிய பின், செய்யுளைக் கற்பிக்கத் தொடங்கும் **விளக்க முறை**. (3) பாடல் எழுந்த சூழ்நிலையை ஒரு சிறிது விளக்கிப் பாடத்தைத் தொடங் கும் **சூழ்நிலை காட்டும் முறை** (4) கவிதையைப் பற்றியும், அதில் அமைந்துள்ள கருத்துக்கள் பற்றியும் மாணாக்கர் அறிவை சோதிக்கும் வகையில் பல வினாக்கள் எழுப்பியபின் கவிதை யைத் தொடங்கும் **வினாமுறை** (5) பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, இலக்கணக் குறிப்பு, தொடை நயம், அணி நயம் முதலியவற்றைப் பிரித்துப் பிரித்துக் கூறத் தொடங்கும் ***பிரித்துக் கூறும் முறை.***

மேலே காட்டிய முறைகளை எல்லாச் செய்யுட்களுக்கும் கையாளுவது சரியன்று. சிலவற்றிற்கு வரலாறு தேவையாக லாம், சிலவற்றிற்கு சூழ்நிலை தேவையாகலாம், சிலவற்றிற்கு விளக்கம் தேவையாகலாம். அவைகளின் சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு ஆசிரியர்கள் அவைகளைக் கையாளவேண்டுமே தவிர எல்லாவற்றிற்கும் பயன்படுத்துதல் கூடாது. **எந்தப் பாடலாயினும் முதலில் ஆசிரியர் அதை இசையோடு பாடிக்காட்டித் தொடங்கவேண்டுவது மிக்க நலம் பயக்கும். ஆத்திசூடி முதல் சங்க இலக்கியங்கள் வரை அனைத்தையும் பாடமுடியும்; குரல் இனிமை இல்லாவிடினும் கண்டிப்பாய் பாடத்தான் வேண்டும்.** மாணாக்கர் களையும் பாடும்படி செய்யவேண்டும். எந்த நிலையிலும் செய்யுளை உரைநடைபோல் படித்துக்காட்டுவது தவிர்க்கப்படவேண்டிய

தொன்றும் என்பதை ஆசிரியர்கள் மனத்தில் இறுத்திக் கொள்ள வேண்டும். இசையோடு பாடும்போது கவிதையின் கருத்துக்களும், சுவைகளும் தெளிவாய் வெளியாகும் வகையில் பாடவேண்டும். அநேகர் இசையரங்குகளில் பாடும்போது இசை இருக்குமேயொழிய பாடலின் கருத்தும் சுவையும் இருக்காது. எடுத்துக்காட்டாக, பாரதியாரின் "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற கவிதையையும், பாரதிதாசனரின், "கொலைவாளினை எடடா மிகு கொடியோர் செயல் அறவே" என்ற பாடலையும் தூங்கிக்கொண்டே தாலாட்டுப் பாடல் பாடுவதுபோல் நீலாம்புரி இராகத்தில் பாடுவது பாடலின் கருத்தையும், கவிஞனின் எண்ணத்தையும் அழிப்பதற்கொப்பாகும் என்பதை ஆசிரியர்கள் உணர்தல் வேண்டும்.

## செய்யுட்களைப் பொறுக்கி எடுத்தல் :

**தொடக்கநிலை :** தொடக்கநிலைப் பள்ளிகளில், செய்யுட் பாடங்களில் மிகுதியாக மூதுரை, உலகநீதி, ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி, நீதிநெறி விளக்கம் போன்ற அறநெறிப் பாடல்களே பெரும்பாலும் கற்பிக்கப்படுகின்றன. நன்னெறியும் நல்லொழுக்க முறையும் அவர்களுக்கு இப்போது விளங்காது. விளங்காததை விவரிப்பது வீண்தான் எனல் மிகையாகாது. அவர்கள் வீட்டிலும், பள்ளியிலும், சுற்றுச் சூழ்நிலையிலும் கண்டு, கேட்டு, உண்டு, உணரும் பொருள்களைப் பற்றிய பாடங்களைக் கற்பிப்பது நலம் பயக்கும். அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிடக்கூடிய பொருள்கள், செடிகள், மரங்கள், பூக்கள், பறவைகள், விலங்குகள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், ஞாயிறு, திங்கள், விண்மீன்கள் முதலியவற்றையும், ஐம்பொறிகளாலும் உணரக்கூடியனவற்றையும் பற்றிய பாடல்களைக் கற்பித்தல் வேண்டும். அவர்கள் விரும்பிக் கற்கவல்ல இன்னிசையும் எளிமையுமுள்ள செவிலிப் பாடல்கள், பாப்பாப் பாடல்கள், ஆட்டப் பாடல்கள், கதைப் பாடல்கள், விடுகதைகள் இவைகள் எளிதிற் கற்கக்கூடியன.

சிறுவர்களுக்கான பாடல்களை இயற்றியுள்ள கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், அழ. வள்ளி

யப்பா மேலும் பல கவிஞர்கள் நாளிதழ், வார இதழ்களில் எழுதியுள்ளனவுமான பாடல்களைப் பொறுக்கி எடுத்துத் தொகுத்து வைத்துக்கொண்டு, அவைகளை வகுப்புக்கேற்ற முறையில் இசையோடு பாடிக் காட்டி அவர்கள் மனத்தில் பதியுமாறு செய்யலாம்.

**நடுநிலை உயர்நிலை:** நடுநிலை, உயர் நிலை வகுப்புகளில் மாணாக்கர்கள் விரும்பும் முற்கூறப்பட்ட பாடல்களுடன் திருக்குறள், நாலடியார், திரிகடுகம், அறநெறிச்சாரம், நான்மணிக் கடிகை, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்புகழ், பட்டினத்தார் பாடல், தாயுமானவர், இராமலிங்க அடிகள், மஸ்தான் சாகிப், வேதநாயகம் பிள்ளை முதலியவர்களின் பாடல்களையும், புராணங்கள், காப்பியங்கள், தொகை நூல்கள் இவைகளிலிருந்து சிலவற்றையும் கற்பிக்கலாம். மேலும், தனிப் பாடல்கள், பிள்ளைத் தமிழ், சீட்டுக்கவி, தூது, உலா, பரணி, பள்ளு, குறவஞ்சி, சிந்து போன்ற எளிய பிரபந்தங்களையும் சேர்த்துக்கொள்ளலாம். மாணாக்கர்பால் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் ஊட்டவல்ல தற்கால புலவர்கள் (பாரதியார், பாரதிதாசன், திரு. வி. க, தேசிகவிநாயகம் பிள்ளை, சுந்தரம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார்) பாடல்களையும் பொறுக்கி எடுத்தல் சாலச் சிறப்புடைத்தாகும்.

### பயிற்சி வினாக்கள்

1. செய்யுளைப்பற்றி நீவிர் அறிந்தனவற்றை வரைக.
2. செய்யுள் கற்பிப்பதன் சிறந்த நோக்கங்களை வரைக.
3. செய்யுளுக்கும் உரைநடைக்குமுள்ள வேறுபாடுகளை விளக்கி வரைக.
4. செய்யுள் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதியை ஆராய்க.
5. செய்யுள் கற்பிக்கும் முறையை விவரித்தெழுதுக.
6. ஒரு செய்யுளைக் கற்பிக்க முற்படும்போது நீவிர் அச்செய்யுளை எப்படித் தொடங்குவீர் என்பதை எடுத்துக் காட்டுடன் விவரித்தெழுதுக.
7. மாணாக்கர்களுக்குரிய செய்யுட்களைப் பொறுக்குவதில் மனத்திற் கொள்ளவேண்டிய கருத்துக்கள் யாவை?

# ஆறும் பிரிவு - உரைநடை

"கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைக்கின் பிணிபல; தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே; நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து"

—*நாலடியார்*

## பண்டை நிலை :

ஒரு மொழியிலுள்ள இலக்கியங்களை செய்யுள் நடை, உரை நடை என இருவகையாகப் பிரிக்கலாம். தமிழிலுள்ள இரு வகைகளில் உரைநடையை இங்கு ஆராய்வோம்.

தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமிழில் உரைநடை வளர்ந்த வரலாற்றை ஓரளவு அறிந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். தமிழர்களின் அறிவுச் செல்வமெல்லாம் கவிதை வடிவிலேயே காட்சியளிக்கின்றன. சங்க காலத்திலிருந்து இடைக்கால இறுதிவரையில் இலக்கிய இலக்கணங்கள், அகராதிகள், நிகண்டுகள், வாழ்க்கை வரலாறு நூல்கள், கல்வெட்டுகள், மருத்துவ சோதிட நூல்கள், வான நூல்கள், நூல்களின் முகவுரைகள் அனைத்துமே கவிதை வடிவிலேயே எழுந்துள்ளன.

பண்டைத் தமிழர்கள் உரைநடை நூல்களை எழுதாததற்குக் காரணம், இக்காலத்தில் உள்ளவை போன்ற எழுதுகருவிகளும், அச்சுப்பொறிகளும், பிற சாதனங்களும் அக்காலத்தில் இல்லாமலிருந்ததே. அதனால் கற்கும் மாணாக்கர்கள் தாம் கற்க வேண்டிய அனைத்தையும் மனப்பாடம் செய்யவேண்டியிருந்தது. எனவே, மனப்பாடம் செய்வதற்கேற்ற செய்யுள் நடையை மேற்கொண்டு உரைநடையைக் கைவிட்டனர்.

## ஐரோப்பியர் வருகை :

ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகுதான் தமிழில் தனி உரைநடை நூல்கள் தோன்றின எனலாம். வீரமாமுனிவர் இயற்றிய "பரமார்த்திக குரு கதை" தான் தமிழில் முதன் முத

வில் தோன்றிய உரைநடை நூல் என்பதையும், நாவல்களுக்கு வித்திட்டது மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள் எழுதிய "பிரதாபமுதலியார் சரித்திரம்" என்பதையும் நாம் அறிதல் வேண்டும். இவைகளைத் தொடர்ந்து தமிழ் உரைநடை வளர்ச்சியுறத் தொடங்கியது. இராமலிங்க அடிகள், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, தாமோதரம் பிள்ளை, சோழவந்தான் அரசன் சண்முகனார், நாவலர் நாட்டார், மறைமலை அடிகள், விபுலானந்த அடிகள், க. சுப்பிரமணிய பிள்ளை, பண்டிதமணி கதிரேசஞ் செட்டியார், நாவலர் பாரதியார், வரகவி பாரதியார், வ. உ. சிதம்பரனார், வேதநாயகம் பிள்ளை, டாக்டர் சாமிநாத ஐயர், ஆறுமுக நாவலர், செல்வகேசவராய முதலியார், பரிதிமாற் கலைஞர், திரு. வி. க., பெரியார் ஈ. வெ. ரா., அண்ணாத்துரை, இராஜாஜி, பாரதிதாசனார், தேசிகவிநாயகம் பிள்ளை, சுத்தானந்த பாரதியார், இராமலிங்கம் பிள்ளை முதலியவர்கள் பல உரைநடை நூல்களை எழுதினர். இவ்வாறு வளர்ந்த உரைநடை இன்று மிக உயர் நிலையில் உள்ளது.

மறுமலர்ச்சி :

இன்று மறுமலர்ச்சிக் காலம் எனலாம். இழந்த பெருமையை மீண்டும் பெறவேண்டும் என்ற புரட்சிக் கருத்துக்களும், இயக்கங்களும் தோன்றியவுடன், அதற்கொப்ப பல புதுமைகள், மொழிபெயர்ப்புகள், நகைச்சுவைக் கட்டுரைகள், புரட்சிக் கதைக் கட்டுரைகள், சிறுகதைகள், தொடர்கதைகள் கணக்கின்றி தோன்றியுள்ளன. மேலும், செய்தித்தாள்கள் நாளிதழ்கள், வார, பிறை, திங்கள் இதழ்களினாலும், இலக்கிய ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, அரசியல் ஆராய்ச்சிகளினாலும், சிறுவர்க்கான இதழ்களினாலும் உரைநடை உயர்ந்துள்ளது. ஆங்கிலத் தொடர்பால் பலவித நாடக நூல்களும் புதிய முறையில் எழுதப் பட்டு மக்கள் அறிவை மேலும் சிறப்புறச் செய்துவருகிறது. வளர்ச்சியுற்றுவரும் தமிழகம் மேலும் பலவகையாலும் உயர்ச்சியுற்றோளிர மாணாக்கர்களுக்கு உரைநடையறிவையூட்ட ஆசிரியர்கள் நன்முயற்சி எடுக்கவேண்டுவது இன்றியமையாமையே யாகும்.

### உரைநடையின் பொதுப் போக்கு :

தமிழின் உரைநடையைப்பற்றி திரு. ஆறுமுக முதலியார் அவர்கள் கூறுவன : " உரைநடையின் போக்கையும் மரபையும் அன்றுமுதல் இன்றுவரை கருதி உரைநடையினை ஒருவாறு வெள்ளை நடை, கொடும்புணர் நடை, மணிப்பவள நடை, செந்தமிழ் நடை, கொடுந்தமிழ் நடை, கொச்சை நடை, செய்யுள் நடை, இலக்கிய நடை, தருக்க நடை, கலப்பு நடை என்பன போன்று பிரித்துக்காட்டலாம்.

" எல்லோருக்கும் எளிதிற் பொருள் விளங்குவது வெள்ளை நடை. எல்லாச் சொற்களையும் எளிதிற் பொருள் விளங்கவேண்டிப் புணர்ச்சி பிரித்தெழுதாது புணர்த்தெழுதுவது கொடும் புணர் நடை. வட சொற்களையும் தென் சொற்களையும் மணியும் பவளமும் கலந்து கோப்பதுபோல் சரிக்குச்சரி கலந்தெழுதுவது மணிப்பவள நடை. இயன்றவரை அயல்மொழிக் கலப்பின்றித் தனித் தமிழில் இலக்கணப் பிழையின்றி எழுதுவது செந்தமிழ் நடை. திசைச் சொற்கள் மிக விரவுமாறு கலந்து எழுதுவது கொடுந்தமிழ் நடை. கற்றறிவில்லா இழிமக்கள் பேசுவது கொச்சை நடை. செய்யுள் மணம் கமழுமாறு திரிசொற்கள் விரவும் பொருள் அரிதுணருமாறு அமைப்பது செய்யுள் நடை. கற்றோர்க்கு மட்டும் பொருள் விளங்குமாறு, மற்றோர் எளிதில் விளங்காதவாறு உயர்ந்த சொற்களும் வடிவங்களும் அமைய எழுதுவது இலக்கிய நடையாம். இருவர் ஒரு பொருள் பற்றித் தருக்கிப்பது போன்ற முறையில் எழுதுவதும் பேசுவதும் தருக்க நடையாகும். பேச்சு வழக்கில் இன்று பன்மொழிச் சொற்கள் கலந்து இழிவாக வரும் நடையே கலப்பு நடை எனப்படும். இவற்றிற்கேற்ற எடுத்துக்காட்டுகளை ஆங்காங்கு உரை நடை நூல்களில் கண்டு தெளிக."

### உரைநடை கற்பிக்கும் முறை :

**ஆயத்தம்:** ஒரு பாடத்தைத் தொடங்குவதற்குமுன், அப் பாடத்தின் பொருள்பற்றி மாணக்கர்கள் ஏற்கனவே அநுபவத்தின் மூலம் தெரிந்துள்ள பல செய்திகளைப் பற்றிப் பேசியும்,

துணைக் கருவிகளைக் காட்டியும் அவர்கள் புதுப்பொருள்களை அறியும் நிலைக்குப் பக்குவப்படுத்துதலே ஆயத்தமாகும்.

**தொடர்புறுத்தல் :** முன்னரே நடந்த பாடப்பகுதியைக் கற்பிக்கப்போகும் பாடப்பகுதியுடன் பொருத்தல் வேண்டும். இதற்குமுன் நடத்தியதிலுள்ள பொருள்களைப்பற்றிச் சில வினாக்கள் மூலம் நினைவுறுத்திப் புதிய பாடத்தை அத்துடன் தொடர்புறுத்த வேண்டும்.

**புதிய பாடம் :** நடத்தப்போகும் பாடத்தை ஒருமுறை வாய்விட்டுப் படிக்கச் செய்து அவர்களிடம் நேரிடும் உச்சரிப்புப் பிழை, நிறுத்தப் பிழைகளைத் திருத்தம் செய்தல்வேண்டும். பின்பு ஆசிரியர் பகுதிப் பகுதியாக நன்ருகப் படித்துக்காட்டி, அதிலுள்ள கருத்துக்களை விளக்கலாம். அதற்குமுன் அப்பகுதியிலுள்ள புரியாத சொற்களுக்குப் பொருள்கூறி விளக்குவது நலம். பிழைகளை அப்போதே திருத்தாமல் முடிவில் திருத்துதல் வேண்டும்.

**விளக்கமும் வினாவும் :** பாடத்தில் வரும் அருஞ் சொற்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், மொழி நயங்கள், இலக்கணச் சிறப்புக்கள் இவைகளை விளக்கலாம். அதற்குரிய மேற்கோள் கதைகள் இருந்தால் இணைத்துக் காட்டலாம். நடத்திய பகுதியின் பொருளை நன்கு புரிந்துகொண்டார்களா என்பதை அறிய இடையிடையே வினாக்கள் போடுவது மிக்க நலம் பயக்கும். ஆசிரியர் தரும் விளக்கங்கள், மேற்கோள்கள், எடுத்துக்காட்டுகள், பிற காட்சிகள் முதலியவற்றைக் காட்டும்போது மாணுக்கர் மனக் காட்சிகளாகக் காண்பதுபோல் நடிப்புடனும், நகைச்சுவையுடனும், உணர்ச்சியுடனும் நடத்திப் பாடத்தைச் சுவையுள்ளதாகவும், உயிருள்ளதாகவும் ஆக்கி மாணுக்கர்களை மெய்மறக்கச் செய்யும் அளவு கற்பிக்கும் போக்கு அமைதல் வேண்டும்.

**கரும்பலகை விளக்கம் :** பாட இறுதியில் சில வினாக்கள் விடுத்து விடை காணலாம். விடைகளின் சுருக்கத்தையும், சில பயிற்சி வினாக்களையும் கரும்பலகையில் வரையலாம். இடையிடையே பொருத்தமான இடத்தில் ஓவியம் வரைந்துகாட்டவும்

சொல்வளத்திற்காகவும் கரும்பலகையைப் பயன்படுத்த வேண்டும்.

முடிவுப் பயிற்சி: கற்பித்த பாட சம்பந்தப்பட்ட கருத்துக்களை மாணுக்கர் மனத்திலிறுத்த உரையாடல் நிகழ்த்தல், நடித்துக் காட்டல், சொல்வதெழுதுதல், கட்டுரைகள் வரைதல் போன்ற பயிற்சிகள் அளிக்கலாம்.

## ஒரு நல்ல பாடநூலின் இலக்கணம்

1. மாணுக்கர்கள் கற்கவேண்டிய பல்வேறு பொருள்களையும் ஒருங்கே எளிதாகவும் எப்பொழுதும் தரக்கூடியவை பாடநூல்களே. ஆனால் ஆசிரியருடைய உதவிக்காக இவை உபயோகப்படலாமே தவிர அவருக்குப் பதிலாக இவற்றைக் கொள்ளலாகாது.

2. முறைகள் நன்ருய் விளக்கமுற்று அவற்றை உள்ளடக்கி எழுதப்பட்டிருக்க வேண்டும்.

3. நூல்கள் ஒரே வரிசையாக அமைந்திருக்கவேண்டும். அஃதாவது தொடர்ச்சியாக 1 முதல் 5 வகுப்புகள் வரை, முதல் படிவம் முதல் மூன்ருவது படிவம்வரை எனப் படிப்படியாக அமைந்திருத்தல் நலம்.

4. கீழ்வகுப்புகளுக்கு ஒரே ஆசிரியரால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் பொருள் அறிவு, சொற்களஞ்சியம், இலக்கண அறிவு முதலியன யாவும் தொடர்ச்சியாகவும் படிப்படியாகவும் வளர்ந்து வரும்.

5. அந்தந்த வகுப்புப் பிள்ளைகளின் வயது, அறிவு, மன வளர்ச்சிக்கு ஏற்றவாறு படிப்படியாயும் பாடங்களின் எளிமை அல்லது கடினம் அமைந்திருக்கவேண்டும்.

6. இலக்கண அமைதிகளும், சொற்களும், சொற்றொடர்களும் மரபுத்தொடர்களும் உள்ளடக்கி வகுப்புக்குத் தகுந்தவாறு இருத்தல் வேண்டும்.

7. நூலில் உள்ளடங்கியிருக்கும் சொற்கள், தொடர்கள் இனிமையும் எளிமையும் உடையதாய் மாணுக்கர் மனத்தில்

பொருளுணர்த்தி அவர்கள் எளிதாய் வழங்கக்கூடியனவாய் இருத்தல் வேண்டும்.

8. வாய்மொழி, எழுத்து ஆகியவைகள் மாணுக்கர் தாமே புரிந்து கட்டுரை எழுதவும், பார்த்து எழுதுதல், சொல்வ தெழுதுதல் போன்றவைகளுக்குகந்தவாறும் பாடங்கள் அமை தல் வேண்டும்.

9. மாணுக்கர்களின் பற்றையும் ஆராய்வூக்கத்தைத் தூண்டிக் கவனத்தையும் இழுக்கவல்ல கதைப் படங்கள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், நகைச்சுவைக் கருத்துக் கள், விடுகதைகள், நாட்டுப் பாடல்கள், சிலேடைச் செய்யுள்கள், வரலாறுகள், வழிச்செலவுகள், விஞ்ஞானப் புதுமைகள் ஆகிய வைகளுடன் இன்றைய உலகில் இன்புற்றுணரும் கருத்துக்கள் பெருகியும் இருத்தல் வேண்டும். இக்காலக் கவிஞர்களின் எளிய இனிய பாடல்கள் படங்களுடன் அமைந்திருத்தல் சாலச் சிறப்புடைத்தாகும்.

எடுத்துக்காட்டு :



காந்தி தாத்தா

காந்தி தாத்தா நம்தாத்தா
கருணை மிக்க பெருந்தாத்தா
சாந்த மூர்த்தி என்றென்றும்
சத்திய மூர்த்தி நம்தாத்தா.

ஜவகர்

மனித ருக்குள் மாணிக்கம்
மக்கள் போற்றும் தலைவராம்;
புனித மான விடுதலை
பெற வுழைத்த ஜவகராம்.



## நமது கொடி



வண்ணங்கள் காட்டுது நமது கொடி
வானத்தை முட்டுது நமது கொடி
எண்ணங்கள் ஊட்டுது நமது கொடி
என்னென்ன காட்டுது நமது கொடி.

## தாலாட்டு

ஆராரோ ஆராரோ
ஆரிவரோ ஆராரோ.
சூடா மணியே! துலக்கமாய் நின்றுவிரும்
வாடா மலரேஎன் மரகதமே கண்வளராய்.
கற்கண்டு சீனி கனிவகைகள் எல்லாம்உன்
சொற்களால் நானடையும் சுகத்தினுக்கே ஈடாமோ?

## கப்பல்

கப்பல் நல்ல கப்பலாம்
கடலில் செல்லும் கப்பலாம்
அக்க ரைக்குச் செல்லவே
ஆட்கள் ஏறும் கப்பலாம்.



## யானை



டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
கோயில் யானை வருகுது
குழந்தைகளே பாருங்கள்.
டிங் டாங் டிங் டிங்
டிங் டாங் டிங் டிங்
மணியை ஆட்டி வருகுது
வழியை விட்டு நில்லுங்கள்.

—அழ. வள்ளியப்பா

10. வகுப்புக்குத் தகுந்த பெரிய எழுத்திலும், போதிய இடம்விட்டும் இருத்தல் வேண்டும்.

(எ-டு) ஒன்று முதல் இரண்டு வகுப்புகளுக்கு 18 'பாயின்ட்' எழுத்திலும், மூன்று, நான்கு, ஐந்து வகுப்புகளுக்கு 14 'பாயின்ட்' எழுத்திலும், முதற் படிவத்திற்கு மேற்பட்ட நூல்கள் 12 'பாயின்ட்' எழுத்திலும் நன்கு அச்சிடவேண்டுமென்ற கல்வித் துறையினர் விதியை ஏற்றிருத்தல் வேண்டும்.

11. பாடநூலின் புறத்தோற்றம் மாணுக்கர் கண்ணையுங் கருத்தையுங் கவரும் வண்ணம் நல்ல அட்டை, வண்ணப்படம், கெட்டியான கட்டமைப்பு, அழகான தாளில் அழகான அச்சு முதலிய கூறுகள் அமைந்திருத்தல் வேண்டும்.

12. நடை எளிமையும், இனிமையும், தூய்மையுங் கொண்டிருத்தலோடு, ஏற்ற இடங்களில் பயிற்சிகள், அருஞ்சொல் விளக்கங்கள், விஞக்கள், இலக்கணக் குறிப்புகள், வீட்டு வேலைகள் முதலியன அமைந்திருத்தல்வேண்டும்.

13. அரசியலார் ஒப்புதல் பெற்றும், அவர்கள் பாடத் திட்டத்திற்குட்பட்டும் பாடநூல்கள் இருத்தல் வேண்டும்.

14. கலை, இசை, சிற்பம், கூட்டுறவு முறைகள், அரசியல் பகுதிகள், அறிஞர்களின் வரலாறுகள் முதலியன பற்றிய உரையாடலும், சிறு நாடகங்களும் அமைந்திருத்தல் வேண்டும்.

15. குறிப்பாக மாணுக்கர்களின் உற்ற நண்பனுகவும், உயர் நல்வழிகாட்டியாகவும் பாடநூல் அமைவது சாலச் சிறந்ததாகும்.

பள்ளியில் நூல்நிலையம் இருக்கவேண்டியதன் இன்றியமையாமை:

மாணுக்கர்களின் பொது அறிவை (அகன்ற படிப்பை) நூல் நிலைய வகுப்புகளினுல் வளர்க்கலாம். இதனுல் மாணுக்கர்களின் மொழி அறிவும், பொருளறிவும் வளரும். ஆசிரியர் கற்பித்தல் மட்டும் போதாது, மாணுக்கர்களும் தன்முயற்சியால் அறிவைப் பெருக்க நூல் நிலையம் பேருதவியாகிறது. பள்ளி நூலகத்தில்

பொது நூலகம், வகுப்பு நூலகம், மேற்கோள் நூலகம் என்று முப்பிரிவுகள் இருக்கும்.

**வகுப்பு நூல் நிலையத்தில் வைக்கத்தகுந்த நூல்களின் வகைகள் :**

1. *நிகழ்ச்சிகளும் செயல்களும் மல்கிய கதை நூல்கள்.*

2. வழிச் செலவுகளைப்பற்றியனவும் புதியநாடுகளைப்பற்றியனவுமான நூல்கள்.

3. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவைகளைப்பற்றி கண்ணையுங் கருத்தையும் கவரும் விளக்கப் படங்களுடன் கூடிய நூல்கள்.

4. நம்நாட்டு, அயல்நாட்டுக் காட்சிகளையும், பழக்க வழக்கங்களையும் விளக்கிக்கூறும் நூல்கள்.

5. பல்பொருள்பற்றியனவும், பல்வேறு நடைகள் கொண்டனவுமான நூல்கள்.

6. பழைமை, புதுமைகளையும், பல்வேறு நாடுகளின் வரலாற்றுப் பண்பாடுகளையும் எடுத்துக்காட்டும் நூல்கள்.

7. அழகுணர் ஆற்றலை வளர்க்கக்கூடிய நூல்கள்.

பொது அறிவையும், அறிவியல் அறிவையும் வளர்க்கவல்ல நூல்களையும் தேர்ந்தெடுத்து, அந்தந்த வகுப்புக்கும் வயதுக்கும் உகந்த முறையில் அளித்துப் படிப்பில் ஆர்வமும், சுயமுயற்சியும் வளர்ந்து அறிவு பெருக ஆசிரியர் உறுதுணையாய் நிற்றல் வேண்டும்.

**மாணுக்கர்களின் அகன்ற படிப்பின் நோக்கமும் அதை வளர்க்கும் வழிகளும் :**

நாம் மொழிப் படிப்பை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை: (1) ஆழ்ந்த படிப்பு, (2) அகன்ற படிப்பு என்பனவாகும். பள்ளிகளில் ஆழ்ந்த படிப்பிற்காகப் பாடநூல்களைக் கற்பிக்கின்றோம். பல வகுப்புகளிலும் இப்படிப்பிற்காகவே பல பாட நூல்கள் வைக்கப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள சிறந்த உரைநடை, செய்யுட் பகுதிகளை மாணவர் நுட்பமாய் ஆராய்ந்து படித்துப்

பொருள் உணர்வதோடு, சொல் நயம், பொருள் நயங்களைச் சுவைத்து இன்புறுவதும் இப்படிப்பின் நோக்கமாகும். மேலும் கதை, நாடகங்களில் வரும் பாத்திரங்களின் குணங்களையும், இயல்புகளையும் அறிதலும், பாட அமைப்பின் ஒழுங்கையும், இலக்கணக் குறிப்புகளையும், அமைதிகளையும், சொற்றொடர் மரபுத் தொடர்களையும் உணர்வதோடு, தம் வாக்கிலேயே அவற்றை வைத்து வழங்கப் பயில்வதும் **ஆழ்ந்த படிப்பின்** குறிக்கோளாம். இது மேலெழுந்தவாரியாய் நுனிப்புல் மேயாமல் ஆழ்ந்து நுட்பமாக உணர்ந்து கவனிக்கும் வழக்கத்தை வளர்க்கும்.

ஆனால், ஆழ்ந்து படிக்கின்ற பாடப் புத்தகங்களுடன் விரைவாகவும், வாய்க்குள்ளும் படிக்கவேண்டிய வேறொரு படிப்புமுண்டு; இதுவே **அகன்ற படிப்பா**கும்.

**அகன்ற படிப்பின் நோக்கங்கள்:** மொழி அறிவை வளர்த்தல், சொற்களஞ்சியத்தைப் பெருக்குதல், உலக அறிவையும் பொது அறிவையும் வளர்த்தல், படிப்பில் பற்றை உண்டாக்கித் தாமாகவே படிக்கவேண்டுமென்ற ஆவலையும் பழக்கத்தையும் தோற்றுவித்தல், இலக்கியத்தை விரைவாகப் படித்துப் பொருளுணர்தல், சிந்தனையையும் கருத்தையும் வளர்த்துவரல், சிந்தனையின் ஓட்டத்தை வளர்த்தல், வாய்க்குட் படிப்பதால் காலம் முயற்சிச் செலவுகள் குறைவதாலும் ஒலி உறுப்புகள் இயங்காமையினால் தளர்ச்சியும் சோர்வுமின்றிக் குறைந்த நேரத்தில் மிகுதியாகப் படித்தல், தன்னம்பிக்கையையும் தன்முயற்சியையும் வளர்த்தல், காலத்தை வீணாக்காமல் ஓய்வு நேரத்தைத் தூய வழியிற் செலவழித்தல், அவல கவலைகளை மறந்து உடற்சோர்வு உளச்சோர்வுகளை நீக்கி ஓய்வு பெறுதல், பிற்கால வாழ்க்கையில் பிறர் உதவியின்றித் தாமாகவே வேண்டியவற்றைப் படித்து இன்புறுவதற்குப் பழகுதல் முதலியன இப்படிப்பின் சில சிறந்த நன்மைகளாகும். இதற்கென்றே இடைநிலை, உயர்நிலை வகுப்புகளில் துணைப்பாட நூற்படிப்பும் (Non-Detailed study) வைத்திருக்கின்றனர். எளிய இனிய துணைப்பாட உரைநடை நூல்களைத் தொடக்கநிலையில் 4, 5ஆம் வகுப்புகளிலேயே தொடங்கலாம்.

அகன்ற படிப்பை வளர்க்கும் சில வழிகள் :

1. துணைப்பாட நூற்படிப்பு.

2. நூல் நிலையப் படிப்பு.

3. வார, திங்கள் இதழ்களுடன் செய்தித்தாள்களையும் படிக்கப் பழகுதல்.

4. சிறுவர்க்குரிய செய்தித்தாள்களுடன் கதைநூல்களையும் கற்கச் செய்தல்.

5. நிகண்டுகள், அகராதிகள், சொல்லாட்சி, சொற்றொடர் மரபுத் தொடர்கள், பழமொழிகள், சொற்பிறப்பியல் முதலியவற்றைக் கூறும் அகராதிகளைக் கற்கச் செய்தல்.

6. ஆராய்ச்சி நூல்கள், இலக்கியம், மொழி நூல், இலக்கிய ஆராய்ச்சி, நாட்டு வரலாறு முதலியவற்றைப் படிக்கச் செய்தல்.

7. தனிப்பாடல்கள், நாட்டுப்பாடல்கள், செவிவழிப் பாடல்கள், கும்மி, சிந்து, தெம்மாங்கு, களிப்பு, குறம், பள்ளு முதலியவற்றைக் கற்கச் செய்தல்.

8. சிறப்புப் பெயர் அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் இன்னோரன்ன பிற நூல்களையும் கற்கச்செய்தல்.

## பயிற்சி வினாக்கள்

1. *உரைநடைபற்றி நீவிர் அறிந்தனவற்றை வரைக.*
2. *உரைநடை வளர்ச்சியைப்பற்றி விவரித்தெழுதுக.*
3. *உரைநடைப் பாடத்தை உமது மாணக்கர்களுக்கு எப்படிக் கற்பிப்பீர் என்பதை விளக்கி வரைக.*
4. *ஒரு நல்ல பாடநூலின் இலக்கணத்தை வரைக.*
5. *பள்ளியில் நூல்நிலையம் இருக்கவேண்டியதன் இன்றியமையாமையையும், அதில் வைக்கத்தகுந்த நூல்களையும் வரைக.*
6. *மாணக்கரின் அகன்ற படிப்பை வளர்க்கும் சில வழிகளை விவரித்தெழுதுக.*

# ஏழாம் பிரிவு - இலக்கணம்

"இலக்கிய மின்றி இலக்கண மின்றே
இலக்கண மின்றி இலக்கிய மின்றே
எள்ளின் றெண்ணெய் யெடுப்பது போல
இலக்கியத் தினின் றெடுப்பது இலக்கணம்"

—அகத்தியனார்

**மொழியின் உயிர்நாடி இலக்கணம் :**

ஒரு நாட்டின் அறிவு ஆற்றலையும், மொழி வளத்தினையும், "அடுத்தது காட்டும் பளிங்குபோல்" எடுத்துக்காட்டுவன அந் நாட்டின் இலக்கிய இலக்கணங்களாகும். எனவே, நல் இலக் கிய இலக்கணங்களையுடைய நன்மொழியினையும், சீரிய அறிவு ஆற்றல்மிக்கத் திறனையும் பெற்று ஒருகாலத்தில் உயர்ந் தோங்கியிருந்த ஒரு நாடு, அவ்வாற்றலை இழந்து இழிவுற்று இருக்குமாயின், அந்நாட்டின் பின்னோர் தம் பண்டை இலக்கிய இலக்கணங்களைக் கற்கும்போது அவைகளின்மூலம் பண்டோர் நிலையினை யுணர்ந்து மறுமலர்ச்சியுடன் மீண்டும் இழந்த பெற் றியைப் பெற்று உயர்வடையக்கூடும் என்பதை ஈண்டு சிறப் பொடு திகழும் பல நாடுகளின் வாயிலாய் அறிகின்றோம்.

மக்களது இயற்கை வேட்கையால் நெஞ்சிடை நிகழும் நினைப்பினைப் பிறர் அறியுமாறு ஒரு குறிப்பிட்ட உருவமமைத்து வெளியிடுதலே மொழி என்றறிந்தோம். இது நாகரிக வளர்ச் சிக்கேற்ப சிறந்து வளர்ந்து வருவதோர் மக்கள் ஆக்கப் பொரு ளாகும். நாகரிகம் முதிருந்தோறும் மொழி மாறுபட்டு, சொற் களைச் சிதைத்து வழங்கும் வழக்கம் மாந்தர்பால் பற்பல இன் னல்களின் விளைவால் விளைகின்றன. நம் அருந்தமிழிலும் இவ்வாறு வெவ்வேறு மொழி வழங்கும் மக்கட் கூட்டுறவாலும், வேற்றுமொழிகள் கலப்பாலும் சொற்கள் மேலும் மேலும் சிதை வுறும் நிலை தற்போது ஏற்பட்டிருந்தபோதிலும், இந்நிலை எற் படும் என்ற நோக்கத்தோடேதான் நம் பண்டோர் மொழியினை வழங்கும் முறை காட்டி வரம்பறுத்து இலக்கண நூல்கள் வகுத்துத் தமிழ் மொழியை ஒழுங்குபடுத்தி நிறுத்துவாராயினர்.

இவ்வாறு ஒழுங்குபடுத்தப்படாத மொழிகள் சிதைந்து வழங்கி, இறுதியில் உருக்குலைந்து ஒழிந்துபோவது திண்ணம். அவ்வாறு வழக்கிழந்து சிதைந்து அழிந்த மொழிகள் யவனம், இலத்தீன், எபிரேயம், பழைய பாரசீகம், ஆரியம் முதலியன ஆகும். நம் பைந்தமிழ் மொழியோ, "மண்ணிடைச் சில விலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ" என்று ஆன்றோர் கூறியவாறு உலகிலேயே முதுமை பெற்றும் தெளிந்த இலக்கண வரம்பினையுடையதாய், பன்மொழிகள் வந்து கலப்பினும் வழக்கழியாமலும், சிறப்பு குன்றாமலும், தளராது வளரும் உயர்திறமும், இறவா இளமை வளமும் எய்திச் சாவா செவ்விய மொழியென இன்றளவும் சிறப்புடன் திகழ்ந்து வருவதாகும்.

**இலக்கணத்தால் விளையும் நன்மைகள் :**

மொழிப் படிப்பில் இலக்கணம் கற்பிப்பது அவசியமா, இல்லையா என இக்காலத்தில் முறைவல்லார்களிடையே ஒரு வினா எழும்பியுள்ளது. இலக்கண அமைதி இல்லாமல் சொல் இல்லை, சொற்றொடர் இல்லை, செய்யுள் இல்லை, உரைநடை இல்லை, பேச்சும் இல்லை எனலாம்.

1. இலக்கணம் மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் உதவும் கருவியாகும்.

2. மொழியின் அமைப்பை இது நமக்கு நன்றாய் விளக்கிக் காட்டுகிறது. மொழிகளுக்கு இலக்கணமே இன்றியமையாத அடிப்படையாகும்.

3. பேசப்படும் வழக்காற்றில் காணப்படும் மொழி மரபுகளை நமக்குத் தெற்றென எடுத்துக்காட்டுவது இலக்கணமே.

4. மொழியை ஒழுங்காகக் கற்கவும், கற்பிக்கவும் அதற்கேற்ற முறைகளை மேற்கொள்ளவும் குறிப்புகளை நல்குவதும் இலக்கண அறிவேயாகும்.

5. மாணாக்கர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தங்கள் எழுத்தும் பேச்சும் செம்மையாய் இருக்கின்றனவா என்பதைத் தாங்களே உணர்ந்துகொள்வதற்கு இஃது ஏற்ற உரைகல்லாகும்.

6. தங்கள் எழுத்திலும் பேச்சிலும் பிழைகள் நேரிடு மாயின் திருத்திக்கொள்ளுவதற்கும் இஃது உதவும்.

7. செய்யுட்களைப் பிரித்துப் பொருள் காண்டலுக்கும், சிலேடைப் பொருள் கண்டு மகிழ்வதற்கும், செய்யுள் இயற்ற லுக்கும், செய்யுட்களில் வரும் இலக்கண அமைதிகள், அரிய சொல்லாட்சிகள், அணிகள் முதலியவற்றை அறியவும் இலக் கண அறிவே துணைபுரிகிறது.

*8. தமிழிலக்கணத்தைக் கற்பிக்கும்போது அதற்குச் சம மான ஆங்கில இலக்கணச் சொற்களையும் தொடர்புறுத்திப் பயிற்று வித்தல் நலம் பயக்கும்.

(எ-டு): பிரதி பெயர்ச்சொல் (Pronoun), சிறப்புப் பெயர்கள் (Proper nouns), தழுவு சொற்கள் (Adjectives and adverbs), பெயர்ச்சொல் (Noun), வினைச்சொல் (Verb), எண் (Number), பால் (Gender), இடம் (தன்மை, முன்னிலை, படர்க்கை) (Person), எழுவாய் (Subject), பயனிலை (Predicate), செயப் படு பொருள் (Object).

பள்ளிக்கூடங்களில் இலக்கணம் வெறுக்கப்படுவதன் காரணங்கள் :

1. தொடக்க வகுப்புகளிலேயே இதை ஒரு பயங்கரமான பாடமாக்கிக் கற்பிக்க முற்படுவது.

2. முதலிலேயே விதிவிலக்கு முறையிலும், தனியாகவும் இலக்கணத்தைக் கற்பிப்பது.

3. தெரிந்ததிலிருந்து தெரியாததற்கும், எளிதிலிருந்து அருமைக்கும், தெளிவிலிருந்து சிக்கலுக்கும் போகவேண்டும் என்னும் அடிப்படையான கல்வி பற்றிய கொள்கைகளுக்கு முற்றிலும் மாறாகக் கற்பிப்பது.

4. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற முறை யில் இலக்கணத்தைக் கற்பிப்பது காரண காரிய முறைக்கு ஒத்த தெனினும் கீழ்வகுப்புகளுக்கு இம்முறை பொருந்தாததோடு, உளநூல் முறைக்கும் புறம்பானதாகும்.

5. மொழிப்பாடத்துடனும் கட்டுரையுடனும் பொருத்திக் காட்டாமல், இலக்கணத்தைத் தனிப்பாடமாக நடத்தி, ஆசிரியரே மாணுக்கர்களிடம் வெறுப்பை வளர்ப்பது.

6. நடைமுறையிலும், வாழ்க்கையிலும் வேண்டியது, வேண்டாதது என்று இல்லாமல் எல்லா விதிகளையும் கற்பிப்பதோடு சூத்திரங்களைக் கட்டாயமாக நெட்டுருச் செய்ய வற்புறுத்துவது.

7. எடுத்துக்காட்டுகளை மாணவர் தம் வாழ்க்கையில் குறுக்கிட்டு, அவர்கள் கண்டுணர்ந்து பற்று வைக்கக்கூடிய பொருள்களினின்றும் பொறுக்கி எடுக்காமல், பழைய இலக்கண நூல்களில் கூறியவாறே கூறுதல்.

8. அதிகமாக எடுத்துக்காட்டுகள் காட்டாமலும், மாணவர் ஒவ்வொருவரையும் அவர்தம் வாக்கிலேயே இலக்கணக் குறிப்பு முதலியவற்றைப் பயிற்ருமை.

9. ஆசிரியரே பற்றும் விருப்பமும் கொண்டு மற்றப் பாடங்கள் நடத்தும் சுவையை இதில் செலுத்தாமல் இலக்கணத்தை வெறுப்போடு கற்பிப்பது.

10. விளையாட்டுகளையும் தனித்தனிப் பயிற்சி முறைகளையும் இலக்கணப் படிப்பிற் புகுத்தாமை.

**இலக்கணம் கற்பிக்கும் பழைய (விதிவிளக்க) முறையும், புதிய (விதிவரு) முறையும்:**

| பழைய (விதிவிளக்கு) முறை | புதிய (விதிவரு) முறை |
| --- | --- |
| 1. பொது விதியிலிருந்து எடுத்துக்காட்டுகளுக்குப் போகிறது. | 1. எடுத்துக்காட்டுகளிலிருந்து பொதுவிதிக்குப் போகிறது. |
| 2. மாணுக்கர்கள் புதிதாக ஒன்றையும் கண்டறிவதில்லை. முன்னர் ஒருவர் கண்டறிந்ததை எடுத்துக்காட்டுகளில் பொருத்திப் பார்ப்பது. | 2. புதியவற்றை மாணுக்கர்களையே கண்டுபிடிக்கச் செய்கிறது. |

| | |
|---|---|
| 3. நடந்த பாடத்திலிருந்து புது அறிவு கிடைப்பதில்லை. | 3. பாடம் நடந்தபிறகு மாணாக்கர்கள் புது அறிவினைப் பெறுகின்றனர். |
| 4. இம்முறை விரைவாகப் போகும்; காலச் செலவு குறைவு விரைவாய்ப் போயினும் பயன் உறுதியாக அமையும் என்று சொல்வதற்கில்லை. | 4. இம்முறை மெதுவாகச் செல்லும். மெள்ளப் போனாலும் பயன் உறுதியாய் அமையும் என்பதில் ஐயமில்லை. |
| 5. தெளிவாக அனைவர்க்கும் விளங்குவது அரிது. அறிந்ததுபோல் மாணாக்கர் கருதினும் பின்பு குழப்பமேற்பட இடமுண்டு. | 5. தெளிவாய் அனைவர்க்கும் விளங்கும். பிற்போக்கு மாணாக்கர்களும் பின்பற்ற முடியும். |
| 6. உளநூலுக்கு ஏற்ற முறையன்று. காரண காரிய முறைக்கே ஏற்றது. | 6. தெரிந்ததிலிருந்து தெரியாததற்குப் போதல் என்ற உளநூல் கொள்கைக்கு ஒத்தது. |
| 7. மாணாக்கர் பிறர் உதவியை எதிர்பார்த்தே கற்க நேரிடுகிறது. ஆயினும் பிற்கால வாழ்க்கையில் அவர்கள் நெட்டுருச் செய்துள்ள சூத்திரங்கள் பேருதவியாக இருக்கலாம். | 7. பிறர் உதவியின்றி கற்கும் மாணாக்கரின் தன்னம்பிக்கையை வளர்க்கிறது. ஆனால், அதிகமாக சூத்திரங்கள் நெட்டுருச் செய்யாமையால் நூல்களைத் தேடி அலைய நேரிடலாம். |
| 8. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற வரிசையில் கற்பிக்கப்பட்டது. இது யுக்திவாத (Logical Method) முறையாகும். சுவையற்றது. | 8. பிள்ளைகள் கருத்துக்களை சொற்றொடர் மூலம் வெளியிடுவதுபோல இலக்கணத்தையும் சொற்றொடர், சொல, எழுத்து என்ற இயற்கை மூலம் கற்பிப்பதால் சுவையோடு கற்பர். |

| | |
|---|---|
| 9. இலக்கணத்தைப்புரியாத தொடக்கநிலையிலேயே கற்பிப்பதால், அவர்களுக்கு வெறுப்பு ஏற்பட ஏதுவாகிறது. | 9. இலக்கியங்களில் ஓரளவு தேர்ச்சிபெற்றபிறகு கற்பிக்கப்படுவதால் வெறுப்பின்றி மாணுக்கர் கற்க ஏதுவாகிறது. |
| 10. பிற மொழிச் சொற்கள் கலப்பதை சூத்திரங் கொண்டே விளக்க இயலும். | 10. பிற மொழிச் சொற்கள் தமிழிற் கலக்கும் வகையைப் புதிய முறையில் ஒப்பிட்டுக்கூற ஏது வாகிறது. |

மாணுக்கர்களுக்கு இலக்கணத்தை விதிவரும் முறையில் கற்பிக்கும் முறை :

விதி வரும் முறை என்பது எடுத்துக்காட்டுகளிலிருந்து இலக்கண விதியை அறிந்து அமைத்துக்கொள்ளும் முறையாகும். (பழைய முறையில் அதாவது விதி விளக்க முறையில், விதிகளையும் சூத்திரங்களையும் கூறியபின் எடுத்துக்காட்டுகள் அளிக்கப்பட்டன. எழுத்து, சொல், யாப்பு, அணி என்ற முறையிலும் கற்பிக்கப்பட்டது) புதிய உளநூல் முறைப்படி, பல எடுத்துக்காட்டுகளைக் கொடுத்து அவற்றைக் கவனிக்கச் செய்து, அவற்றிலிருந்து மாணவர்களே விதிகளை யூகித்து அறியும் முறையே விதிவரும் முறையாகும். முன்பே இவைகளை ஆராய்ந்தோமெனினும் சில எடுத்துக்காட்டுகள் தருதல் நலம் பயக்கும்.

எடுத்துக்காட்டு :

கண்ணன் வந்தான் — எவன் வந்தான் ?
எழும்பூரில் இருக்கிருர் — எவ்வூரில் இருக்கிருர் ?
அப்பா வந்தார் — யார் வந்தார் ?
பாடகர் வந்தார் — பாடகரா வந்தார் ? பாடகரோ வந்தார் ?
கிட்டு வந்தார் — கிட்டு ஏன் வந்தார் ?
கோபாலன் வந்தான் — கோபாலனே வந்தான் ?

மாணவர்கள் மேற்கொண்ட சொற்றொடர்களைக் கவனித்து முன் உள்ள சாதாரண சொற்றொடர்களை வினாக்களாக மாற்றிய எழுத்துக்கள் எவை? அவை வார்த்தைகளில் எங்கெங்கு வந்துள்ளன? அவற்றுள் வார்த்தையின் முதலில் வந்துள்ள

எழுத்துக்கள் எவை? வார்த்தையின் கடைசியில் வந்துள்ளவை எவை? வார்த்தையின் முதலிலும் கடைசியிலும் வந்துள்ள எழுத்து எது? எனக் கவனித்து கீழ்க்கண்ட விதியை அமைக்கச் செய்யலாம்.

1. எ, யா, ஆ, ஓ, ஏ இவை ஐந்தும் வினு எழுத்துக்கள்.
2. அவற்றுள் வார்த்தையின் முதலில் வருவன: எ, யா.
3. வார்த்தையின் கடைசியில் வருவன: ஆ, ஓ.
4. வார்த்தையின் முதலிலும், கடைசியிலும் வருவது: ஏ.

இதன்பின் இவ்விதியை நன்னூலில் எவ்விதம் சூத்திரமாகச் செய்யப்பட்டிருக்கிறது எனக் காணச் செய்யலாம்.

(ந. சூ.) "எ, யா முதலும் ஆ, ஓ, ஈற்றும்
ஏ இருவழியும் வினு ஆகும்மே"

என்று விளக்கிய பின்னர் வினு எழுத்துக்களைக் கண்டுபிடிக்கும் பயிற்சி கொடுக்கலாம். இவ்வாறே எடுத்துக்காட்டுகளைக்கொண்டும் படிப்பிலும் செய்யுள் முதலிய பாடங்கள் நடத்தும்போதும் இடையிடையே இலக்கண விதிகளைக் கூறி பிழையற எழுதவும் படிக்கவும் பேசவும் செய்வதே புதிய விதி வரு முறையாகும்.

## இலக்கணத்தில் "வினைச்சொல்" என்னும் பொருள்பற்றி 5ஆம் வகுப்பிற்குக் கற்பிக்க மாதிரி பாடக்குறிப்பு:

எடுத்துக்காட்டு:

வகுப்பு: 5ஆம் வகுப்பு. காலம்: 40 மணித்துளிகள்.

பாடம்: வினைச்சொல், காலம். துணைக்கருவிகள்:

நோக்கம்: வினைச்சொற்களில் கால வேறுபாடுகளை உணரச் செய்தல்.

1. முன்னறிவைச் சோதித்தல்:

(அ) வினைச்சொற்களுக்குச் சில எடுத்துக்காட்டுகளை மாணுக்கரிடமிருந்து வருவித்தல். (ஆ) பாடப் புத்தகத்தில் சில வினைச்சொற்களைக் கண்டறிதல். (இ) வினைகள் தொழிலையும் காலத்தையும் காட்டும் என்பதை வருவித்தல்.

2. பாட வளர்ச்சி :

அடியிற்கண்ட சொற்றொடர்களைக் கரும்பலகையில் எழுதி ஒருசில மாணுக்கர்களைப் படிக்கச் செய்தல்.

எடுத்துக்காட்டு : இப்பொழுது பேனாவை எடுக்கிறேன்.
காலையில் பேனாவை எடுத்தேன்.
மாலையில் பேனாவை எடுப்பேன்.

இவற்றைப்போல பல சொற்றொடர்கள் கூறச் செய்யலாம்.

(அ) எடுக்கிறேன், எடுத்தேன், எடுப்பேன் என்னும் வினைச் சொற்கள் தொழிலைத் தெரிவிப்பதோடு, தொழில் நடக்கும் காலங்களையும் தெரிவிக்கின்றன என்று கூறி, வினைச்சொற் களுக்குக் காலம் உண்டு என்பதை விளக்கல்.

(ஆ) மூன்று காலங்கள் : (1) எடுத்தேன் - சென்றகாலம்; அதாவது கடந்தகாலம்—இறந்தகாலம் என்பர். (2) எடுக்கிறேன்— நடக்கிற காலம்—நிகழ்காலம் என்பர். (3) எடுப்பேன் - நடக்கப் போகும் காலம், அதாவது வருங்காலம்—எதிர்காலம் என்பர் என்பதை விளக்கல்.

3. பாட முடிவு :

ஒவ்வொரு காலத்தையும் குறிக்கும் ஒரு சில சொற்றொடர் களைக் கூறும்படி செய்தல்.

கரும்பலகைச் சுருக்கம் :

பயிற்சி வினுக்கள் அளித்தல். அடுத்தநாள் வரும்போது பாடப்புத்தகத்திலிருந்து ஆறு வினைச்சொற்களை எடுத்து எழுதி அவற்றின் காலங்களையும் மாற்றி எழுதி வரும்படி வீட்டு வேலை யாகக் கொடுத்தல்.

பயிற்சி வினுக்கள்

1. மொழி வளர்ச்சியில் இலக்கணத்தின் இடத்தை ஆராய்க.
2. இலக்கணத்தால் விளையும் நன்மைகள் யாவை ?
3. பள்ளிகளில் இலக்கணம் வெறுக்கப்படுவதன் காரணத்தை ஆராய்க.
4. இலக்கணம் கற்பிக்கும் பழைய புதிய முறைகளை விவரி.
5. மாணுக்கர்களுக்கு இலக்கணத்தை விதிவரும் முறையில் கற்பிக்கும் பாடக் குறிப்பொன்று தயார்செய்க.

# எட்டாம் பிரிவு - கையெழுத்து

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

—திருக்குறள்

குழந்தைகள் பள்ளியிற் சேருமுன்னர் பல சொற்களின் அறிவும், பொருள்களின் அறிவும் கைவரப்பெற்று, பள்ளியில் சேர்ந்த பின்னர் வாய்மொழிப் பயிற்சியினாலும், படித்தலினாலும் அவ்வறிவு மேலும் வளம்பெற அதை எழுதவேண்டும் என்னும் அவாவும், இன்றியமையாமையும் ஏற்படுகின்றன. ஒருவர் தம் கருத்தை வேற்றிடங்களிலிருக்கும் பிறருக்குத் தெரிவிக்க வேண்டின் அதை எழுதி அனுப்பவும், உற்றார் உறவினர்க்குக் கடிதம் எழுதவும், தாம் கற்றறிந்த பொருள்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், சிறந்த அறிஞர்களும் புலவர்களும் தங்களது எண்ணங்களையும், தாம் துய்த்து இன்புற்றவைகளையும் கவிதை, கட்டுரைகள், நாடகங்கள், கதைகள் போன்றவை வாயிலாகப் பின்வருவோர் படிக்குமாறு வெளியிடவும் எழுத்து இன்றியமை யாததாகிறது. ஒரு மொழியிலுள்ள ஒலிகளை வரிவடிவமாக அமைப்பது எழுத்தாகும். இந்த எழுத்து உருவங்களை அமைக்கப் பழகுவது கையெழுத்து எனப்படும்.

## எழுத்தைப் பயிற்றுவதற்குமுன் மேற்கொள்ளத்தக்க முயற்சிகள் :

1. எழுதுவதற்கு முன்னே அதற்குரிய பொருளறிவும், சொல்லறிவும் வேண்டும். அதனால் முதலில் பேச்சும், படிப்பும், பின்னர் எழுத்தும் வருவது முறையாகும்.

2. எழுதுவதற்கான உறுப்புகளையும் கருவிகளையும் கை, முன்கை, மணிக்கட்டு, விரல்கள், தசைநார்கள் இவைகளை இயக்கும் நிலையும், எழுதுகோல்கள், கற்பலகை முதலியவற்றை அடக்கி ஆளும் பயிற்சியும் ஒரு சிறிது கைவந்த பிறகே எழுத்துப் பயிற்சி அளிக்கவேண்டும்.

3. எழுதுவதற்கு முற்பழக்கமாக சீமைச் சுண்ணம்புக் கட்டியினால் கரும்பலகையில் தமக்குப் பிரியமான வடிவங்களை

வரையவும் கிறுக்கவும் செய்யலாம். முதல் வகுப்புப் பிள்ளைகளுக்கு இப்பயிற்சிக்கென வகுப்பறையில் அவர்களுக்கு எட்டக்கூடிய உயரத்தில் சுவர்க் கரும்பலகைகள் அமைத்தல் நலம். மணலிற் கைவிரல் படாமல் குச்சியால் கிறுக்கவும் உருவங்கள் வரையவும் பழக்கலாம்.

4. விதைகள், புளியங்கொட்டைகள் முதலியவற்றால் விரும்பிய உருவங்கள் அமைக்கச் செய்யலாம். குச்சிகளைக் கொண்டு எழுத்து அமைக்கச் செய்யலாம்.

எடுத்துக்காட்டு :

படம். 

5. வட்டங்கள், வளைவுகள், நேர், படுக்கைக் கோடுகள் வரைய மாண்டிசோரி முறையை மேற்கொள்ளலாம்.

எடுத்துக்காட்டு :



6. எழுத்துக்களை உப்புத் தாளினாலும், தடித்த பட்டினாலும் வெட்டி அட்டைகளில் ஒட்டி அவற்றின்மேல் குழந்தைகளை விரல்கொண்டு விளம்பச் செய்யலாம். உச்சரித்துக்கொண்டே எழுதச் செய்யலாம். அகர வரிசையைச் சிலர் ஆனா—ஆவேனா—ஈனா—ஈயேனா என்று உச்சரிப்பர். அதை நீக்க மாத்திரை அளவைக் குறித்து ஆசிரியர் சரியாய் உச்சரித்துக் காட்ட வேண்டும்.

எடுத்துக்காட்டு :

அ இ உ எ ஒ

7. மேற்கண்டவாறு ஒரு சிறிது பழக்கம் எய்தியபின்னர் கரும்பலகையில் ஆசிரியர் சற்று மங்கலாக எழுதிக் குழந்தையை அவற்றின்மீது குச்சிகொண்டோ, சீமைச்சுண்ணாம்புக்கட்டி கொண்டோ விளம்பும்படி செய்யவேண்டும்.

8. எழுத்துக்களின் உருவ ஒற்றுமைபற்றி அவற்றைக் கீழ்க்கண்ட வகைகளாகப் பிரித்துக்கொண்டு பயிற்சி அளிக்கலாம் என்பர். (1) ட, ப, ம, ய, ழ. (2) ஈ, ர, ந, ங, ஐ, க,ச, த. (3) எ, ஏ, ஞ, ஒ, ஓ, ஔ. (4) ள, வ, ல, ன, ண. (5) அ, ஆ, இ, உ, ஊ.

9. சரியாய் உட்காரும் நிலையை எழுத்தில் கவனித்தல்: உட்காரும்போது முதலிலிருந்தே சரியாய் மாணுக்கர்களை உட்காரும்படி பழக்கவேண்டும். கோணலாகச் சாய்ந்துகொண்டு இயல்புக்கு மாருக உட்காருதல் கூடாது. எழுதுகோலைப் பிடிக்கும் முறை கவனிக்கப்படவேண்டும். மிகவும் அருகில் அல்லது எட்டி, மிகவும் இளகி அல்லது இறுகிப் பிடித்தல் கூடாது எழுதுகோலை நடுவிரலில் வைத்து ஆள்காட்டி விரலிலும், கட்டை விரலிலும் பிடித்துக்கொண்டு, கற்பலகையை இடக் கையால் பிடித்துச் சற்று இடப்புறம் சாய்த்து எழுதுதல் நலம். சாய்வு மேசைமீது வைத்து எழுதுதல் மிகவும் சிறப்புடைத்து. எழுதும்போது நாக்கை நீட்டிப் பல்லால் கடித்துக்கொண்டிருத்தல், உதட்டைப் பிதுக்குதல், கையால் தலையைத் தாங்கிக்கொண்டிருத்தல், தலையைச் சொரிதல் முதலிய கெட்ட பழக்கங்களின்றி, கண்ணுக்கும் எழுதும் தாள், பலகை முதலியவற்றிற்கும் இடைப்பட்ட தூரம் சுமார் ஒரு அடி இருக்கும்படி வைத்துக்கொண்டு எழுதப் பழக்கவேண்டும்.

**நல்ல கையெழுத்தின் தன்மைகள் :**

கையெழுத்தை இக்காலத்தில் சரியாய்க் கவனிப்பாரில்லை. நன்ருகக் கற்றறிந்த பேரறிஞர்களில்கூட, சிலர் எழுத்து நன்ருயிருப்பதில்லை. இளமையில் திருந்திய கையெழுத்து அமையாததே இதற்குக் காரணம். மூன்று வகுப்புகளுக்குள் (எட்டு வயதிற்குள்) நாவும் கையும் திருத்தம் பெருவிடில் பிறகுத் திருத்துவது கடினம். நல்ல கையெழுத்தின் தன்மைகள் தெளிவு, விரைவு, அளவும் அழகும் என மூன்ரும்.

1. தெளிவு (Legibility) நாம் எழுதுவது பிறர் அதைப் படித்துப் பொருளுணர்ந்துகொள்வதற்காகையால், பிறருக்கு விளங்கும்படி தெளிவாய் எழுதுவதே முதற்கண் கவனிக்கற்

பாலது. தமிழெழுத்துக்கள் விளக்கமாயும் தெளிவாயும் இருப்பதற்கு அவைகளைத் தனித்தனியாய் எழுதவேண்டும். இதுவே தெளிவையும் தோற்றப் பொலிவையும் தருவதோடு, தமிழ் முறையும் மரபுமாகும். எழுத்துக்கள் கிறுக்கியதுபோலில்லாமல் முத்துமுத்தாகவும், உருவங்கள் சரியாகவும், உயிர், மெய், உயிர் மெய்யெழுத்துக்களின் கூர்மை, கீழ்வளைவு, மேல்வளைவு, கீழ் விலங்கு, மேல்விலங்கு, இடைவெளியை ஒரே அளவாக விடுதல், நிறுத்துக் குறிகளைச் சரியாய் எழுதுதல்போன்றவை கவனிக்கப் படல் வேண்டும்.

2. விரைவு (Speed) காலம் சுழன்றுகொண்டு விரைவாய்ப் போகின்றது. ஆகையால் எதையும் விரைந்து செய்துமுடிக்க முயல்வதுபோலவே எழுத்தையும் விரைவாய் எழுதவேண்டும். மாணவர்களை 'எழுது' என்று கட்டளையிட்டவுடன் எழுதத் தொடங்கச் செய்து, 'நிறுத்து' என்றதும் நிறுத்தச் செய்து, அக்கால அளவைக் கணக்கிட்டு விரைவை அதிகரிக்கச் செய்ய லாம். மூன்றும் வகுப்பில் நிமிடத்திற்கு 30 எழுத்துக்களும், நான்காவதில் 40 எழுத்துக்களும், ஐந்தாவதில் 60 எழுத்துக் களும் பெரியோர் 100 எழுத்துக்களும் எழுதும் எழுத்துவன்மை பெற்றிருத்தல் வேண்டும்.

3. அளவும் அழகும் (Alignment and beauty): எழுத் துக்களின் உருவங்கள் சரியாய் இருப்பதோடு, அவைகள் மேலும் கீழும் தொடும் இடங்களும் மேல்விலங்கு கீழ்விலங்கு களும் ஒரே அளவாய் இருக்கவேண்டும்; எழுத்துக்களின் உருவ அளவும் ஒன்றாயிருத்தல் வேண்டும். சொற்களில் எழுத்துக்கும் எழுத்துக்கும், சொல்லுக்கும் சொல்லுக்கும், வரிக்கும் வரிக்கும் விடும் இடைவெளியளவு ஒரே அளவாகவும் வரி கோணாமலும் இருந்தால் எழுத்து பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.

**கையெழுத்து நன்கு அமைவதற்குரிய பயிற்சிகள்:**

1. தமிழ்ப் பாடத்தில் மட்டுமன்றி, ஏனைய பாடங்களிலும் கையெழுத்தின் தெளிவு, விரைவு, அழகு முதலியவற்றை வற்புறுத்தல்.

2. அழகாயிருக்கவேண்டுமென்று அதற்கென்று எண்ணி எழுதாமல், பொதுவாக எப்பொழுதும் இயல்பாக எழுத்தில் அழகுடனே எழுதப் பயிற்சிக்கவேண்டும்.

3. நல்ல செய்யுள், உரைநடைப் பகுதிகளிலிருந்து பார்த்தெழுதிக் கொண்டுவரச் செய்தல்.

4. சிற்சில சமயங்களில் சொல்லுவதெழுதுதல்.

5. பார்த்ததன்படி அழகாகவும் பிழையின்றியும் எழுதுதல்.

6. மாணுக்கர்கள் எழுதும் எழுத்தின் குறைகளை அவர்களைக்கொண்டே திருத்துதல். மிகக் கேடாக எழுதுவார்க்குத் தனியாக எழுத்துவேலையளித்தல்.

7. விடைத்தாள்கள் திருத்துவதில் எழுத்தின் அழகிற்குத் தனி மதிப்பெண்களை ஒதுக்கிவைத்தல்.

பார்த்தெழுதுதலினுல் ஏற்படும் நன்மைகள் :

**பார்த்து எழுதுதல்:** குழந்தைகள் எதைப் பார்த்தாலும், அதன்படியே பார்த்து எழுத விரும்புகின்றனர். இரண்டாம் வகுப்பு முதலே பார்த்து எழுதுதலைத் தொடங்கலாம். இதனுல் பல நன்மைகள் ஏற்படுகின்றன.

1. கையெழுத்து திருத்தமாய் அமைவதற்கு ஒரு நல்ல வழியாகும்.

2. தெளிவாயும், வேகமாயும் எழுதுவதற்கு ஒரு தூண்டுகோல் ஆகும்.

3. உற்றுநோக்கும் பழக்கத்தையும் ஆற்றலையும் தந்து உள்ளத்துள் விளக்கமுற்று அமையும்.

4. நல்ல சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள், அரிய சொல்லாட்சிகள் முதலியன பார்த்தெழுதுவதால் மாணுக்கர்களின் பழக்கத்தில் வருவதோடு, இவைகள் வழங்கும் முறைகளும் இடங்களும் மனத்திற் பதிய இடமுண்டு.

5. கவனக் குறைவாயிருக்கும் மாணுக்கர்களுக்கு கவனத்தை இஃது ஊட்டவல்லது.

6. எழுதும், பேசும் மொழியில் ஒவ்வொரு சொல்லும் பொருள் கருதியே வைக்கப்பட்டுள்ளது என்ற எண்ணமும்,

ஏற்ற இடங்களில் நிறுத்திப் பேசுவதும், நிறுத்துக் குறிகளோடு எழுதுவதும் பொருளுணர் பயன் கருதியேயாம் என்னும் எண்ணமும் மனத்திற் படியும்.

7. தமிழ் வகுப்புகளில் மட்டுமன்றித் தாய்மொழி மூலம் கற்பிக்கப்படும் பிற பாடங்களிலும் நிகழக்கூடிய பிழைகளை இப் பயிற்சியால் நீக்கலாம்.

8. புதிய சொற்களின் எழுத்துக் கூட்டலுக்கும், பழைய சொற்களின் எழுத்துக்கூட்டலை நிலைபெறும்படி செய்வதற்கும் இஃது உதவும்.

9. பத்துத் தடவைகள் படித்தலினும் ஒரு தடவை எழுதுதல் மேன்மையுடைத்து ஆகும்.

இதை நடத்தும் முறை: (அ) கீழ் வகுப்புகளில் (முதல் வகுப்பு முதலே) நடந்த பகுதிகளையே பார்த்தெழுதச் செய்தல். (ஆ) நல்ல நடையும் பொருளும் பதிந்த பகுதிகளைப் பொறுக்கி எடுத்தல். (இ) மேல் வகுப்புகளில் நெட்டுருச் செய்யத்தக்க உரைநடை, செய்யுட் பகுதிகளைப் பார்த்து எழுதச் செய்தல். (ஈ) சொல்லிக்கொண்டே எழுதச் செய்தல். (உ) பிழைகளிருப் பின் திருத்தச் செய்தல், திருத்துதல். (ஊ) எழுத்து அமைப்பு, சொல்லுக்குச் சொல் இடம் விட்டு எழுதுதல்; நிறுத்துக்குறிகள், வரி அமைப்பு இவைகளை ஆசிரியரே மாதிரியாகக் கரும்பல கையில் எழுதிக் காட்டுதல் முதலியனவாகும்.

### சொல்லுவதெழுதுதலினால் ஏற்படும் நன்மைகள் :

1. பேசும் மொழி விரைவாகவும் சரியாகவும் பொரு ளுணர்ந்துகொள்வதற்கு உதவுகிறது.

2. ஆசிரியர் தம் மாணக்கர்களுக்குக் கற்பித்த உச்சரிப்பை அவர்கள் சரிவரப் பின்பற்றி வருகிறார்களா என்பதைத் தேறவும் இஃது ஒரு வழியாகும்.

3. தனியாகப் படிப்பதை நினைவில் வைத்துக்கொள்வ தினும், கேட்டு எழுதுவதை உள்ளத்திற் பதியவைக்கும் பழக்கம் வளர இதில் இடமேற்படுகிறது.

## பொதுவாக மாணுக்கர்களிடையே ஏற்படும் எழுத்துப் பிழைகளை நீக்கும் வழிகள் :

மக்களிடையே நிகழும் பிழைகளில் எழுத்துப் பிழையும் ஒன்ருகும். எழுத்துப் பிழை மல்கி இருந்தால் அழகு குறைவதோடு சிற்சில சமயங்களில் முற்றிலும் மாறுபாடுள்ளதும், எவரும் எதிர்பாராததுமான பொருளைக் கொடுக்கினும் கொடுக்கலாம். (எடுத்துக்காட்டு: "கல்வி" "கலவி", "மன்னர்" "மண்ணர்", "அறிந்தோர்" "அரிந்தோர்", "கோருகிறேன்" "கோறுகிறேன்" போன்றவைகள்) உச்சரிப்பு சரியாய் இல்லாவிட்டாலும், உச்சரிப்புக்கு ஏற்ற எழுத்து இல்லாவிட்டாலும் எழுத்துப் பிழைகள் ஏற்படும். இளமையிலிருந்தே தமிழ் ஒலிகளின் தவருன உச்சரிப்பும், கொச்சை மொழிகளைப் பேசுதலும் திருத்தப் படல் வேண்டும். செந்தமிழும் நாப்பழக்கமன்ருே ?

எழுத்துப் பிழை நீக்கும் சில வழிகள் :

1. ரகர, றகர ; லகர, ழகர, ளகர ; நகர, னகர, ணகரங்கள் பயிலும் சொற்களை அடுத்தடுத்து எழுதி அவற்றின் பொருள் வேற்றுமையைக் காணுமாறு செய்தல்.

2. ன, ண, ந ; ர, ற ; ல, ள, ழ என்ற ஒலிகளை உச்சரிக்கும்போது இருக்கும் நாவின் நிலைகளைப் படங்களின் வாயிலாக உணர்த்தலாம். (59, 60, 61ஆம் பக்கங்களிலுள்ள படங்களைக் காண்க.)

3. நகர, னகர, ணகரங்கள் அவற்றின் இனவெழுத்துக்களாகிய தகர, றகர, டகரங்களோடுதான் முறையே சேர்ந்து வரும் என்பதை உணர்த்தல்.

(எ-டு) : அந்த, சென்ற, கண்ட.

4. எழுத்துக்கூட்டிப் பழகி, சொற்பிழை, எழுத்துப் பிழைகளைப் போக்கப் பயிற்சித்தல்.

5. எழுத்துக்கூட்டலில் பொதுவாகப் பிழை நிகழக்கூடிய சொற்களை ஆசிரியர் தொகுத்து வைத்துக்கொண்டு, அச்சொற்கள் வரும்போது அவற்றின் பொருளாட்சியை வற்புறுத்திக் காட்டல்.

எடுத்துக்காட்டு :

| சொற் பிழை | | எழுத்துப் பிழை | |
|---|---|---|---|
| பிழை — திருத்தம் | | பிழை — திருத்தம் | |
| அதுகள் — அவைகள் | | காச்சல் — காய்ச்சல் | |
| ஆப்பை — அகப்பை | | நிலமை — நிலைமை | |
| ஒத்தடம் — ஒற்றடம் | | பாவக்காய் — பாவற்காய் | |
| சம்மந்தம் — சம்பந்தம் | | வெத்திலை — வெற்றிலை | |
| சிலவு — செலவு | | ரொம்ப — நிரப்ப | |

### ரகர, றகர வேறுபாடு

அரம் = ஒரு கருவி — அறம் = ஈகை
இரங்கு = மனமுருகு — இறங்கு = கீழிறங்கு
எரி = தீ — எறி = வீசு
குரு = ஆசிரியர் — குறு = குட்டை

### ணகர, னகர வேறுபாடு

ஆணை = கட்டளை — ஆனை = யானை
தண்மை = குளிர்ச்சி — தன்மை = குணம்
வண்மை = கொடை — வன்மை = வலிமை

### லகர, ளகர, ழகர வேற்றுமை

இலை = தழை — இளை = மெலி — இழை = ஆபரணம்
உலை = நீருலை — உளை = சேறு — உழை = பக்கம்
வலி = வலிமை — வளி = காற்று — வழி = பாதை

6. ஆசிரியர்களின் உச்சரிப்பு பிழையற்றும், தெளிவு பெற்றும் இருத்தலோடு, மாணாக்கர்களுக்கு முதலிலேயே சொற்களுக்குச் சரியான எழுத்துக்கூட்டறிவு அமையும்படி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

7. பிழையற எழுதச் சொற்களின் உருவம் மிகத் தெளிவாய் மனத்திற் பதியும்படி முழுச் சொற்பயிற்சியும், காட்சிப் புலனுக்கும், செவிப்புலனுக்கும் பயிற்சி அளித்தல்.

எடுத்துக்காட்டு :

ொ ஒற்றைக்கொம்பு ா கால்

ே இரட்டைக்கொம்பு ல, ண, கி, கீ

இவைகளை எப்படி எழுதத் தொடங்குவது என்பதை ஆசிரியர் பழக்கவேண்டும்.

ஒ, ரு, ஞ, ஃ, ஓ

என்று எழுதுவதைத் தொடக்கத்திலேயே சரிப்படுத்தவேண்டும்.

8. சொற்களின் உறுப்பிலக்கண அறிவும், புணர்ச்சி விதிகளின் அறிவும் மாணாக்கர்பால் அமைய பயிற்சியளித்தல்.

9. புதுச் சொற்களின் எழுத்துக்கூட்டறிவுக்குப் பார்த்து எழுதும் பயிற்சியும், சொல்வதெழுதுதல் பயிற்சியும் மிகமிக வற்புறுத்தப்படவேண்டும்.

10. பாடத்திலுள்ள அருஞ்சொற்களைக் கண்ணால் பார்த்து ஆசிரியர் உச்சரித்து எழுத்துக்கூட்டுவதைக் காதாற் கேட்டுப் பின் எழுதப் பயிற்சியும், மாணாக்கர்கள் எழுத்துக்கூட்டிச் சொல்லப் பயிற்சியும் அளித்தல் வேண்டும்.

### பயிற்சி வினாக்கள்

1. எழுத்தைப் பயிற்றுவதற்குமுன் மேற்கொள்ளத்தக்க சில முயற்சிகளை வரைக.
2. நல்ல கையெழுத்தின் தன்மைகளையும், அதைப் பயிற்சிக்கும் முறைகளையும் வரைக.
3. பார்த்தெழுதுதலினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
4. சொல்லுவதெழுதுதலினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
5. பொதுவாக மாணாக்கர்களிடம் ஏற்படும் எழுத்துப் பிழைகளை நீக்கும் வழிவகைகளை விவரித்தெழுதுக.

# ஒன்பதாம் பிரிவு - கட்டுரை

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"
—பாரதியார்

இயற்கையின் படைப்பில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்தாலும், மனித இனம் ஒன்றுதான் தன் மனத்திற் தோன்றும் எண்ணங்களைத் தெளிவாய் பிறர் அறிய வெளியிடும் திறனைப் பெற்று உயர்ந்துள்ளதெனலாம். மொழியறிவைப் பொறுத்த வரையில் முதலில் பேச்சு வாயிலாகவும், பின் தன் எண்ணங்களை நேரில் அறியாதாரும் அறிந்துகொள்ள வேண்டுமாயின் எழுத்தின் மூலமும் கருத்துக்களை வெளியிடவேண்டியிருக்கிறது. எழுதிவைக்கும் பழக்கம் இல்லையேல் சிறந்த புலவர் பெருமக்களின் செய்யுட்கள், நாடகங்கள், கட்டுரைகள், காவியங்கள் முதலிய அறிவுச் செல்வங்கள் இன்று நம்மிடையே உலவ இயலாது. ஆகையால் இவ்வெழுதும் பயிற்சியை இளமை முதலே பள்ளியிற் தொடங்கவேண்டுவது அவசியமாகிறது.

கட்டுரை எழுதும்போது கருத்தை ஒழுங்காக முறைப்படுத்தியும், குறித்த காலத்திலும், குறித்த அளவிலும், இலக்கண வரம்பிற்குட்பட்டும், சொற்றொடர் ஒழுங்கு, பத்தி ஒழுங்கு, கட்டுரை ஒழுங்கு முதலியவைகளைப் பின்பற்றியே எழுதுகின்றோம். ஆகவே, பேச்சில் வேண்டுமளவு விரித்துக்கொள்வது போலன்றி நினைத்த பொருளைக் குறித்த அளவில் பிழையின்றி இனிய, எளிய, தூய செந்தமிழ் நடையில மாணவர்களை எழுதப் பயில்விப்பதே கட்டுரையின் நோக்கமாகும். சுருக்கமாக அதனால் கீழ்க்கண்ட நன்மைகள் ஏற்படுகின்றன :

1. கருத்துக்களைத் தெளிவாகச் சொற்கள் வாயிலாக வெளியிடப் பழக்கம் அளித்தல். 2. பிற்கால வாழ்க்கையில் சிறந்த எழுத்தாளராக்குதல். 3. பிற்காலத்தில் சிறந்த வாக்குவன்மை படைத்த பேச்சாளராக்குதல். 4. கற்பனைத்திறன் அமையச் செய்தல். 5. சொல்லறிவைப் பெருக்குதல். 6. சொற்றொடர்

அமைப்பு நுட்பங்கள் விளங்கும்படிச் செய்தல். 7. கருத்துக்களைத் தெளிவாகவும் ஒழுங்குபடவும் பிறருக்கு எடுத்துக்கூற திறன் அளித்தல். 8 மொழிநடை திறம்பட அமையும்படிச் செய்தல். 9. தானே தன்னம்பிக்கையுடன் ஆராயும் தன்மை விருத்தியாகும்படியும் செய்தல். இக்காரணங்களால் கட்டுரை எழுதுதல் அவசியம்.

**கீழ் வகுப்புகளில் மேற்கொள்ளத்தக்க கட்டுரைப் பகுதிகள் :**

கீழ்வகுப்புகளில் கட்டுரைப் பயிற்சியைப் பெரும்பாலும் **சொற்றொடராக்கப் பயிற்சி** எனக் கூறலாம். அவை பின்வருமாறு :

(1) கோடிட்ட இடங்களை நிரப்புதல். (2) வார்த்தைகளை சொற்றொடர்களில் அமைத்தல். (3) வினாக்கட்கு விடை எழுதுதல். (4) வார்த்தைகளை ஏற்றபடி மாற்றிச் சொற்றொடர் அமைத்தல். (5) ஏதேனும் ஒரு பொருளைப்பற்றிச் சில சொற்றொடர்களை எழுதச் செய்தல். (6) படங்களைக் கொடுத்து அவற்றிலுள்ள பொருள்களின் பெயரை எழுதச் செய்தல் அல்லது அப்படத்தால் அறிவனவற்றைப்பற்றிச் சில சொற்றொடர்கள் எழுதச் செய்தல்.

**மேல்வகுப்பில் சொற்றொடராக்கப் பயிற்சிகள் :**

மேல் வகுப்புகளில் சொற்றொடராக்கப் பயிற்சிகள் என்பன பெரும்பாலும் **சொற்றொடர் அமைப்புப் பயிற்சிகளே**. அவை பின் வருமாறு :

1. சாதாரண சொற்றொடர்களை வினாக்களாக மாற்றுதல்; வினாக்களைச் சாதாரண சொற்றொடர்களாக மாற்றுதல்.
2. எதிர்மறையை உடன்பாட்டுச் சொற்றொடர்களாகவும், உடன்பாட்டுச் சொற்றொடர்களை எதிர்மறையாகவும் மாற்றுதல்.
3. செய்வினையைச் செயப்பாட்டு வினையாகவும், செயப்பாட்டு வினையைச் செய்வினையாகவும் மாற்றுதல்.
4. நேர்கூற்றுச் சொற்றொடர்களை அயற்கூற்றுச் சொற்றொடர்களாகவும், அயற்கூற்றுச் சொற்றொடர்களை நேர்கூற்றுச் சொற்றொடர்களாகவும் மாற்றுதல்.
5. தன்மை, முன்னிலை, படர்க்கை அமைப்புக்களை மாற்றியமைத்துச் சொற்றொடர்களை உண்டாக்குதல்.

**கட்டுரை எழுதுதலில் மேற்கொள்ளத்தக்க முறைகள் :**

1. நடை திருந்தியதாய் அமையவேண்டும். சிறந்த எழுத்தாளர்களுடைய நடையைப் பின்பற்றலாம். ஆனால், தமக்கென ஒரு நல்ல நடை ஏற்படுத்திக்கொள்வது நலம்.

2. கருத்து தெளிவாய் அமையவேண்டும்.

3. ஆழ்ந்த கருத்துக்கள் அமையுமாறு எழுதவேண்டும்.

4. சுருங்கச் சொல்லி விளங்கவைக்க வேண்டும்.

5. ஓசை நயம் ஏற்படுமாறு எதுகை, மோனை முதலிய தொடைகளை அளவறிந்து மேற்கொள்ள வேண்டும்.

6. செய்யுட் பகுதிகள் அல்லது வாய்மொழிகள் இவற்றை ஆங்காங்கே சொல்லுக்குறுதியாய்ப் பொருத்துதல் வேண்டும்.

7. பழமொழிகளையும், உவமைகளையும் ஆங்காங்குக் கையாளுதல் நலமாகும்.

8. சென்று தேய்ந்து இறுதலாகிய குற்றம் நேரலாகாது.

9. குன்றக்கூறல், மிகைபடக்கூறல் ஏற்படலாகாது.

10. பொருட்கோவை ஒழுங்காக அமைந்திருக்கவேண்டும்.

11. கருத்துக்களுக்கு ஏற்ப பத்தி பிரித்து எழுதவேண்டும்.

12. கையெழுத்து தெளிவாய் இருக்கவேண்டும்.

13. தொடக்கம், முடிவு இவை பொருத்தமாகவும் தக்க அளவிலும் அமைந்திருக்க வேண்டும்.

14. பிழை திருத்துவதற்குச் சாதகமாக வரிகளின் இடையில் போதுமான இடம் வேண்டும். மார்ஜின் போதுமான அளவு இருக்கவேண்டும். ஆசிரியர்கள் கட்டுரைகளைத் திருத்தும்போது மேற்கண்ட அம்சங்கள் சிறந்த முறையில் அமைந்துள்ளனவா என்பதை ஆராய்ந்து, குறையிருப்பின் திருத்தம் பெற வழிவகைகளை ஏற்படுத்தித்தருதல் வேண்டும்.

**கட்டுரைகளின் வகைகள் :**

1. **கதைக் கட்டுரை :** சிறு வகுப்புகளில் முதல் முதல் கொடுக்கத்தக்க கட்டுரை வகை இதுவாம். இதில் படிப்படியாகச் செல்லும் நிலைகள் உண்டு. அவையாவன :

(அ) கதையைச் சுருக்கி எழுதுதல்.
(ஆ) கதையைப் பெருக்கி எழுதுதல்.
(இ) கொடுத்த குறிப்புக்களைக்கொண்டு கதை எழுதுதல்.
(ஈ) பாதி எழுதப்பட்ட கதையை முடித்தல்.
(உ) தாமாகக் கற்பனைக் கதை எழுதுதல்.

2. வாழ்க்கைக் கட்டுரை: பொருள்களைப்பற்றியாவது, பெரியோர்களைப்பற்றியாவது எழுதுதல் இவ்வகையாகும். இதன் நிலைகள் :

(அ) துவக்கத்தில் பொருள்களைப்பற்றியாவது, பெரியோர்களைப்பற்றியாவது சில சொற்றொடர்கள் எழுதச் செய்தல்.

(ஆ) பிறகு கருத்துக்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு முறையாக எழுதச் செய்தல்.

3. வருணனைக் கட்டுரை: சோலை, காடு, மலை, ஆறு, சூரியோதயம், சந்திரோதயம், நள்ளிரவு, நடுப்பகல், பண்டிகைகள், திருவிழாக்கள், ஊர்கள், நாடுகள் முதலியவற்றை வருணித்து எழுதுவது இவ்வகையில் அடங்கும்.

இவ்விதக் கட்டுரைகள் சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டும். கற்பனைத்திறனை வளர்க்கும். இவை மேற்வகுப்புகளிலே மேற்கொள்ளத் தக்கவை.

4. கற்பனைக் கட்டுரை: ஏதாவது ஒரு பொருளைக் குறித்துக் கற்பனையாக எழுதுவது இக்கட்டுரை. "உனக்கு நிறையப் பொருள் கிடைத்தால் நீ அதை எப்படிச் செலவு செய்வாய்?", "நீ பெரியவனானால் எப்படி உலகில் வாழ்வாய்?" என்பன போன்ற கற்பனைக் கருத்துக்களைக் குறித்து எழுதச் செய்வது இதில் அடங்கும். தன்னைப் பிறர்போல பாவித்து, அப் பிறரது நடத்தைகளை எழுதுதலும் இதில் அடங்குவதாகும். இவ்வகைக் கட்டுரைகள் மேல்வகுப்புகளுக்கே ஏற்றவை.

5. விளக்கக் கட்டுரை: ஏதாவது ஒரு செய்தியைப்பற்றி விளக்கி எழுதுவது இக்கட்டுரையாம். கடற்பிரயாணம், ஆகாய விமானப் பிரயாணம், இரயில் பிரயாணம், விடுமுறை நாட்களைக் கழித்த விதம் முதலிய கட்டுரைகளும், ஒற்றுமை, நட்பு, அன்பு,

வீரம், தியாகம், கல்வி என்பன போன்றவற்றைப்பற்றி எழுதும் கட்டுரைகளும் இதில் அடங்கும். இதுவும் மேல் வகுப்புகளுக் குரியது.

6. **விவாதக் கட்டுரை:** கத்தி பெரிதா, பேனா பெரிதா? நாட்டுக்கு யார் நன்மை செய்பவன் செலவாளியா, சிக்கனக் காரனா? போரினால் உலகிற்கு நன்மையா, தீமையா? விஞ்ஞா னத்தால் உலகிற்கு நன்மையா, தீமையா? என்பனபோன்ற விவாதங்களைக் குறித்து எழுதுவது இவ்வகையாம். இதில் ஆராய்ச்சிக்கு இடமான அம்சங்கள் இருப்பதால் இதுவும் மேல் வகுப்புகட்குரியதே.

7. **உரையாடல், நாடகம்:** முதலில் உரையாடல் எழுதும் பழக்கத்தைக் கொடுத்துப் பிறகு நாடகம் எழுதும் பழக்கத்தைக் கொடுக்கவேண்டும். நாடக பாத்திரங்களின் குணங்களுக்குத் தக்கவாறு அவர்கள் பேசும் பேச்சு அமைந்திருக்கவேண்டும். இன்னின்னார்க்கு இன்னின்ன விதமாக மரியாதை வைத்துப் பேசவேண்டும் என்னும் செய்தியும் விளக்கப்படவேண்டும். இடையிடையே சொந்தமாகச் சிறு பாடல்களையும் இயற்றச் செய்யலாம். இதுவும் சற்றுக்கடினமான வகையாகையால் மேல் வகுப்புகளுக்கே ஏற்றது.

8. **படக் கட்டுரை:** உளப் பண்பை வளர்ப்பதில் நல்ல படங்கள் ஒரு சிறந்த இடத்தைப் பெறுகின்றன. மொழிப் படிப் பில் சொற்றொடர்களின் பொருள்களை உள்ளவாறே உணர்ந்து உள்ளத்தமைப்பதற்கேற்ற பின்னணியைப் படங்கள் தருவதால் அவற்றை மிகுதியாக வழங்கவேண்டும். மேலும், ஒரு நாட்டி னுடைய வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், நிலையங்கள், தரைநூல், வரலாறு முதலியவற்றை அறியப் பலவகைப் படங்கள் மிகவும் உதவியாகின்றன. இளம் மாணவர்களின் சொற்களஞ்சியத் தைப் பெருக்கவும், சிறந்த காட்சிகளையும் அழகுணர் ஆற்றலை யும் வளர்க்கவும், கற்பனையை வளர்த்து சொற்களின் பொருளை நேருக்கு நேராக உணர்த்தவும் படக் கட்டுரை மிகவும் அவசிய மாகிறது.

## கடிதம் எழுதுதல்

கடிதம் எழுதுதலும் கட்டுரை எழுதுவதைச் சேர்ந்ததே. முதல் மூன்று வகுப்புகளில் தபால் விளையாட்டோடு இதை நிறுத்திக்கொள்ளலாம். நான்காம், ஐந்தாம் வகுப்புகளில் சில வகைக் கடிதங்கள் எழுதக் கற்பிக்கலாம்.

கடிதங்கள், **உறவின்முறையாருக்குரிய கடிதங்கள், வணிகக் கடிதங்கள், அழைப்பிதழ்கள், விண்ணப்பக் கடிதங்கள்** எனப் பல வகைப்படும். உறவின்முறையார், நண்பர் இவர்களுக்கு எழுதும் கடிதங்களும், புத்தக வியாபாரிக்குப் புத்தகம் அனுப்புமாறு எழுதுவதுபோன்ற வியாபாரக் கடிதங்களும், ஓய்வு விண்ணப்பம் போன்ற விண்ணப்பக் கடிதங்களும், பள்ளிக்கூடங்களில் நிகழும் விழா அழைப்பிதழ்க் கடிதங்களும் எழுதும் விதத்தை ஐந்தாம் வகுப்பிற்குக் கற்பிக்கலாம்.

முகவரி எழுதும் விதம், எழுதப்படுபவர் நிலைக்கேற்ற மரியாதையான தொடக்கம், மரியாதையான முடிவுரை முதலியவற்றை எழுதக் கற்பிக்கவேண்டும்.

### கடிதம் எழுதும் முறையைக் கற்பிக்கும்போது கவனத்தில் வைக்க வேண்டிய கருத்துக்கள் :

பள்ளிக்கூட வாழ்விலும், பொதுவாழ்க்கையிலும் கடிதம் எழுதுதல் முக்கியமாய் இருப்பதால், அதை நன்முறையில் பயிற்சிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. கடிதம் எழுதுதலைப் பெருவாரியாக தொழில்முறை விண்ணப்பங்கள், தனிப்பட்ட கடிதங்கள், சமுதாயக் கடிதங்கள் என முக்கூருகப் பிரிக்கலாம்.

**கீழ்க்கண்ட இயல்களை ஒரு நல்ல கடிதம் பெற்றிருக்கவேண்டும் :**

1. **இருப்பிடமும் எழுதும் நாளும் :** தனிப்பட்ட கடிதங்களிலும், சமுதாயக் கடிதங்களிலும் இவை கடிதத்தின் வலப்புற மேலும் ; தொழிற்றுறைக் கடிதங்களிலும், விண்ணப்பக் கடிதங்களிலும் இடப்புற மேலும் குறித்தல் வேண்டும்.

2. **விளி :** கடிதம் பெறுவோரைச் செய்தி எழுதத் தொடங்கு முன் விளிப்பதே விளி எனப்படும். தகுதியும் பழைமையும் உரிமையும் கருதி சமயத்திற்கேற்றவாறு அமைத்தல் வேண்டும்.

எடுத்துக்காட்டு : நண்ப !, நண்பரீர் !, நண்பர்காள் !, பேரன்புடையீர் !, அன்புடையீர் ! இவ்விளிக்குமுன்பு அன்பு வணக்கங்களைக் குறிக்கும் அடைமொழிகளையும் சேர்க்கலாம்.

3. செய்தி : கடிதம் எழுதுவோர், பெறுவோர்க்கு அறிவிக்கவேண்டிய செய்தியை இப்பகுதி கொண்டிருக்கும்.

4. முடிப்பும் கையெழுத்தும் : செய்தியின்கீழ் வலப்புறத்தில் எழுதுவோர்க்கும் பெறுவோர்க்கும் இடையில் உள்ள உறவின் முறை தொடர்புகளுக்கு ஏற்ற (தங்களின் தாழ்மையுள்ள, வணக்கமுள்ள, கீழ்ப்படிதலுள்ள, உண்மையுள்ள, அன்புள்ள) ஒரு தொடர் எழுதப்படலாம். அதற்கும்கீழ் கையெழுத்திருத்தல் வேண்டும்.

5. முகவரி : கடிதத்தின் மறுபுறத்தில் அல்லது உறையின் மேற்புறத்தில் அல்லது கடிதத்தின் இறுதியில் இடப்புறத்தில் கடிதம் பெறுவோரின் முழு முகவரியும் எழுதப்படல்வேண்டும். ஆங்கில முறையில் ஆட்பெயர், அலுவல், கதவெண், தெரு, ஊர், அஞ்சல் (தபால்) நிலையம், கூற்றம் (தாலூகா), கோட்டம் (மாவட்டம்), மாகாணம், நாடு என்னும் வரிசையில் அமையும். தமிழ்முறையில் இது தலைகீழாக அமையும். பெயர் எழுதுவதற்கு முன்பு நண்பர், திருவாளர், உயர்திருவாளர், மறைத் திருவாளர் என்றும், பெண்டிர்க்குத் திருவாட்டி, திருமதி என்றும், இரு பாலார்க்கும் "திரு." என்று சுருக்கியும், உயர்வு கருதும்போது பெயருக்குப் பின், "அவர்கள்" என்றும் குறிப்பிடலாம்.

## பயிற்சி வினாக்கள்

1. *கட்டுரை எழுதப் பயிற்சிப்பதன் நோக்கத்தை வரைக.*
2. *மேல்வகுப்புகளில் மேற்கொள்ளத்தக்க கட்டுரைப் பகுதிகளை ஆராய்க.*
3. *மேல்வகுப்புகளில் எத்தகைய கட்டுரைப் பயிற்சியளிப்பீர்?*
4. *கட்டுரை வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.*
5. *கடிதம் எழுதும் முறையைக் கற்பிக்கும்போது கவனத்தில் வைக்கும் கருத்துக்கள் யாவை?*

59029

13.10.65/C

# Puthiya Tamil Karpikkum Murai

(For T. S. L. C.—Basic & Non-Basic)

by

**Vidvan D. Dhayalasami**

Senior Tamil Pandit,

Periyar Teachers' Training School, Tiruchirapalli-1.

SCANNED

Price Rs. 2-00

Imperial Press, Tiruchirapalli-8.